(ஆ) இயல்பான பரப்பான 1482 ஏக்கரில் இருந்து ஏக்கருக்கு 6 குவிண்டால் என்ற அளவில் பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில், 1500 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு, 9,120 குவிண்டால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில், 1363 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து சுமார் 8832 குவிண்டால் பருத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

22—

**விளம்பரம் செய்தல்**

**வினா 13349—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மானியங்கள் குறித்த விவரங்களைத் தெளிவாக அனைவருக்கும் தெரியும்படி விவசாயம் சார்ந்த அலுவலகங்கள், சுவர் விளம்பரங்கள் மற்றும் விளம்பரங்கள் மூலம் விளம்பரப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மானியங்கள் குறித்த விவரங்களைத் தெளிவாக அனைவருக்கும் தெரியும்படி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் மற்றும் தாலுகா வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் மூலமாக நடவடிக்கை எடுத்து சுவரொட்டி, வானொலி மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் தெரியப்படுத்தி வருகின்றார்கள். மேலும், மக்கள் சாசனம் என்ற அரசு வெளியீட்டின் மூலம் விவசாயிகளுக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மூலம் தெரியப்படுத்திட விநியோகம் செய்யப்பட்டது. அனைத்து வேளாண்மைத் துறை களப் பணியாளர்கள் மூலம் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டு வருகிறது.



2002 ஏப்ரல் 11]

23—

**கசிவு நீர்க் குட்டை**

**வினா 13603—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், நாகமரை ஊராட்சியில் கசிவு நீர்க் குட்டைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கசிவு நீர்க்குட்டைகள் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லாததால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், நாகமரை ஊராட்சியில் கசிவு நீர்க் குட்டைகள் கட்ட இயலவில்லை.

24—

**பணி வாய்ப்பு**

**வினா 13608—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்குப் பணி வாய்ப்பு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையில் வேளாண்மைப் பொறியியல் பட்டம் பெற்றவர்களை உதவிப் பொறியாளர்

(வேளாண்மைப் பொறியியல்) ஆக பணி நியமனம் செய்யலாம். அப்பதவி தமிழ்நாடு தேர்வாணையக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் பதவி ஆகும். எனவே முறையான நேரடி நியமனம் தமிழ்நாடு தேர்வாணையம் மூலமாகச் செய்திட விதிகளில் இடமுள்ளது. மேலும் வேளாண்மைப் பொறியியல் பட்டயம் (DAE) பெற்றவர்களுக்கும் இத் துறையில் உதவி மண்வளப் பாதுகாப்பு அலுவலர் பதவி வழங்க பணிக் குழு விதிகளில் இடமுள்ளது.

(ஆ) பணியிடங்கள் காலி ஏற்படும்போது தேர்வாணையம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு உதவிப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) பணியிடம் நிரப்பப்படும்.

25—

**தென்னை மரங்கள்**

**வினா 13611—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் தென்னை வாடல் நோயால் செத்துக் கொண்டிருக்கும் தென்னை மரங்களைக் காப்பாற்ற அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் தென்னை மரங்கள் ஏதும் அதிகமாக வாடல் நோயால் பாதிக்கப்படவில்லை. ஆனால் கருத்தலைப் புழு மற்றும் ஈரியோபைட் சிலந்தி தாக்குதல்களால் 82 சதம் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான தடுப்பு முறைகள் கிராமங்கள்தோறும் வேளாண்மை உதவி அலுவலர்களால் செய்திகள் விளம்பரப்படுத்தப்பட்டும், செயல் விளக்கம் மூலமாகவும் உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



26—

**பசுமைப்பகுதி தோட்டங்கள்**

**வினா 13660—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில் தரிசு நிலங்களில் பசுமைப் பகுதி தோட்டங்களை உண்டாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை, ஆலங்குளம், மானூர், மேல்நீலிதநல்லூர் ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. எனவே, வரும் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில் உள்ள தரிசு நிலங்களில் பசுமைப் பகுதி தோட்டங்களை உண்டாக்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

27—

**தென்னை வளர்ப்புத் திட்டம்**

**வினா 13699—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அதிதீவிர தென்னை வளர்ப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்த முன்னுரிமை அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அதிதீவிர தென்னை வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

28—

## தென்னை மேம்பாட்டுத் திட்டம்

**வினா 14167—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் தென்னை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நெட்டை, குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம் உள்பட மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தென்னை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நெட்டை, நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டில் (2001-2002) திருநெல்வேலி மாவட்டத்திற்கு மொத்தம் 60,000 நெட்டைக் கன்றுகளும், 28,000 நெட்டை X குட்டை கன்றுகளும் விநியோகம் செய்யப்படுகிறன. கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தேவையான கன்றுகளை ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரை அணுகிப் பெற்றுக்கொள்ளலாம். தென்காசியில் வடகரை மற்றும் செங்கோட்டையில் தென்னை நாற்றுப் பண்ணைகள் உள்ளன. அங்கிருந்தும் தேவையான கன்றுகளை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.





29—

## எள் வித்து

**வினா 14266—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் எள் வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் 25,904 மெட்ரிக் டன் எள் விதை வேளாண்மைத் துறையால் கொள்முதல் செய்யப்பட்டது.

30—

## சூரியகாந்தி வித்து

**வினா 14267—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் சூரியகாந்தி வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் சூரியகாந்தி விதைகள் 9,188 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மைத் துறையால் கொள்முதல் செய்யப்பட்டது.

[2002 ஏப்ரல் 11

31—

### ஆமணக்கு வித்து

**வினா 14268—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் ஆமணக்கு வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் 1.652 மெட்ரிக் டன் ஆமணக்கு விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டது.

32—

### சோயா வித்து

**வினா 14269—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் சோயா வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யுப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சோயா மொச்சை சாகுபடிப் பரப்பு, ஈரோடு மாவட்டத்தில் மிகவும் குறைந்ததால், விதை உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லை. எனினும், 2000-2001ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் சோயா பயிர் 44 எக்டேர் பரப்பளவில் மட்டுமே பயிர் செய்யப்பட்டு 48 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது.



2002 ஏப்ரல் 11]

33—

### கோவை மாவட்டத்தில் ஆமணக்கு வித்து

**வினா 14271—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் ஆமணக்கு வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் ஆமணக்கு விதைகள் 1.2 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மைத் துறையால் கொள்முதல் செய்யப்பட்டது.

34—

### உற்பத்தி

**வினா 14323—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் சோயா, ஆமணக்கு மற்றும் சூரியகாந்தி வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சோயா, ஆமணக்கு மற்றும் சூரியகாந்தி வித்து பயிர்களின் விவரங்கள் பின்வருமாறு:-

*சூரியகாந்தி:* 677 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு, 4.9 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

[2002 ஏப்ரல் 11

*ஆமணக்கு:* 2528 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 1.32 டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

*சோயா:* 26 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**35—**

### எள், சோயா வித்து உற்பத்தி

**வினா 14328—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எள், சூரியகாந்தி, நிலக்கடலை, சோயா வித்துக்கள் எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி கீழ்க்கண்டவாறு:-

*நிலக்கடலை:* 97939 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 346 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

*எள்:* 8024 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 4.2. மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

*சூரியகாந்தி:* 446 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 271 கிலோ சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

*சோயா:* 171 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 11]

**36—**

### எள், நிலக்கடலை வித்து உற்பத்தி

**வினா 14333—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் எள் மற்றும் நிலக்கடலை வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் எள் மற்றும் நிலக்கடலை வித்து கீழ்க்கண்டவாறு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது:-

*நிலக்கடலை:* 94996 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 250.45 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

*எள்:* 3416 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 507 கிலோ சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**37—**

### கோவை மாவட்டத்தில் சூரியகாந்தி, எள், நிலக்கடலை வித்து உற்பத்தி

**வினா 14339—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் சூரியகாந்தி, எள், நிலக்கடலை வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது?

[2002 ஏப்ரல் 11

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்.**

கோவை மாவட்டத்தில் 2000-2001ஆம் ஆண்டில் சூரியகாந்தி, எள், நிலக்கடலை வித்துக்கள் பயிரிடப்பட்ட விவரம் பின்வருமாறு:-

*நிலக்கடலை:* 27486 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு, 847 மெட்ரிக் டன் நிலக்கடலை விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

*சூரியகாந்தி:* 153 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 8.52 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்யப் பட்டுள்ளன.

*எள்:* 382 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 1.32 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**38—**

**நெல் பயிரிடுதல் விவரம்**

**வினா 14354—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் நெல் எத்தனை ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் பயிர் முன் மதிப்பீடு விவரப்படி, 2000-2001ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 21,13,344 ஹெக்டேர் பரப்பில் நெல் பயிரிடப்பட்டது.



2002 ஏப்ரல் 11]

**39—**

**வேளாண்மை விரிவாக்க மையங்கள்**

**வினா 15242— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியிலுள்ள பழைய வேளாண்மை விரிவாக்க மையங்களைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சிக்குட்பட்ட பழைய வேளாண்மை விரிவாக்க மையங்களைப் பழுதுபார்க்க உரிய பிரேரணை (திட்ட மதிப்பீடுகளுடன்) வேளாண்மை ஆணையரிடமிருந்து வரப்பெற்றால் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) வேளாண்மை ஆணையரிடமிருந்து பிரேரணை பெறப்பட்டு அரசு அனுமதி வழங்கிய உடன் பழுது நீக்கம் செய்யப்படும்.

**40—**

**ஈரப்பத கருவி**

**வினா 15243—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு ஈரப்பதம் அறியும் கருவிகளை வழங்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஈரப்பதம் அறியும் கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மார்ச் 2002-க்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஈரப்பதம் கண்டறியும் கருவிகள் வேளாண்மை இணை இயக்குநர் வாயிலாக வழங்கப்படும்.

41—

## தார்ப்பாய் அளித்தல்

**வினா 15281—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் அமைந்துள்ள வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு தார்ப்பாய்கள் அளிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) நடப்பு நிதியாண்டில் வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு தார்ப்பாய்கள் வழங்க பகுதி-2 திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள, மேலச்சேவல் பேரூராட்சியில் அமைந்துள்ள வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு தார்ப்பாய்கள் அளித்திட வேளாண்மை ஆணையருக்குத் தெரிவிக்கப்படும்.

(ஆ) மார்ச் 2002-க்குள் வழங்க சாத்தியக்கூறு உள்ளது.



42—

## சென்னைத் துறைமுகம்

**வினா 11566—திரு. மு. கார்த்தி:-** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் இரசாயன தர மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் உபகரணங்கள் எப்போது வெளிநாட்டிலிருந்து சென்னைத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டது?

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்களின் மதிப்பீடு விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், இரசாயன தர மேம்படுத்தும் திட்டத்திற்கான உபகரணங்களை 1989 மற்றும் 1990ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்தது.

(ஆ) இந்த உபகரணங்களின் மதிப்பு ரூபாய் 8.70 கோடியாகும்.

43—

## மேக்னசைட் கற்கள்

**வினா 11571—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் சுழலும் சூளைக்கு மாதந்தோறும் தேவைப்படும் மேக்னசைட் கற்கள் எவ்வளவு? அதன் தரம் குறித்த விவரம் என்ன?

[2002 ஏப்ரல் 11

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் சுழலும் சூளைக்கு மாதந்தோறும் தேவைப்படும் மேக்னசைட் கற்களின் விவரங்கள் பின்வருமாறு:-

| சிலிகா சதவிகிதம் | மேக்னசைட் கற்கள் அளவு (டன்களில்) |
|---|---|
| 2.50 வரை | 65 |
| 2.50% — 3.50% வரை | 375 |
| 3.51% — 5.00% வரை | 600 |
| 5.01% — 6.00% வரை | 750 |
| 6.51% — 7.50% வரை | 2250 |
| 7.51% — 8.50% வரை | 2000 |
| மொத்தம் | **6040** |

44—

## கேளிக்கை வரியில் வருமானம்

**வினா 11576—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கேளிக்கை வரிச் சட்டத்தின்படி கடந்த 2000-2001ஆம் ஆண்டில் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) அதில் உள்ளாட்சித் துறைக்குப் பிரித்து அளிக்கப்பட்டது எவ்வளவு?



2002 ஏப்ரல் 11]

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் கேளிக்கை வரிச் சட்டத்தின்படி 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 318.45 இலட்சம் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.

(ஆ) மேற்படி தொகையில் ரூ. 284.55 இலட்சம் உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது.

45—

## வயர்லெஸ் வசதி

**வினா 15068—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிகவரி பறக்கும் படைக்கு வயர்லெஸ் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வணிக வரித் துறையில், சென்னை செயலாக்கப் பிரிவிலுள்ள சுற்றுக் குழுவிற்கு (பறக்கும் படை) வயர்லெஸ் கருவிகள் அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டு, கடந்த சில ஆண்டுகளாகவே பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனினும் அவற்றின் செயல்பாடு திருப்திகரமானதாக இல்லை. அக்கருவிகள் அடிக்கடி பழுதடைவதால் ஏற்படும் சிரமம் மற்றும் செலவினத்தைக் கருத்திற்கொண்டு அவற்றிற்குப் பதிலாக நடமாடும் தொலைபேசி (செல் போன்) வசதி செய்யலாமா என்பது குறித்தும் பரிசீலிக்கப்படுகிறது.

46—

## தொழிலாளர் நல நிதி

**வினா 9494—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 2000-2001ஆம் ஆண்டில் தொழிலாளர் நல நிதி பங்குத் தொகையாக அரசின் பங்குக்கு வழங்கப்பட்டது எவ்வளவு?

(ஆ) அதனால் பலனடைந்த தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 2000-2001ஆம் ஆண்டில் தொழிலாளர் நல நிதி பங்குத் தொகையாக அரசின் பங்குக்கு ரூ. 69,45,902- வழங்கப்பட்டது.

(ஆ) தொழிலாளர் நல வாரியத்தால் பலன் பெற்ற தொழிலாளர்கள் மற்றும் சார்ந்தோர் எண்ணிக்கை 6769.

47—

## உதவித் தொகை

**வினா 9497—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உயர் கல்வி பயிலுவதற்காக கடந்த 2000-2001ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு உதவித்தொகை வழங்கி உள்ளது?

(ஆ) அதன் பொருட்டு அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?



விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உயர் கல்வி பயிலுவதற்காக கடந்த 2000-2001ஆம் ஆண்டில் 432 பேருக்கு உதவித் தொகை வழங்கியுள்ளது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

(ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உயர் கல்வி பயிலுவதற்காக கடந்த 2000-2001ஆம் ஆண்டில் ரூ. 3,51,700-உதவித் தொகையாக செலவிடப்பட்டுள்ளது.

## இணைப்பு

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை-9.

2000-2001ஆம் ஆண்டில் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உயர் கல்வி பயிலுவதற்காக உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்கள்.

| வ. எண். | கல்வி | பயனடைந்தோர் எண்ணிக்கை | வழங்கப் பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| (1) | பொறியியல் பட்டக்கல்வி | 104 | 1,24,800 |
| (2) | மருத்துவப் பட்டக்கல்வி | 16 | 18,600 |
| (3) | சட்டக் கல்வி | 7 | 8,400 |
| (4) | வேளாண்மைப் பட்டக்கல்வி | 2 | 2,400 |
| (5) | பொறியியல் பட்டயக்கல்வி | 132 | 95,040 |
| (6) | மருத்துவப் பட்டயக்கல்வி | 8 | 5,760 |
| (7) | தொழிற் பயிற்சிக் கல்வி | 53 | 26,500 |
| (8) | மேல்நிலைக் கல்வி | 117 | 70,200 |
| | மொத்தம் | 439 | 3,51,700 |

48—

## ஜீவா இல்லம்

**வினா 9489—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் வழக்குகளுக்காக சென்னை வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குறைந்த வாடகையில் தங்கிச் செல்லக் கட்டப்பட்டுள்ள ஜீவா இல்லத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) அதில் 2000-2001ஆம் ஆண்டில் தங்கிச் சென்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் சென்னை, ஜீவா இல்லம் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்க படுக்கை வசதியுடன் 18-11-1998-ல் அமைக்கப்பட்டது. மேற்படி படுக்கை வசதிகள் போதவில்லையென்ற காரணத்தினால் மேலும் 12 படுக்கை வசதியுடன் கூடிய கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு 19-12-1998 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இவ்வில்லத்தில் ஒரே நேரத்தில் 62 பேர்கள் தங்க போதுமான படுக்கை வசதிகள் உள்ளன. மேலும், ஜீவா இல்லத்தை விரிவுபடுத்த தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் திட்டங்கள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) சென்னை, ஜீவா இல்லத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் மொத்தம் 9,497 பேர்கள் தங்கிச் சென்று பயனடைந்து உள்ளனர்.

49—

## மின் பற்றவைப்பு பயிற்சி நிலையம்

**வினா 13975— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் மின் பற்றவைப்பு பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திலும், இம்மாவட்டத்தில் செங்கோட்டை மற்றும் குருவிக்குளத்தில் இயங்கும் 2 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களிலும் பற்ற வைப்பவர் தொழிற்பிரிவு பயிற்றுவிக்கப்படுகிறது. இத்தொழிற்பிரிவு தொடங்க தனியார் எவரும் விண்ணப்பித்தால் தொழிற் பள்ளிகள் அடிப்படையில் அங்கீகாரம் வழங்க தகுதிக்குட்பட்டு, பரிசீலிக்கப்படும். எனவே, மின்பற்றவைப்பு பயிற்சிக்கென தனியே தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அவசியம் இல்லையென்று கருதப்படுகிறது.

50—

## துணி பொம்மைத் தயாரிப்பு

**வினா 14664—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் துணி பொம்மைத் தயாரிப்பு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பொம்மைகள் தயாரிப்பதற்கான அடிப்படை வசதிகள் இல்லாததால், இப்பயிற்சி தொழிற்பயிற்சி நிலையங்களில் அளிக்க வாய்ப்பில்லை. இது தொடர்பாக, தொழில் வணிகத் துறை மற்றும் காதி மற்றும் கிராமத்தொழில் வாரியத்தை அணுகலாம்.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2002 ஏப்ரல் 11

## 2. தகவல் கோரல்

**(அ) தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவிற்குக் கொண்டு வந்து விசாரணை செய்வது.**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்).

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவி 1991 ஆம் ஆண்டு எங்களுடைய இளைய தலைவன் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டு, அதிலே முக்கியக் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கு ஏற்கெனவே split செய்து N.B.W. எல்.டி.டி.ஈ. தலைவர் பிராபாகரன் மீது பெண்டிங்கிலே இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே, நீதிமன்றத்திலே, இதுவரை ஒளிவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த he was absconding actually - கடந்த 10 ஆண்டுகளாக தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருந்த பிரபாகரன் அவர்கள் நேற்று சர்வதேச பத்திரிகையாளர்களை எல்லாம் சந்தித்து, இலங்கை கிளிநொச்சியிலே அவர்கள் வெளிப்படையாக வந்து பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நம்முடைய தமிழகத்தில் நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய N.B.W.-வை நிறைவேற்றி அவர்கள் மீது இருக்கக்கூடிய வழக்கை நடத்தி முடிப்பதற்காக தமிழக அரசு, மத்திய அரசை வலியுறுத்தி Interpol மூலமாக அந்த பிரபாகரனை தமிழகத்தில் இருக்கக்கூடிய நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அரசுத் தரப்பிலே என்ன என்று கேட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, சொல்லுங்கள் என்ன என்று.

**(ஆ) சென்னை, பெசன்ட் நகர், பாரத ஸ்டேட் வங்கியில் நடைபெற்ற கொள்ளை.**

***திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பெசன்ட் நகரின் பேங்கிலேயிருந்து கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கிறது...



2002 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். கவன ஈர்ப்பு இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி பீட பேரவைக்கு (குறுக்கீடுகள்) இன்றைக்குக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படவில்லை. நாளைக்கு எடுத்துக்கொள்வதாக இருந்தால் நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**(இ) உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினைக்கான முன்னறிவிப்பு**

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று ஓர் உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. விளக்கத்திற்குள்ளே போக வேண்டாம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்கு 3 சட்டமன்ற உறுப்பினர்களையும், சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு உறுப்பினர்களையும்............ (குறுக்கீடுகள்) ஆய்வில் இருக்கிறது என்று சொல்லி விட்டேன். அதற்கு மேல் என்ன? (குறுக்கீடு) அதுதான் சொன்னீர்கள், ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**(ஈ) 9-4-2002 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பு நூலகத்தில் இல்லாதது**

**டாக்டர் க. பொன்முடி:** இன்று காலை நான் நூலகத்திற்குச் சென்றேன். நூலகத்திற்குச் செல்கிறபோது முதல் நாள் பூராவும் அங்கே இருப்பது வழக்கம். நேற்றைக்கு முதல்நாள் 9-ஆம் தேதி Proceedings-ஐ நூலகத்தில் கேட்டால் இதுவரை இல்லை என்று சொல்கிறார்கள். அவற்றை திருத்துவதற்காக எடுத்துச் சென்று விட்டார்களா, ஏன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் அதை விசாரித்து சொல்ல வேண்டும். 9 ஆம் தேதி நடந்த (Proceedings) இப்போது கிடைக்கவில்லை நூலகத்தில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியிருந்தால் விசாரிக்கிறேன்.

## 3. அறிவிப்பு

### சட்டப்படியான அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்கு 3 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களையும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு இரண்டு உறுப்பினர்களையும், பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு ஓர் உறுப்பினரையும், தமிழ்நாடு நில மேம்பாட்டு நிர்வாகக் குழுமத்திற்கு ஓர் உறுப்பினரையும், மாநில நூலகக் குழுமத்திற்கு ஓர் உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க வேண்டுமெனக் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய உறுப்பினர்களுடைய பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகள் ஆகும். சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினரின் பதவிக் காலம் 22-11-2002 வரையாகும். பாரதியார் பல்கலைக் கழகத்தின் உறுப்பினருடைய பதவிக் காலம் 13-9-2004 வரையாகும். தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்தின் நிர்வாகக் குழு மற்றும் மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 13-9-2004 வரையாகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும். நியமனத்தாள் வேண்டுவோர் சட்டமன்றப் பேரவைச் செயலக முதன்மைச் செயலாளர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புமனு தாக்கல் செய்யக் கடைசி நாள் 18-04-2002 பிற்பகல் 3 மணி. வேட்பு மனுக்கள் பரிசீலனை 19-04-2002 பிற்பகல் 3 மணி. வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுதல் 22-04-2002 பிற்பகல் 3 மணி. தேர்தல் நாள், தேவையிருப்பின் 24-04-2002 முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை.



## 4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 3,54,38,29,000- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 11,35,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6358, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதிதிராவிட மக்களுக்கு கீழ்க்காணும் இடங்களில்

1. தேவத்தூர்,
2. ஒட்டன்சத்திரம்,
3. கள்ளிமந்தயம்,
4. பொருளூர்,
5. மஞ்சநாயக்கன்பட்டி.

இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7103, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விருதுநகர் மாவட்டம், பூமாலைப்பட்டி ஊராட்சி, முத்துராமலிங்கபுரம் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் திருமண மண்டபம் ஒன்று கட்டித் தர வேண்டியது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,54,38,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4888, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,54,38,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண்.6891, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**THIRU J. HEMACHANDRAN :** Honourable Speaker Sir, 'to discuss the need to remove the hurdles in acquiring land for constructing homes and latrines for the Adi-Dravidar and Tribal people', I move—

"That the sums of Rs. 3,54,38,29,000/- allocated under the Revenue account and Rs. 11,35,85,000/- under the Capital Account of Demand No. 4—Adi-Dravidar and Tribal Welfare Department be reduced by Rs. 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4428, திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7946, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3806, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 2886, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் உள்ள ஆதிவாசி மக்களுக்கென தனியாக ஆதிவாசி நல ஆணையம் ஒன்று அமைக்கும் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5194, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்குத் தேவையான அளவு தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

[திரு. ஐ. கணேசன்] [2002 ஏப்ரல் 11

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1325, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6026, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4184, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3 54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1938, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில்



2002 ஏப்ரல் 11] [திரு. மு. கார்த்தி]

ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3 54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5240, டாக்டர் ப. வள்ளல் பெருமான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5302, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3 54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7278, திரு. க. முருகவேல் ராஜன்.

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3 54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5560, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3 54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5927, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 816, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6989, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1899, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3 54;38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2742, திரு. க. பாரமலை.

***Thiru K. PARAMALAI :** Honourable Speaker Sir, 'to discuss the need to start Hostels for Adi-Dravida Boys and Girls at Tiruppachethi and Vembathur in Manamadurai Constituency during this Financial year itself', I move—

"That the sums of Rs. 354,38,29,000/- allocated under the Revenue Account and Rs. 11,35,85,000/- under the Capital account of Demand No. 4—Adi-Dravidar and Tribal Welfare Department be reduced by Rs. 100/-."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 998, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3 54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6983, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3 54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7034, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5951, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1509, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழங்குடி இனத்தவரின் குடும்பத்தில் உள்ள ஒருவர் சாதிச் சான்றிதழ் பெற்றால், குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுமென மனித உரிமைக் குழுத் தலைவர், மாண்புமிகு முன்னாள் நீதிபதி ரத்தினசாமி வழங்கிய பரிந்துரையை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. மு. அப்பாவு] [2002 ஏப்ரல் 11

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7780, திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6078, திரு. ஜி. பழனிசாமி.

***திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1263, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சமத்துவபுரம் திட்டம் நிறுத்தப்பட்டதால், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்குக் கிடைக்க வேண்டிய வீட்டு வசதி எண்ணிக்கை குறைந்ததை ஈடு செய்ய மாற்றுத் திட்டம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5140, திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1385, திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

***திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



2002 ஏப்ரல் 11] [திரு. எஸ்.ஏ.எம். உசேன்]

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5543, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவெறும்பூர் தொகுதி, பாப்பாக்குறிச்சி, காட்டூர் பகுதியில் உள்ள ஆதிதிராவிடர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு காம்பவுண்ட் சுவர் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2361, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, பாபநாசம் நகரில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில், புதிதாக கழிவு நீர்த் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3 54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4769, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

[திருமதி காசாம்பு பூமாலை] [2002 ஏப்ரல் 11

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7096, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகளைச் சீர்படுத்துவதற்கு வழங்கப்படும் தொகையினை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 423, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் ஆதிதிராவிட தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வசிப்பதால் அங்கு கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8101, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



2002 ஏப்ரல் 11] [திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்]

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5882, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்ட மனு செய்துள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6025, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், களியல் கிராமம், வட்டப்பாறையில் வசிக்கும் பழங்குடியினருக்கு புதிய குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8169, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதிதிராவிடர்களுக்கு என தனித் தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3847, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மற்றும் கடன் பெறும் நடைமுறைகளை எளிமையாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4614, செல்வி க. பாலபாரதி.

***செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல் தொகுதி மற்றும் நிலக்கோட்டை புதுப்பட்டியில் வசிக்கும் காட்டு நாயக்கர் பிரிவைச் சார்ந்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து சாதிச் சான்றிதழ் வழங்கக் கோருதல் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 916, திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :





"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4478, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5216, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோயிலில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4406, திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 334, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 354,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6541, திரு. டி.கே. இராஜா.

[2002 ஏப்ரல் 11

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு அதிக அளவில் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3 54,38,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,35,85,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் வழங்கப்பட்டுள்ள குறிப்பை@ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அதைப் பேரவைக் குறிப்பில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டு மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த மானியக் கோரிக்கையின்மீது தங்களது மேலான கருத்துகளையும் மற்றும் ஆலோசனைகளையும், தெரிவித்தபின், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு எடுத்து வரும் செயல் திட்டங்களை விளக்கி எனது பதில் உரையில் இப்பேரவைக்குத் தெரிவிக்கிறேன் எனக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம், திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

@ 183 முதல் 202 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



2002 ஏப்ரல் 11] [திரு. க. பாரமலை]

நலம் குறித்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பை நல்கியதற்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற முறை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் கூட்டத்தின்போது, தமிழ்நாடு அரசினுடைய நிதிநிலை பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றை வைத்து, தமிழக அரசு எப்போதும் இல்லாத அளவிற்கு நிதிநெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது எனக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். வேகமாக சீர்கேடடைந்துவரும் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு வருவாயைப் பெருக்கவும், திட்டம் சாரா செலவினங்களைக் குறைக்கவும், நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. அரசின் இப்படிப்பட்ட நடவடிக்கைகளிலிருந்து ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தவரும் தப்பவில்லை என்பதை இந்த மானியக் கோரிக்கையைப் படித்துப் பார்த்தாலே தெரிகிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான ஒதுக்கீடு 2001-2002-ல் 382 கோடியாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டு அது 365 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்த ஆண்டு இறுதிக்குள் மீண்டும் R.E. பட்ஜெட் வருகிறபோது இது 382 கோடிக்கும் குறையாமல், 400 கோடியாக உயர்த்தி திட்டங்களைச் செயல்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையிலும், பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு படிக்கும் ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்களுக்கு இதுவரை முறையே பட்டப் படிப்புக்கு 6,500 ரூபாய் மற்றும் பட்ட மேற்படிப்பிற்கு 7,000 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்த Loan Scholarship, திருப்பிச் செலுத்தவேண்டிய Loan Scholarship-ஐ மானியமாக மாற்ற முடிவு செய்து, அதற்காக 5 கோடி ரூபாய் நடப்பாண்டில் நிதி ஒதுக்கம் செய்திருப்பதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கும் ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவச மிதி வண்டி வழங்குகிற திட்டம் பொதுமக்களுடைய பாராட்டுதலைப் பெற்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. ஆனால், அந்தத் திட்டத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டில் 20 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டு 6 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலே திருத்திய மதிப்பீடு 2001-2002-ல் 850 இலட்சம். அதாவது 8 கோடியே 50 இலட்சமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதற்குக் காரணம், அந்த அளவிற்குத்தான் செல

ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, இந்த 6 கோடியை 10 கோடியாக உயர்த்தி அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவிகளுக்கு மட்டுமல்லாது, அரசு உதவி பெறுகின்ற aided institutions-லே படிக்கக்கூடிய ஆதிதிராவிடர் மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

முற்பகல் 10-15

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்கென நிலம் வாங்கி வழங்கும் புதிய திட்டம் இவ்வருடம் செயல்படுத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் விவசாயிகளின் பாசன வசதிக்காக கிணறு மற்றும் குழாய்க் கிணறுகள் நிறுவ கடன் உதவி வழங்க சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய Scheduled Castes and Scheduled Tribes Commission ஒரு பரிந்துரையைச் செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரையிலே 'The State should create a special fund for giving advances to the members of the Scheduled Castes and Scheduled Tribes for the purchase of land which may become available in terms of the formulation at (ii) above. The loan should be interest free and recoverable in not less than ten annual instalments' என்று குறிப்பிட்டிருக்கிறது. அந்த வகையிலே, இவ்வித கடனை, வட்டியில்லாத கடனாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கி, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு விரைவான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மலிவு விலை மது, ஏப்ரல் 15 ஆம் தேதியன்று இரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பு எங்களுக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. அதோடு சமுதாயத்தில் உள்ள அடித்தளத்து மக்களுடைய முன்னேற்றத்திற்காக, அவர்களின் நலனை மையமாக வைத்து வேலூரிலே திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஒன்று தொடங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிற செய்தியை நிச்சயமாக நான் பாராட்டுகிறேன்.



அந்த முயற்சி விரைவாக நடைபெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆட்சியின்போது அரசாணை 44-ஐ காரணமின்றி வாபஸ் பெற்றுவிட்டார்கள். அதனாலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே மிகப் பெரிய ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை எதிர்த்து, அரசாணை 44-ஐ வாபஸ் பெற்றது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்றும், அதை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்றும் குரல் கொடுத்தார்கள். அதற்கு நான் பாராட்டுத் தெரிவித்து, கடிதம்கூட எழுதியிருக்கிறேன். அந்த அரசாணையை மீண்டும் கொண்டு வருவோம் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். இன்று அது அரசாணை 91-ன் மூலமாக மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முக்கியமானவற்றை அனுபவம் வாய்ந்த மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். கொஞ்சம் அதைக் கவனியுங்கள்.

**திரு. க. பாரமலை:** மீண்டும் அந்த அரசாணை கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்காக ஆதிதிராவிடர் சமுதாயத்தின் சார்பிலே என்னுடைய பாராட்டுதல்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அரசாணை 44 ஏன் கொண்டு வரப்பட்டது என்ற விவரத்தைச் சொல்வதற்கு நான் விரும்புகிறேன். அரசாணை 44 என்பது, இதுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டு, நிரப்பப்படாத காலிப் பணியிடங்களை நேரடித் தேர்வு மூலமாக நிரப்பப்படவேண்டும் என்று சொல்லப்பட்டு இருந்தது. அதன் சார்பாக, மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு வெள்ளை அறிக்கையை இந்த மன்றத்திலே வைத்தார்கள். அந்த வெள்ளை அறிக்கையின்படி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பின்னடைவுப் பணியிடங்கள்—1-1-1999 அன்றுள்ளபடி, 27,000 பணியிடங்கள் காலியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அந்த இடங்களையெல்லாம் பூர்த்தி செய்வதற்கு நேரடித் தேர்வை நடத்த வேண்டுமென்று சொல்கிறபோது, அந்த அரசாணை 44-ல் குறிப்பிடப்பட்டிருப்பது ஒவ்வொரு category-யிலும் நேரடித் தேர்வு நடத்தப்பட வேண்டும். ஆனால், அந்த வெள்ளை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், ஒவ்வொரு category-யிலும் அந்தத் துறையினுடைய நுழைவு நிலையிலிருந்து அந்தத்

[திரு. க. பாரமலை] [2002 ஏப்ரல் 11

தேர்வு நடத்தப்பட வேண்டும் என்று அவர்கள் அறிவித்தார்கள். அப்படிச் செய்தால் அந்த G.O.44 இருந்தால்கூட, அதனால் பிரயோஜனம் இல்லை என்று சொல்கிற அளவிற்குத்தான் இருந்தது. குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வருவாய்த் துறையிலே டெபுடி கலெக்டர் என்பது 'ஏ' கேட்டகரி. அதிலே 10 இடங்கள் காலியாக இருக்கும் என்று சொன்னால், அந்த 'ஏ' கிரேடு பதவிக்கு நேரடியாகத் தேர்வு நடத்துவதற்குப் பதிலாக—அந்தத் துறையினுடைய நுழைவு நிலை என்பது கிளார்க் வேலை. அந்தக் கிளார்க் வேலைக்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்தால் 25 ஆண்டுகள் ஆனாலும், அவர் டெபுடி கலெக்டர் ஆக முடியாது. ஆக, எந்த நோக்கத்திற்காக அந்த அரசாணை 44 போடப்பட்டதோ, அந்த நோக்கத்தை நிறைவேறவிடாமல் தடுப்பதற்காக அந்த வெள்ளை அறிக்கை விடப்பட்டிருக்கிறது. ஆக, அந்த அரசாணை 44-ம் வாபஸ் பெறப்பட்டது. இந்த ஆட்சி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த ஆணையைக் கொண்டு வந்ததற்காக நான் பாராட்டுகிறேன்.

முற்பகல் 10-20

அதோடு நான் வேண்டிக்கொள்வது, 1988 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாமல் இருந்த Group I பதவிகளுக்காக நேரடியாக ஒரு தேர்வை நடத்தினார்கள். அதை நடத்துவதற்கு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன்கூட இணங்கவில்லை. அதையும் மீறி, அரசுக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்கள் அந்தத் தேர்வை நடத்தி 12 அல்லது 13 பேர் என்று நினைக்கிறேன்; 13 டெபுடி கலெக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இன்றைக்குப் பல்வேறு துறைகளிலே அவர்கள் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இன்று உடனடியாக அந்த அரசாணை 44-ல் சொன்னபடி, ஒவ்வொரு துறையிலும் இருக்கிற காலி இடங்களைக் கண்டறிந்து, அவற்றை விரைவாக நிரப்புவதற்கு, நேரடித் தேர்வுகள் நடத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய வழியிலே நடந்து கொண்டிருக்கிற, அவர்களுடைய கொள்கையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற இந்த அரசு, அதற்கான ஒரு சிறப்பு முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 11] [திரு. க. பாரமலை]

சிறப்புக் கூறுகள் திட்டம். இந்தத் திட்டத்திலே இச்சமுதாயத்தின் நலனுக்காக நிதியாதாரங்களை உரிய அளவில் ஒதுக்கீடு செய்ததில் குறைபாடுகள் இருப்பது தெரியவந்துள்ளது என்று வரவு-செலவு அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கடைசியிலே, இந்த மானியத்தினுடைய அறிக்கையில், விவரங்கள்-Special Component Plan, Tribal Sub Plan-அதனுடைய விவரங்கள் சம்பந்தப்பட்ட துறையின் மானியக் கோரிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 1991-96 ஆம் ஆண்டிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆண்டபோது, எப்படி அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால், 1980-ல் இருந்து 1988 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தமிழகத்தை ஆண்டபோது, இந்த Special Component Plan-க்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு; எந்தெந்தத் துறைகள் அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன; அதைப்போல Tribal Sub Plan-ஐ எந்தெந்தத் துறைகள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன; அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற முதலீடுகள் எவ்வளவு என்றெல்லாம் விவரமாக ஆதிதிராவிடர் நலத் துறையின் அறிக்கையுடனே சேர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கும். அதற்கான அந்த ஆதாரங்களைக்கூட இங்கே வைத்திருக்கிறேன். ஆகவே இதிலே, நிதி ஒதுக்கம் செய்ததில் குறைபாடுகள் என்று சொல்வதைக் காட்டிலும் அந்த நிதி ஒதுக்கம் எப்படிச் செயல்படுத்தப்படுகிறது; எப்படிச் செலவழிக்கப்படுகிறது; அதை monitor பண்ணுவதற்கு, அதை evaluate பண்ணுவதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்றால் இல்லை. ஏதோ ஒரு துறையிலே இவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று, 1987-88 ஆம் ஆண்டிலே கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல் போன்ற திட்டங்களுக்கு 20 கோடியே, 89 இலட்சம் ரூபாய் இந்த Special Component Plan-லே கொடுத்திருக்கிறார்கள். அதைச் செலவழித்தார்களா, யாருக்குச் செலவழித்தார்கள்; எப்படிச் செலவழிக்கப்பட்டது; உண்மையா என்று யாருக்கும் தெரியாது. ஆகவேதான் அடிக்கடி நாங்கள் சட்டமன்றத்திலே பேசுகிறபோதுகூடச் சொல்கிறோம். Special Component Plan திட்டத்தின்கீழ், அல்லது Tribal Sub Plan திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படுகிற நிதியைச் செலவழிப்பதில் ஆதிதிராவிடர் நலத் துறைக்கும் பங்கு இருக்க வேண்டும். ஒரு involvement இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மையாக அந்தத் திட்டத்திற்குச் செலவழிக்கப்படுகிறதா என்று கண்டறிய முடியும் என்று நாங்கள்

[திரு. க. பாரமலை] [2002 ஏப்ரல் 11

கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது முழுமையாகவே ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய பட்ஜெட்டிலேயிருந்து அது எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும், துறையின் அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்வது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக ஒதுக்கப்படுகிற நிதிகள் எந்தெந்தத் துறையின் மூலமாகச் செலவழிக்கப்படுகின்றன என்ற விவரத்தை இந்த மானியக் கோரிக்கையுடனே சேர்த்து, 1980-88 ஆம் ஆண்டுகளில் இருந்ததைப்போல் இருக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, மலிவு விலை மது ஏப்ரல் 15 ஆம் தேதியிலிருந்து இரத்து செய்யப்படும் என்ற செய்தி எங்களுக்கெல்லாம் மிக மகிழ்ச்சியைத் தருகிறது. மது விற்பனைக் கடைகளில் Bar வைக்க அனுமதிப்பது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. அதை எங்களாலே ஒப்புக் கொள்ள முடியவில்லை. தயவுசெய்து அதை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தரிசு நில மேம்பாடு; ஒரு நல்ல திட்டம். அதற்கு ரூ. 40 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் காரணமாக—இன்றைக்கு ஒரு பெரிய சோதனையான காலம். ஏரிகளில், கண்மாய்களில், நீர்ப்பாசனம் பெற்று விவசாயம் நடைபெற்றுக்கொண்டிருந்த நஞ்சை நிலங்களெல்லாம் வீடுகளாக மாற்றப்பட்டிருந்தாலும்கூட, இப்படிப் புதிய புதிய இடங்களைக் கண்டுபிடித்து விவசாயம் செய்ததன் காரணமாகத்தான்—இன்றைக்கு உணவு உற்பத்தியிலே நாம் தன்னிறைவு அடைந்திருக்கிறோம் என்று சொன்னால், அது மிகையாகாது. ஆக, இப்படிப்பட்ட தரிசு நிலங்களை மீண்டும் விவசாய நிலங்களாக மாற்றி உற்பத்தித் திறனைப் பெருக்கி, வேலையில்லாமல் இருக்கிற ஆயிரமாயிரம் ஏழைக் குடும்பங்களுக்கு வாய்ப்புத் தருகிற இந்தத் திட்டம் மிகவும் நல்ல திட்டம். ஆனால், இந்தத் திட்டத்தைத் தனியாருக்குக் கொடுப்பதன் மூலமாக ஒரு புதிய ஜமீன்தாரி முறை உருவாகிவிடாமல் பார்த்துக்கொள்வது மிக, மிக அவசியம் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

அதோடு. நகர்ப்புற கூட்டுறவுத் துறை மூலமாகக் கடன் பெற்றவர்களுக்கு....



2002 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. க. பாரமலை:** இன்னும் ஆரம்பிக்கவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆரம்பிக்கவில்லையா? அடுத்த மானியக் கோரிக்கைக்குப் போய்க்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. க. பாரமலை:** அதாவது, நேற்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது சொன்னார்கள், 31-3-1998-இல் உள்ளவாறு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து வசூலிப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்று. அது நல்ல திட்டம்; வரவேற்கிறோம். இந்த அபராத வட்டியோடு, வட்டியையும் தள்ளுபடி செய்துவிட்டீர்கள் என்றால், கிடைக்கிற amount உடனடியாக வரும். அதனால், முடிந்தால் வட்டியையும் தள்ளுபடி செய்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, I.P.S./I.A.S. டிரெயினிங் சென்டர் சென்னையில் இருக்கிறது. அந்த டிரெயினிங் சென்டரின் புராக்ரஸ்-ஐப் பார்க்கப்போனால், மிகவும் வருத்தமாக இருக்கிறது. இதற்கு ஒரு காரணம், நான் நினைக்கிறேன், fully equipped— முழுமையாகச் செயல்படுகிற ஒரு இன்ஸ்டிடியூசனாக அங்கே அது இல்லை. அதைக் கண்டறிந்து வசதிகளைச் செய்து கொடுத்து, அதிலேயிருந்து வருகின்றவர்கள் பெருவாரியான பதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உண்டாக்கித் தருவதற்கு அரசு பெரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அதிலே படித்தவர்கள் 1995-96-லே 3 பேர், 1997-98-லே 4 பேர் தவிர, 1996-97, 1998-99, 1999-2000 ஆகிய ஆண்டுகளில் படித்தவர்கள் யாரும் I.A.S./I.P.S. பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இப்போது ஒரு முக்கியமான விஷயம். இன்றைக்கு கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி கிராமங்களிலே தேர்தல் நடைபெற்றிருக்கிறது. ஆறு ஆண்டுகளுக்குப் பின்னாலே. 1996 ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலேகூட அங்கு யாரும் போட்டியிட முடியவில்லை. இப்போது ஏதோ நடந்திருக்கிறது. தலைவர் தேர்தலுக்கு மட்டும் மனு போட்டு இருக்கிறார்கள். உறுப்பினர்கள் இல்லையென்றால் அந்த ஊராட்சி செயல்பட முடியாது. 6 மாத காலம் வேண்டுமானால் செயல்பட அனுமதிக்கலாம். அதற்கு மேல் கொடுக்க முடியாது. இதுகுறித்து நான் ஏற்கெனவே ஒரு துணைக் கேள்வியிலே சொல்கிறபோது சொன்னேன்.

அரசு வழங்குகிற சலுகைகள் இரத்து செய்யப்பட்டாலொழிய அங்கு தேர்தல் நடத்த முடியாது என்று சொன்னேன். அதற்கு ஒரு முன்னுதாரணம் :

"The Government of Gujarat have taken a bold step by fixing responsibility of panchayats for removal of untouchability from their areas. Accordingly, if a panchayat fails to remove discrimination against the Scheduled Castes in regard to fetching of water from public wells, water works, etc., the Government grant to it is stopped till the discrimination is removed." என்று SC/ST கமிஷன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசு வழங்குகிற சலுகைகளை, நிறுத்தினாலொழிய நிச்சயமாக அந்தத் தேர்தல் நடைபெறப்போவதில்லை. ஆகவே, அரசு பல்வேறு அரசியல் கட்சிகளை அழைத்து வைத்து உண்மையான காரணம் என்னவென்பதைக் கண்டறிந்து, அதை நிவர்த்தி செய்கின்ற வகையிலே முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், அரசு கொடுக்கிற சலுகைகளை நிச்சயமாக வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஒரு கோரிக்கை. Legislative Committee for SC/ST என பாராளுமன்றத்தில் இருப்பதைப் போல சட்டமன்றத்திலும், சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய Legislative Committee வேண்டும் என்று 1984ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். முன்னால் பேசிய நம்முடைய மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்துவதற்கு மாவட்டங்களிலே Committee போட்டிருப்பதாகச் சொன்னார்கள். மாவட்ட அளவிலே Committee போட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் என்னுடைய தொகுதியிலே இருக்கிறேன். அந்த மாவட்டத்திலே ஒருமுறைகூட கூட்டம் கூட்டப்பெறவில்லை. ஆகவே இந்த மன்றத்திலே அங்கம் பெற்றிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல State Level and District Level Advisory Committee for Scheduled Castes, மாவட்ட/மாநில அளவிலான S.C./S.T.-யினுடைய நலனுக்காக ஆலோசனை சொல்கிற கமிட்டிகளை மீண்டும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 10-30

இப்போது நம்முடைய அரசு சில குறிப்பிட்ட பேருந்து வழித் தடங்களை தனியார்மயமாக்க வேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறது. அப்படி எடுக்கின்ற முடிவிலே உரிமம் வழங்குகிறபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அந்த உரிமங்களை வழங்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதுவரை அந்தத் துறையிலே தாழ்த்தப்பட்ட மக்கள் நுழையாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அது வேலைவாய்ப்பு வழங்குகிற துறை. ஆகவே, தனியாருக்கு உரிமம் வழங்குகிறபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பங்கினை வழங்க வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, இன்று தமிழகத்திலே, அரசிலே 5, 6 துறைகளிலேதான் reservation in promotion கொடுக்கப்படுகிறது. அனைத்துத் துறைகளுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு direct recruitment-லே reservation in promotion should be extended to all the Departments. (மணியடிக்கப்பெற்றது.) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன் சார்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செயல்படுகிற "தாட்கோ" ஸ்தாபனத்தை ஒரு வலு உள்ள ஸ்தாபனமாக, கடன் வழங்கத் தகுதி பெற்ற ஸ்தாபனமாக மாற்ற வேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டே இருக்கிறோம். 2001-2002ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னாலேயும் சரி அரசு சார்பில் நடவடிக்கையை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதில் அதிகமாக நிதிபெற்று "தாட்கோ" சிறப்பாக நடைபெற முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தத் துறையிலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற "தாட்கோ" ஸ்தாபனத்தைக் கடன் வழங்குகிற வங்கியாக மாற்றுவதற்கு, அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதோடு, 2000-2001-லே, வெளிநாடுகளில் சென்று படிப்பதற்காக ஒரு மாணவனுக்கு ரூபாய் 3 இலட்சம் என்ற வீதத்தில் 10 பேருக்கு 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 5 ஆண்டுகளில் 50 பேர் பயனடைவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 2000-2001-லே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு இல்லை. அது இல்லாததற்குக் காரணம், இந்த முயற்சியே எடுக்கப்படவில்லை. ஒரு

[திரு. க. பாரமலை] [2002 ஏப்ரல் 11

மாணவன்கூட அனுப்பப்படவில்லை. ஆகவே, அதை உடனடியாகக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பதவிகளிலே நியமனம் செய்யப்படுகிறபோது, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு முக்கியத்துவம் இருக்கும்படியாக, சில முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இந்த Secretariat-லே 9 செயலாளர்கள் இருந்தார்கள். ஆனால் இன்று 3 என்றுதான் உறுதியாகத் தெரிகிறது. அல்லது 4 பேர் இருக்கக்கூடும். ஆகவே representation for Scheduled Caste அது எல்லா நிலையிலும் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த முயற்சியைச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறைய பேர் பேச இருக்கிறார்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. க. பாரமலை:** மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் 2 நாள் முன்பு பேசும்போது சொன்னார்கள். அரசுத் துறைகளில் backlog vacancies 6,000 இருக்கின்றன. அந்த ஆறாயிரத்திலே, Backward Class-க்கு இவ்வளவு, SC-க்கு இவ்வளவு—10,000 vacancies இருக்கின்றன.—இது Backward Class-க்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 27,000 backlog vacancies இருக்கின்றன. ஆனால் வெள்ளை அறிக்கையிலே 1-4-1989 ஆம் தேதி அன்றுள்ளபடி, 6,000 என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 1-4-1989 ஏன் வந்தது? அதில் இருக்கிற சரித்திர முக்கியத்துவம் என்ன என்பது எங்களுக்குத் தெரியாது. ஆகவே 27,000 backlog vacancies-ஐ நிரப்புவதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராஜசேகர்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்".



2002 ஏப்ரல் 11] [திரு. மா. இராஜசேகர்]

என்ற திருவள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாகவும், "ஒரு தாய் வயிறு தாங்காது என்ற காரணத்தால் பல தாயின் வயிற்றில் பிறந்தோம்" என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் சொல்லுக்கேற்ப ஒரு கோடி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும், உலகெங்கும் வாழும் தமிழ்ப்பெருமக்களுக்கும் தாயாக விளங்கி, கடந்த 5 ஆண்டு காலம் முந்தைய ஆட்சியில் கொடுத்து வந்த மலை போன்ற எதிர்ப்புகளை தகர்த்தெறிந்து, மலைகளில் உயர்ந்த மலையாம் இமய மலையைப்போல் உயர்ந்து நின்று 3-வது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், நெருப்பாற்றையும் நீர்வீழ்ச்சி ஆக்குகின்ற ஆற்றல், அனலையும் தென்றல் ஆக்கும் சக்தி, சதிகளையும் முறியடிக்கும் வியூகம், சூழ்ச்சிகளை வீழ்த்திடும் மதிநுட்பம், தடைகளை உடைத்தெறியும் வீரம், துரோகத்தை வீழ்த்தும் விவேகம், இவை அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் சாதாரண, எளியவனான என்னை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மன்றத்தின் உறுப்பினராக்கி அழகு பார்க்கும் எங்கள் தாய், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்....

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

முற்பகல் 10-35

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஈ) 9-4-2002 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பு நூலகத்தில் இல்லாதது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள். திரு. பொன்முடி அவர்கள் காலையில் பேசும்போது, அவைக் குறிப்புகள் நூலகத்தில் காணவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். உரிமை மீறல் தொடர்பாக அதை ஆய்வதற்காக இந்த அலுவலகத்திலிருந்தே அதை எடுத்திருக்கிறார்கள். அது அப்படியே வைக்கப்பட்டுவிட்டது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சந்தேகம் எல்லாம், உறுப்பினர்கள் சென்று கேட்பது அதன் நகலுக்காக இருக்கலாம். அதை எங்களுக்குக் காட்டியிருக்கலாம். அந்த நகலை எடுத்துக்கொண்டு வந்துதான் பேசமுடியும். அதைக்

காட்டியிருக்கலாம் அல்லவா? நேற்றைக்கும் இல்லை என்று சொல்லி விட்டார்கள். இன்றைக்குப் போய்க் கேட்டபோதும் இன்றைக்கும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்போது நூலகத்தில் போய்ப் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) உங்களை மதித்து விளக்கம் சொல்வதற்காகச் சொன்னேன். (குறுக்கீடு) தானமாகக் கொடுத்த மாட்டை, பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கக்கூடாது. உட்காருங்கள்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 4 - ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராஜசேகர்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்று, இரட்டை இலைச் சின்னத்தில் வாக்களித்து இந்த அவைக்கு என்னை அனுப்பிவைத்த இராஜபாளையம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியை இந்த அவையில் சமர்ப்பித்து, என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியினர் தந்த தொல்லைகளால், சோதனைகளால் மாண்புமிகு அம்மா அவர்கள் பட்ட துயரம் ஏராளம். அமைதியாகத் தூங்கி இருக்கமுடியாது. அவர்களின் ஆதிக்க வெறிக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அடங்கிப் போயிருந்தால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அனாதை ஆசிரமம் தேடிப் போயிருக்கும். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள், நான் அஞ்சவும் மாட்டேன், அடைக்கலம் தா என்று எவரையும் கெஞ்சவும் மாட்டேன் என்று நெஞ்சுரத்தோடு, 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும், அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே' என்ற கவிதை வரிகளுக்கு இலக்கணமாக நிமிர்ந்து நின்ற பேராண்மை, உலகத்தில் வரலாறு படைத்த எந்த மாவீரனுக்கும் இல்லாத பெருமை, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, உங்களுக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்குகளிலேயிருந்து மீளவே முடியாது, தண்டனையிலிருந்து தப்பவே முடியாது, தேர்தலிலே நிற்கவே முடியாது, மீண்டும் முதலமைச்சராய்





வரவே முடியாது என்று ஆரூடம் கணித்தவர்கள், தொங்கிய தலையோடு துவண்டு போகும் அளவுக்கு மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் பல்வேறு பொய் வழக்குகளை ஜோடித்த சதிகாரர்களின் சூழ்ச்சி வலைகளை அறுத்தெறிந்து, வஞ்சகர்களால் பழி வாங்கும் நோக்கத்தோடு போடப்பட்ட வழக்குகளிலிருந்து நிரபராதி என்ற தீர்ப்பைப் பெற்று முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதி போல சோதனைக்குள்தான் சாதனைகளின் முகவரி இருக்கிறது என்ற தத்துவத்தை உண்மையாக்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்த 2001 ஆம் ஆண்டு தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், நிருபர்களுக்கு அளித்த முதல் பேட்டியில், "Attack on poverty will be my priority"-அதாவது 'வறுமையை, ஏழ்மையைத் தாக்கி அழிப்பதுதான் எனது ஆட்சியின் முக்கிய, முதன்மை இலட்சியம்' என்று கூறினார்கள். இப்போது, மூன்றாவது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், "This Government's motto is that there should be no one below the poverty line after March 2006." அதாவது, `2006 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு, தமிழகத்தில் எந்த ஒரு குடும்பமும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இல்லை என்ற நிலைதான் இந்த அரசின் நோக்கம்' என்று சொன்னார்கள். எல்லோரும் ஓர் ஜாதி, அதிலே மனித ஜாதி, அதுதான் எனது நீதி என்னும் தீர்க்கதரிசனமான வரிகளுக்குச் சொந்தக்காரரான மாண்புமிகு அம்மா அவர்கள், ஆதிதிராவிட மக்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு .வரும் 15 ஆயிரம் இலவச வீடுகளை உயர்த்தி, இந்த ஆண்டு புதிதாக 31 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் எனவும், கடந்த ஆண்டு பிளஸ் 2 படிக்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியருக்கு வழங்கப்பட்ட இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் தொடரும் எனவும் அறிவித்திருப்பதை வரவேற்று, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தில், சட்டப்படிப்பு படித்த பட்டதாரிகள் சுயமாகத் தொழில் தொடங்குவதற்கு, 150 சட்ட பட்டதாரிகளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 5,000 வீதம் மானியம் வழங்கப்படும் என்றும் இதற்காக ரூ. 9 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதும் மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

[திரு. மா. இராஜசேகர்] [2002 ஏப்ரல் 11

நற்பகல் 10-40

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அனைத்து ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகளுக்கும் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டி முடிக்க, ஹட்கோ நிறுவனத்திடமிருந்து 31.37 கோடி ரூபாய் கடன் பெற்றும், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டும், கட்டடங்கள் கட்டி முடிக்க முடிவு செய்துள்ளதும், மேலும் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டம், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதும், மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

மலைவாழ் மக்களின் வளர்ச்சிக்கென, பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்த, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள பழங்குடியினர், அதனைக் கடந்து முன்னேற்றமடைய, தோட்டக் கலை, கால்நடை வளர்ப்பு, சுவர்ண ஜெயந்தி, கதர் மற்றும் கிராமத் தொழில், பட்டு வளர்ச்சி, வேளாண் பொறியியல் போன்ற பல்வேறு துறைத் திட்டங்கள் மூலம், இம்மக்களின் மேம்பாட்டிற்கு வழிவகை செய்யப்பட்டிருப்பது, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒரு தொலைநோக்குச் சிந்தனையாகும்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், 1974-இல் தொடங்கப்பட்டு, அதில், பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வறுமையைப் போக்கும் விதமாக, மகளிர் சுய உதவிக் குழுக்களை முன்னிலைப்படுத்தி, சிறுதொழில்களை ஊக்கப்படுத்தும் வகையில், 2002-2003 ஆம் நிதியாண்டில் 30 ஆயிரம் ஆதிதிராவிடர் மகளிர் பயனடையும் வகையில், சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவையான தொழில் பயிற்சியும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதும் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டு உள்ளதும் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் பாசன வசதிக்காக, கிணறு மற்றும் குழாய்க் கிணறுகள் நிறுவ, கடனுதவி வழங்க சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்த உள்ளதும் மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே, தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கிட சூளுரை எடுத்துள்ள



2002 ஏப்ரல் 11] [திரு. மா. இராஜசேகர்]

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், எனது தொகுதிக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித்தர பணிந்து வேண்டுகிறேன்.

எனது இராஜபாளையம் தொகுதியில், குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கும் வகையில், ஆறாவது மைலில் 30 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நீருந்து நிலையம் அமைக்கப்பட்டது. அப்போது இராஜபாளையம் நகரின் மக்கள் தொகை 30 ஆயிரம் பேர்; தற்போது, மக்கள் தொகை 2 இலட்சம் பேராக உயர்ந்திருக்கிறது. ஆகவே, குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்த்துவைத்திட, கூடுதலாக, நீருந்து நிலையம் உருவாக்கிட மாண்புமிகு அம்மா அவர்கள், அனுமதி வழங்கிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இராஜபாளையம் நகரில், தெற்குமலைப்பட்டியில், குடிநீர் லாரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் அமைத்து, குடிநீர் வழங்க, சுமார் ரூ. 18 கோடி செலவில், குடிநீர் வடிகால் வாரியம் மதிப்பீடு செய்துள்ளது. இதற்கு நிதி ஒதுக்கி, திட்டம் நிறைவேற மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

இராஜபாளையம் நகரில், மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக, வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருப்பதால், சாலைப் போக்குவரத்து மிகவும் இடையூறாக இருக்கிறது. இப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், இராஜபாளையத்திற்குப் புறவழிச் சாலை அமைவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் தரம் உயரும் வகையில், மாணவ, மாணவியர்களின் உயர்கல்விக்கு, அரசுப் பொறியியல் கல்லூரி ஒன்றும், கலைக் கல்லூரி ஒன்றும் அமைத்திட அனுமதி வழங்குமாறு அம்மா அவர்களைப் பாதம் தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.

ஆசியா கண்டத்தின் மிகப் பெரிய விளையாட்டு அரங்கமான நேரு விளையாட்டு அரங்கத்தைச் சென்னையில் அமைத்த பெருமைக்குரிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், மாநில அளவில் வெற்றி பெற்று வருகிறார்கள். அவர்கள் மேலும் பயிற்சி பெறும் வகையில், இராஜபாளையம் நகரில் விளையாட்டு அரங்கம் ஒன்று அமைத்துத்தர பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இராஜபாளையம் அருகிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை, அய்யனார் கோயில் மலைக்காடுகளில் அதிசயமான, வியக்கத்தக்க சாம்பல் நிற அணில் வகைகள் ஏராளமாக உள்ளன. உலகில் எந்தப் பகுதியிலும் இல்லாத அந்த அதிசய சாம்பல் நிற அணில் வகைகளைப் பாதுகாக்கும் வகையில், அரசு, வன விலங்கு சரணாலயம் அமைத்துத் தரவும், அதேபோல், அந்த மலைக்காடுகளில், அற்புத நீர்வீழ்ச்சிகள் நிறைந்து, இயற்கை வளம் மிகுந்த பகுதியாகவும் இருப்பதால், அய்யனார் கோயில் மலைப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்குமாறும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட, மேற்குத் தொடர்ச்சி மலையில், அய்யனார்கோயில் மலையின் அருகில் சப்போட்டா, மாம்பழ இரகங்கள், பலாப்பழமும் ஏராளமாக விளைகின்றன. அதேபோல், ஏராளமான மூலிகை மரங்களும் உள்ளன. பழங்களைப் பதப்படுத்த ஒரு தொழிற்சாலையும், மூலிகைகளைப் பாதுகாக்க ஒரு மூலிகைத் தொழிற்சாலையும் அமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்ட நீதிமன்றங்கள், திருவில்லிப்புத்தூர் நகரில் உள்ள ஒவ்வொரு நீதிமன்றமும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சப்போட்டா, மாம்பழங்களைக் கொண்டுவந்து, உறுப்பினர்களுக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு பேசினால் பரவாயில்லை. (சிரிப்பு)

**திரு. மா. இராஜசேகர்:** விருதுநகர் மாவட்ட நீதிமன்றங்கள், திருவில்லிப்புத்தூர் நகரில் உள்ள ஒவ்வொரு நீதிமன்றமும், தொலைதூரத்தில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்கள் ஒரே இடத்தில் இயங்கிடும் வகையில், திருவில்லிப்புத்தூர் நகரில், சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரவும், இராஜபாளையம் நகரில், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், சார்பு நீதிமன்றமும் அமைக்க அனுமதி வழங்குமாறும் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

எனது தொகுதியில் உள்ள சத்திரப்பட்டியில் விசைத்தறி மூலம் தயாரிக்கப்படும் gauze bandage துணிகளுக்கு முழு விற்பனை வரி



விலக்கு வழங்கிட வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் எனது தொகுதி முழுவதும் உள்ள கிராமப்புறச் சாலைகள் பழுது பார்க்கப்படவில்லை. ஆகவே மிகவும் பழுதடைந்துள்ள கிராமப்புறச் சாலைகளைப் பழுதுபார்க்க மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இராஜபாளையம் நகராட்சியில் பணிபுரியும் ஐ.பி.டி. செவிலியர் ஊழியர்களுக்கு சுமார் 15 பேர்களுக்கு கடந்த தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து 15 மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. இதனால் அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு அவர்களுக்கு ஊதியம் வழங்க உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது எனது நகரில், இராஜபாளையத்தில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட 11-வது பட்டாலியன் காவல் துறையினருக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித்தர மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

எனது தொகுதியில் அமைந்துள்ள சாஸ்தா கோயிலில் அணை கட்டும் பணியை வேகப்படுத்துமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள கண்மாய்கள் நீண்ட வருடங்களாக தூர் வாரப்படாததால் மேடாகி நீர்த்தேக்கம் குறைந்து வருகிறது. விவசாயத்தை நம்பியுள்ள பெருவாரியான மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதால் கண்மாய்களை தூர்வாரி சீரமைக்கும்படி மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொண்டு இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைப் பணிந்து சமர்ப்பித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன்.

***திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே பங்கேற்று உரையாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றுவதற்கு முன்பாக முதலில் நான் ஒரு கோரிக்கையை இந்தப் பேரவையில் முன்வைக்க விரும்புகிறேன். கடந்த நிதிநிலை அறிக்கையின்போது நான் உரையாற்றியதைப்போல, தாழ்த்தப்பட்டோருக்கென, பழங்குடியினருக்கென தனி பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கையை முதலில் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இரட்டை பட்ஜெட்டா என்று கேள்வி எழக்கூடும். இங்கே, இந்தியாவே இரட்டை இந்தியாவாக இருக்கிறது. வாழ்விடங்கள் இரண்டாக இருக்கின்றன; தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கிற இடங்கள் எல்லாம் சேரி என்றும், தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்கள் வசிக்கிற இடங்கள் எல்லாம் ஊர், தெரு என்றும், ஒவ்வொரு கிராமமும் இரண்டு இரண்டாக இருக்கின்றன. அந்தவகையிலே பார்க்கிறபோது இந்தியா, ஒரே இந்தியாவாக இல்லை; இரட்டை இந்தியாவாக இருக்கிறது. வாழ்விடம் மட்டுமல்ல, சுடுகாடும் இரட்டைச் சுடுகாடாக இருக்கிறது. தேநீர்க் கடைகளுக்குப் போனால், தேநீர் குவளைகள் இரண்டாக இருக்கின்றன. இப்படி எல்லாமே இரட்டையாக இருக்கிறபோது, இந்த மக்களுக்கென தனி பட்ஜெட்டை அறிவிப்பதன் மூலம், சமர்ப்பிப்பதன் மூலம் இங்கே ஒரு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் குடியரசுத் தலைவராக இப்போது இருக்கின்ற மதிப்புமிகு கே.ஆர். நாராயணன் அவர்கள் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. இரா. திருமாவளவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்விடங்கள் இரண்டாக உள்ளன; சுடுகாடு இரண்டாக உள்ளது; தேநீர்க் குவளைகள் இரண்டாக உள்ளன; இப்படி எல்லாமே இரண்டாக இருப்பதன் மூலம், இந்தியாவே இரட்டை இந்தியாவாக இருக்கிறபோது, இரட்டை பட்ஜெட் சமர்ப்பிப்பதிலே தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். தாழ்த்தப்பட்டோருக்கென தனி பட்ஜெட்





வழங்குவதற்கான வழிமுறைகளை 1980 ஆம் ஆண்டு மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புக்கூறுத் திட்டமும் பழங்குடியினர் துணைத் திட்டமும் வழி வகுத்திருக்கிறது. ஆகவே இந்த மானியக் கோரிக்கையில் முதல் கோரிக்கையாக நான் முன்வைக்க விரும்புவது தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடியினருக்கும் தனி பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

முற்பகல் 10-50

இந்த நிதியாண்டுக்கு தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கென்று முன் வைத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பும், செயல்திட்டமும் கடந்த ஆண்டு வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்தும் செயல் திட்டத்திலிருந்தும் பெரிய அளவிலே மாறுபடவில்லை. ஆனாலும், ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையில் சிலவற்றைப் பாராட்டவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே ஆதிதிராவிடர் மக்களின்பால் அனுசரணையான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்காக ஒவ்வொரு துறையினையும் சார்ந்த அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் sensitisation என்று சொல்லப்படக்கூடிய பயிற்சி அளிக்கிற ஒரு முறையை தமிழக அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதை நெஞ்சார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, தந்தை பெரியார் அவர்களுக்கு முன்னாலேயே இந்த மண்ணில் பகுத்தறிவுக் கருத்துகளையும் பௌத்தக் கருத்துகளையும் பரப்பிய தமிழ் அறிஞர் அயோத்தி தாச பண்டிதர், ரெட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா போன்ற மாமேதைகளின் படைப்புகளையெல்லாம் தொகுப்பதற்காகவென்று தனியே ஓர் ஆவணக் காப்பகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

அடுத்து, உயர் கல்வி படிக்கிற மாணவர்களுக்கெல்லாம் வழங்கப்படுகிற கடன் உதவித் தொகை இனி மானியமாக வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருப்பதை வரவேற்கவும், பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் 25 ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புக்கூறு உள்ளடக்கத் திட்டம் என்று சொல்லப்படக்கூடிய Special Component Plan மற்றும் Tribal Sub Plan என்கிற இரண்டு திட்டங்களும், எவ்வாறு நடைமுறையில் உள்ளன என்பதைக் கண்டறிவதற்காக அல்லது ஆய்வு செய்வதற்காக,

[திரு. இரா. திருமாவளவன்] [2002 ஏப்ரல் 11

கண்காணிப்பதற்காக ஓர் உயர் நிலைக் குழுவை அமைக்க தமிழக அரசு முன்வந்திருப்பதை வரவேற்கவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய திட்டங்கள் மேலோட்டமான, கண்துடைப்பு திட்டங்களாக மட்டுமே இருந்து விடக்கூடாது என்று நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்த 50 ஆண்டுகாலத்தில் மத்திய அரசும், மாநில அரசும் ஒதுக்கி இருக்கிற நிதி யாவும் தாழ்த்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் முறையாகப் போய்ச் சேர்ந்திருக்குமேயானால் இங்கே தாழ்த்தப்பட்டோர் மிகப் பெரிய அளவிலே மேம்பாடு அடைந்திருப்பார்கள். ஆனால் இந்த நிதி எல்லாம் எங்கே போய்ச் சேருகிறது என்பதுதான் மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. தாழ்த்தப்பட்டோருக்கு என்று எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது, அது எவ்வாறு செலவு செய்யப்படுகிறது என்பதிலே அக்கறை காட்டுவதைவிட, தாழ்த்தப்பட்டோரைக் கவருகிற வகையிலே ஏராளமான கவர்ச்சித் திட்டங்களும், இலவசத் திட்டங்களும்தான் இந்திய அளவிலேயே அறிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த அடிப்படையில் தமிழகத்திலும் பல இலவசத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றன. அதிலே ஒன்று மிதிவண்டி வழங்குகிற திட்டம், இலவச வேட்டி-சேலை திட்டம். இப்படி பலவற்றை நாம் குறிப்பிடலாம். ஆனால் இந்தத் திட்டங்கள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்று நாம் எண்ணிப் பார்க்கிறபோது, உயிரில்லாத உடலின்மீது வாசனைத் திரவியங்களைத் தெளிப்பதுபோல உள்ளதாகத்தான் நான் கருதுகிறேன். ஓரளவுக்கு மேல் போனால் அந்த வாசனைத் திரவியங்களையும் மீறி துர்நாற்றம்தான் வீசும். ஆகவே, இப்படிப்பட்ட இலவச கவர்ச்சித் திட்டங்களைவிட இந்த மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கிற வகையிலே கூடுதலான அக்கறை செலுத்தி, வளர்ச்சித் திட்டங்களிலே கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்காகத்தான் மத்திய அரசு சிறப்புக்கூறுத் திட்டத்தையும், பழங்குடியினர் துணைத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது. ஆனால் அந்தத் திட்டம் எவ்வாறு நடைமுறையில் உள்ளது என்பதை அறிவதற்கே, அதைப்பற்றிப் பேசுவதற்கே 25 ஆண்டுகாலம் தேவைப்பட்டிருக்கிறது. கால் நூற்றாண்டுக்குப் பிறகுதான் அதைப்பற்றி நாம் விவாதிக்கவே தொடங்கியிருக்கிறோம். தமிழக அரசு கடந்த நிதிநிலை அறிக்கையின்மீது அதை உன்னிப்பாகக் கவனித்து ஒரு கருத்தைப் பதிவு செய்திருக்கிறது. இந்தச் சிறப்புக் கூறுத் திட்டம் எவ்வாறு நடைமுறையில் உள்ளது



2002 ஏப்ரல் 11] [திரு. இரா. திருமாவளவன்]

என்பதை கால முறைப்படி ஆய்வு செய்யவும், கண்காணிக்கவும் இந்த அரசு அக்கறையோடு செயல்படும் என்று குறிப்பிட்டிருக்கிறது.

முற்பகல் 10-55

தமிழக அரசு கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 25,986 கோடி மொத்தம் வரவு. அதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட நிதி ரூ.367.83 கோடிதான். அது சதவிகிதத்தில் பார்க்கின்றபோது 1.4 சதவிகிதம். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று சிறப்புக்கூறுத் திட்டத்தின்படி 19 சதவிகிதம் நிதி ஒதுக்கப்படவேண்டும். 19 சதவிகிதம் எங்கே, 1.4 சதவிகிதம் எங்கே என்கிற இந்த இடைவெளியை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமாறு நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு 2002-2003 நிதி ஆண்டிலே ரூ.30,832 கோடியில் தாழ்த்தப்பட்டோருக்கு என்று ஒதுக்கப்பட்டு இருக்கிற நிதி ரூ.365.74 கோடி. இது ஒட்டுமொத்த சதவிகிதத்தில் 1.2 சதவிகிதமே வருகிறது. கடந்த ஆண்டைவிடக் குறைந்து இருக்கிறது. ஆக சிறப்புக்கூறுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலே அக்கறை செலுத்துவதாகச் சொல்லுகிற தமிழக அரசு இந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்குகிறபோது இவ்வளவு பெரிய வேறுபாட்டை இவ்வளவு பெரிய ஒரு இடைவெளியை ஏன் வைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய திட்டங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு முறையாகச் சென்று அடைவதில்லை. கடன் உதவியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு வகையான திட்டங்களாக இருந்தாலும் சரி அவை சென்று சேருவது இல்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று 2001-ல் வீட்டுமனைப் பட்டா வழங்குவதில்-ஒதுக்கப்பட்ட நிதி ரூ.24 கோடி. அதற்கு அடுத்த ஆண்டு ரூ.22 கோடி. தற்போது வருகின்ற இந்த நிதி ஆண்டிலே 12 கோடியாக குறைக்கப்பட்டு இருக்கிறது. ஆக சிறப்புக்கூறுத் திட்டத்தின்படி ஒவ்வொரு துறையிலும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு அந்தத் துறைக்கென ஒதுக்கப்படுகிற நிதியில் 19 சதவிகிதம், 18 பிளஸ் 1 என்ற வகையிலே அது ஒதுக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒதுக்கப்படாமல் பொத்தாம் பொதுவிலே நிதி ஒதுக்கப்பட்டு அது தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது, பழங்குடியினருக்கும் அது பயன்படுகிறது என்ற வகையில்தான் அது நடைமுறையில் இருந்து வருகிறது. ஆகவே அவ்வாறு இல்லாமல், இனி வருங்காலத்திலே தனியாக தாழ்த்தப்பட்டோருக்கு என பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டால்தான் ஒவ்வொரு துறையிலும்

எவ்வாறு தாழ்த்தப்பட்டோருக்கான நிதி ஒதுக்கப்படுகிறது., செயல்படுத்தப்படுகிறது, மக்களுக்கு எவ்வாறு சென்று சேருகிறது, என்பதைக் கவனிக்க முடியும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்தின்படி, மத்தியப் பிரதேச அரசாங்கம், 6 இலட்சம் ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, 4 இலட்சம் பேருக்கு வழங்கி இருக்கிறார்கள். இதுபோல ஒவ்வொரு மாவட்டத்திற்கும் Centre of excellence என்ற பெயரிலே சிறப்புப் பள்ளிகளை நடத்தி வருகிறது. 45 மாவட்டங்களுக்கும், 45 பள்ளிகளை பிளஸ் 2 லெவலிலே, நடத்துவதற்கென 8 கோடி ரூபாயை அந்த அரசு செலவு செய்து வருகிறது. ஆகவே, மத்தியப் பிரதேச அரசாங்கம், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைப்போல நம்முடைய அரசும் இத்தகைய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்டு உறைவிடப் பள்ளிகள், பழங்குடியின மக்களுக்கு என்று நடத்தப்பட்டு வருவது தமிழகத்திலேயும் நடைமுறையில் இருக்கிறது. தாழ்த்தப்பட்டோருக்கும் அவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று சிறப்புக் கூறுத் திட்டத்தில் வலியுறுத்தப்படுகிறது. ஆகவே அதிலும் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சிறப்புக் கூறுத் திட்டங்கள் எல்லாம் சிறப்பாகச் செயல்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதற்கு செயல்படுத்துகிற அதிகார அமைப்பாக, Nodal Agency என்கிற ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். அதற்கு ஆதிதிராவிடர் நலத் துறை, பழங்குடியினர் நலத் துறைகளினுடைய அரசுச் செயலாளர்களை Nodal Officers-ஆக நியமிக்கப்படவேண்டுமென்றும் சிறப்புக் கூறுத் திட்டம் வலியுறுத்துகிறது. ஆகவே இந்தச் சிறப்புக் கூறுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழக அரசு முன் வரவேண்டும். Nodal Agency-யை நியமிக்க வேண்டும். Nodal Officer-ஐ நியமிக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1980-லிருந்து 2002 வரையில் இந்தத் திட்டம் எவ்வாறு நடைமுறையில் இருந்தது என்பது பற்றி ஒரு வெள்ளை அறிக்கையையும் தமிழக அரசு வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துணிகளில் பேசி முடியுங்கள். இன்னும் 8 பேர் பேச வேண்டும்.

**திரு. இரா. திருமாவளவன்:** வளர்ச்சித் திட்டங்கள் ஒருபுறம் இருந்தாலும், என்னுடைய கவலை எல்லாம், வருத்தம் எல்லாம், நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது எல்லாம், வன்கொடுமைத் தடுப்பிலே அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதையும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலே அரசுக்குள்ள அக்கறை என்ன என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் ஒருபுறம் நடைமுறையில் நாம் செய்து வருகிறோம் என்றாலும், இன்னொருபுறம் அந்த மக்களின்மீது திணிக்கப்படுகிற வன்கொடுமைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டும். அந்த வன்கொடுமைகள் என்பது, இரண்டு வகையாக இந்த மக்களின்மீது திணிக்கப்படுகிறது. ஒன்று, அரச வன்கொடுமை. இன்னொன்று, சாதிய வன்கொடுமை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு கடன் உதவி கொடுத்தாலும், பெட்டிக் கடை வைப்பதற்கு உதவி செய்தாலும், வியாபாரம் செய்வதற்கு பொருளுதவி வழங்கினாலும், உழுவதற்கு நிலம் கொடுத்தாலும், அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு, செயல்படுத்துவதற்கு விடாமல் தடுக்கின்ற அளவுக்கு சாதிய வன்கொடுமை இன்னும் இந்த மண்ணிலே தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. ஆகவே அந்த சாதிய வன்கொடுமைகளைத் தடுப்பதற்கு மத்திய அரசாங்கம் 1989-ல் கொண்டுவந்த சட்டம்தான் வன்கொடுமை தடுப்புச் சட்டம். ஆனால், தமிழகத்திலே அந்தச் சட்டம் முறையாக நடைமுறையில் இல்லை. காவல் துறையில் ஒருவேளை வழக்குகளைப் பதிவு செய்கிறார்கள் என்றால் 3(1) (x) என்கிற ஒரே ஒரு பிரிவை மட்டும் பயன்படுத்துகிறார்கள். அதையும் ஒரு வாரத்திற்குப் பின்னால் refer செய்து விடுகிறார்கள். வன்கொடுமையைத் தடுப்பதற்கு எந்தவிதமான அக்கறையும் காட்டாவிட்டால் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைக்கு உதவாது. ஆகவே, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும்.

ஒருபுறம் சாதிய வன்கொடுமை என்று சொன்னால், இன்னொருபுறம் அரச வன்கொடுமை. அது போலீஸ் மூலமாக இந்த மக்களின்மீது திணிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கே போய் புகார் கொடுத்தாலும், அந்தப் புகார் வழக்காகப் பதிவு செய்யப்படுவதில்லை. காவல் துறையினர் அதை முடிந்த வரையில் கட்டப் பஞ்சாயத்து செய்வதில்தான் கவனம் செலுத்துகிறார்கள் அல்லது வழக்குக் கொடுக்கின்றவர்கள் மீதே வழக்குத் தொடுக்கின்றார்கள். பொய் வழக்குகளைப் போடுகிறார்கள். தமிழகத்தில் உள்ள எல்லா மத்திய சிறைச்சாலைகளையும் ஓர் ஆய்வுக்கு எடுத்துப் பார்த்தால் அங்கே குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே, தேசிய பாதுகாப்புச் சட்டத்திலே சிறைபட்டுக் கிடப்பவர்களில் 80 சதவிகிதத்திற்கும் மேல் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள்...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமாவளவன் அவர்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். 2001 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 828. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக அந்த வழக்குகள் எல்லாம் விசாரணை செய்யப்பட்டு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் 442. இவ்வழக்குகளை விசாரணை செய்ததன் அடிப்படையின்பேரில் ஆதாரமில்லாத, உண்மைக்குப் புறம்பான வழக்குகள் 313 தள்ளுபடியானது. தண்டனை வழங்கப்பட்ட வழக்குகள் 3. விடுதலை செய்யப்பட்ட வழக்குகள் 9. ஆக, மீதம் 61 வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் அவற்றையும் விரைவாக முடிக்க, தக்க விசாரணை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட சங்கரலிங்கபுரம் கிராமத்திற்கு நான் சென்றிருந்தேன். அப்போது அங்கே பாதிக்கப்பட்ட ஒரு பிரிவினரான தலித் மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளைக் கேட்டேன். அப்போது பாதிக்கப்பட்ட 141 தலித் குடும்பங்களுக்கு 13 இலட்சத்திற்கு மேற்பட்ட உதவித் தொகையை, நிவாரணத் தொகையை அங்கேயே வழங்கினேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்னிடம் பேசிய தலித் மக்கள் தங்கள்





மீது வழக்குகள் போடப்பட்டிருப்பதாகவும், அந்த வழக்குகளை வாபஸ் பெறவேண்டும் என்றும் என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். நான் அந்தக் கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்து கூடுமானவரையில் அவர்கள்மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளை வாபஸ் பெற ஆவன செய்கிறேன் என்ற உத்தரவாதத்தை அந்த மக்களுக்கு அளித்தேன். அதன்படி நேற்றைக்கு முன்தினம் சங்கரலிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த தலித் மக்கள் 168 பேர்மீது போடப்பட்டிருந்த வழக்குகளை வாபஸ் பெற உத்தரவிட்டிருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது தமிழகத்திலேயுள்ள சிறைச்சாலைகளைப் பார்வையிட்டால் அங்கே இருப்பவர்களில் 80 சதவிகிதம் பேர் தலித் மக்கள் என்று இங்கே குறிப்பிட்டார். காவல் துறையினர் குற்றவாளிகளைக் கைது செய்யும்போது, அவர்கள்மீது வழக்குகளைப் போடுகிறபோது ஜாதியைப் பார்த்து வழக்குகளைப் போடுவதில்லை. ஆகவே, இத்தகைய தவறான கருத்துகளை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க வேண்டாமென்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-05

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட சங்கரலிங்கபுரம் மக்கள்மீதான வழக்குகளைத் தள்ளுபடி செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே நான் காவல் துறையினர்மீது குற்றம் சாட்டவேண்டுமென்ற பொருளில் சொல்லவில்லை; இந்தச் சமூக அமைப்பு முறையும், நிருவாக அமைப்பு முறையும் Suppression of weaker section என்கின்ற அடிப்படையில்தான் Law and Order-ஐ maintain செய்கிறார்கள். சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுகிறோம் என்ற பெயரில் யார் பலவீனமானவர்களோ அவர்களை நசுக்குவதன் மூலம் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுகிறார்கள். வலிமையானவர்கள்மீது சட்டம் பாய்வதில்லை; காவல் துறை வழக்குகளைப் பதிவு செய்வதில்லை என்பதைத்தான் என்னுடைய கருத்தாக இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் கொடுக்கின்ற புகார்கள்மீது வழக்குகள் பதிவு செய்து நடவடிக்கை எடுப்பார்களேயானால் பல இடங்களில் நடக்கிற கலவரங்கள் தடுத்து நிறுத்தப்படும். புளியங்குடி பிரச்சினையாக இருந்தாலும் சரி, கொடியங்குளம் பிரச்சினையாக இருந்தாலும் சரி,

மேலவளவு படுகொலையாக இருந்தாலும் சரி, சங்கரலிங்கபுரம் பிரச்சினையாக இருந்தாலும் சரி முதலில் புகார் கொடுக்கிறபோது காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்வதில்லை. அப்படி வழக்குப் பதிவு செய்யாமல் இழுத்தடிக்கிறபோது, தாழ்த்தப்பட்ட மக்கள் நீதி கேட்டு சாலை மறியலோ அல்லது ஜனநாயகப் பூர்வமான போராட்டத்திற்கு வருகிறபோது அவர்கள்மீது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்துகிறார்கள். தமிழ்நாட்டில் இதுவரையில் கொண்டுபட்டியாக இருந்தாலும் சரி, கொடியங்குளமாக இருந்தாலும் சரி, ஒகளூராக இருந்தாலும் சரி, சங்கரலிங்கபுரமாக இருந்தாலும் சரி, காவல் துறையினர் கிராமத்திற்குள்ளேயே புகுந்து பூட்ஸ் கால்களால் அந்த மக்களை மிதித்து, துப்பாக்கிக் கட்டைகளால் அடித்து, படுகாயப்படுத்தி பொய் வழக்குகளைப் போடுவது என்பது சேரி மக்கள்மீது மட்டும்தான் நடக்கிறது. ஆத்தூரில் ஒரு போராட்டம் நடத்துவதற்கு அனுமதி கேட்டுப்போன தாழ்த்தப்பட்டவர்களை, விடுதலைச் சிறுத்தைகளை மிகக் கடுமையாக.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சங்கரலிங்கபுரம் கிராமத்தில் நடைபெற்ற கலவரத்தில் அங்குள்ள தலித் மக்களால் தாக்கப்பட்டு மிகவும் கொடூரமான முறையில் ஒரு காவல் துறை கான்ஸ்டபிள் கொலை செய்யப்பட்டார் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். தலித் மக்கள் யாரும் அங்கே உயிரிழக்கவில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** சங்கரலிங்கபுரம் கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட காவலர் முருகன் இறந்து போனதை நான் நியாயப்படுத்தவில்லை. அதற்காக என்னுடைய வருத்தத்தையும் இரங்கலையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னால் பலமுறை புகார்கள் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கும்படி ஒரு வார காலம் தொடர்ந்து மக்கள் வலியுறுத்தியும் நடவடிக்கை எடுக்காத நிலையில்தான் சாலை மறியலுக்கு வருகிறார்கள். நான் இங்கே சொல்ல விரும்புவது, தாழ்த்தப்பட்ட மக்களின்மீது திணிக்கப்படுகிற வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதிலே காவல் துறை அக்கறை காட்டாமல் அவர்களும் சேர்ந்து அந்த மக்களை நசுக்குகிறார்கள். அண்மையிலே ஆத்தூரில் எமது இயக்கத்தைச் சேர்ந்த மாநில நிர்வாகிகள் அனுமதி கேட்டு விண்ணப்பம் கொடுக்கப்போனபோது காவல் நிலையத்திலேயே



அவர்களை மிகக் கடுமையாகத் தாக்கி, அவர்களே கொலை செய்ய வந்தார்கள் என்று வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். இது ஒரு சான்று. ஆகவே என்னுடைய வேண்டுகோள், அரச வன்கொடுமையைத் தடுப்பதற்கும், சாதிய வன்கொடுமையைத் தடுப்பதற்கும் அரசு கூர்மையாக கவனம் செலுத்தி, அதைத் தடுப்பதற்கான செயல் திட்டங்களை வடிவமைக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் விடுக்கிற வேண்டுகோள். ஆக இந்த வன்கொடுமைகளைத் தடுக்காமல், வளர்ச்சித் திட்டங்களில் மட்டும் கவனம் செலுத்துவது என்பது, வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படாமல் போய்விடும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் தலித் இன மக்கள் பாதிக்கப்பட்டாலும் அங்கே சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டவும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும் இதே காவல் துறையினரைத் தான் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அணுகுகிறார்கள். இதே காவல் துறைதான் அங்கு சென்று அந்த மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஆகவே காவல் துறையினர் மீது பொத்தாம் பொதுவாக பழி போட்டு காவல் துறையினர் எப்போதும் தலித் மக்களை அடக்குகிறார்கள், நசுக்குகிறார்கள், கொடுமைப்படுத்துகிறார்கள் என்பது போன்ற ஒட்டுமொத்தமான குற்றச்சாட்டுகளைச் சொன்னால், இதே காவல் துறையினர்தானே வந்து உங்கள் இன மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஆகவே இப்படி குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட தவறுகள் நடைபெற்றிருந்தால், அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுங்கள் என்று கேட்கலாமே தவிர, ஒட்டுமொத்தமாகக் காவல் துறையின்மீது பழிபோட்டு, அவர்களைக் கொச்சைப்படுத்துகின்ற வகையில் பேசக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை அதிகாரிகளை நான் தனிப்பட்ட முறையிலே கொச்சைப்படுத்த விரும்பவில்லை. காவல் துறை என்கிற சிஸ்டம் அந்த மாதிரி இருக்கிறது. ஆகவே அந்தத் துறையில் முதல்வருடைய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதில் ஒரு புதிய வடிவத்தை, அணுகுமுறையினை, கையாளுவதற்கான வழிவகைகளைக் காணவேண்டும் என்றுதான் இங்கே ஒரு கோரிக்கையாக வைக்கக்

கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தாழ்த்தப்பட்டவர்கள்மீது நடைபெறும் இத்தகைய வன்கொடுமைகளைத் தடுக்காமல் நாம் வேறு வளர்ச்சித் திட்டங்களில் மட்டும் கவனம் செலுத்துகிறோம் என்கிற வகையிலே திருப்தி அடைந்தால் இங்கே தமிழகம் தலைசிறந்த மாநிலமாகும் என்று நமது முதல்வர் உறுதி எடுத்தது எப்படியாகப் போய் முடியும் என்றால், இந்தியாவிலேயே தாழ்த்தப்பட்டோர்மீது வன்கொடுமை செய்வதிலே தமிழகம் தலைசிறந்த மாநிலமாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய வகையிலே அமைந்துவிடும். ஆகவே...(குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன், அத்தோடு வாக்கியத்தை முடியுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், பல துறைகளில் இன்று தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) பிற மாநிலங்களில் உள்ளவர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். சர்வதேச நிறுவனங்களும் பாராட்டுகின்றன. சற்று முன்பு பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். தலித் மக்களுக்காக மிதிவண்டிகள் கொடுப்பதைக்கூட கவர்ச்சித் திட்டம் என்று இங்கே கொச்சைப்படுத்தினார். ஆனால் அது கவர்ச்சித் திட்டம் அல்ல. பிளஸ் 1 பிளஸ் 2 வகுப்புகளில் கல்வி பயிலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் கொடுக்கின்ற திட்டத்தை இந்தியாவிலுள்ள பிற மாநிலங்கள் எல்லாம் பாராட்டியிருக்கின்றன; பின்பற்றவுள்ளன. சர்வதேச நிறுவனங்கள், 'யுனிசெப்' போன்ற நிறுவனங்கள் எல்லாம் இதைப் பாராட்டி, பிற மாநிலங்களும் இந்தத் திட்டத்தைப் பின்பற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முடிந்தது. திரு. க. முருகவேல் ராஜன்.



***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கிற 2002-2003 ஆம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மீதான மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே பங்குபெறுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒடுக்கப்பட்ட மக்களை .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன், பேசிய உறுப்பினர்களிலே உங்களுக்கு தான் அதிக நேரம் கொடுக்கப்பட்டது. அதோடு முடிந்துவிட்டது. திரு. முருகவேல் ராஜன், தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட மக்களை ஒருதாயின் வயிற்றில் பிறந்த மக்களாக அழைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட சட்டமேதை பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களுக்கு ஒரே நாளிலே ஏழு அம்பேத்கர் சிலைகளை நிறுவி, தான் தொடங்கியிருக்கிற உழைக்கும் மக்களின் பேரியக்கமான பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கொடியிலே....(குறுக்கீடு)

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகளைத் தவிர்த்துத் தரும்படிப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் நிறுவியிருக்கக்கூடிய உழைக்கும் மக்களின் பேரியக்கமான பாட்டாளி மக்கள் கட்சியின் மூவர்ணத்தில் ஒரு வர்ணமாக அண்ணல் அம்பேத்கர் அவர்கள் கண்டெடுத்த நீல வண்ணத்தை அதிலே சூட்டி, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கிற மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள், இந்த மாமன்றத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை எடுத்துரைக்கும் வாய்ப்பைக் கொடுத்தமைக்காக இந்த நேரத்திலே மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. முருகவேல் ராஜன்] [2002 ஏப்ரல் 11 முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே ஐந்து பேர் ஓர் இடத்தில் இருக்கிறோம் என்று சொன்னால், அந்த ஐந்து பேரில் ஒருவராக இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். நாட்டினுடைய-தமிழகத்தினுடைய மக்கள் தொகையிலே 19.28 சதவிகிதமாக இன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்கள், பழங்குடியின மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், உணவு, உடை, வேலைவாய்ப்பு போன்ற அனைத்து நிலைமைகளிலும், பொருளாதாரத்திலும் சமூகக் குறியீடுகளிலும் கீழான நிலையிலே இருக்கக்கூடிய மக்கள் இன்றைக்கு பட்டியலினப் பழங்குடியின மக்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாக உயர்த்துவதை தன்னுடைய இலட்சியமாக வெளியிட்டு 15 அம்சத் திட்டத்தை வழிகாட்டியாகக் கொண்டு தன்னுடைய இலக்காக அவற்றை எடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்த எண்ணத்தை நாங்கள் பாராட்டுகிறோம். அப்படி இந்தியாவிலே தமிழகத்தை முதல் மாநிலமாகக் கொண்டு வரவேண்டும் என்று முதல்வர் அவர்கள் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவிக்கிற அதேநேரத்திலே இன்னொரு செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் கவனத்தோடு உன்னிப்பாகப் பார்க்க வேண்டியிருக்கிறது. சமூகப் பொருளாதாரக் குறியீடுகளில் தமிழகத்தை உலக அளவில் உயர்ந்த மாநிலமாக மாற்ற வேண்டும் என்கிற தன்னுடைய எண்ணத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். சமூகப் பொருளாதாரக் குறியீடுகளில் உலக அளவில் எட்டிப் பிடிக்க வேண்டும் என்று சொன்னால் எத்தகையதோர் அணுகுமுறையை மாநில அரசு கொள்ள வேண்டும் என்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக பல்வேறு பரிந்துரைகளின் வாயிலாக இந்தநேரத்தில் எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலத்தைப் பார்க்க வேண்டும். நடந்து கொண்டிருக்கிற நிகழ்காலத்தைப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் கணக்கிலே எடுத்துக் கொண்டுதான் எதிர்காலத்தின் முன்னேற்றப் பாதை எப்படி இருக்க வேண்டும் என்பதில் நாம் ஒரு முடிவிற்கு வந்தாக வேண்டியிருக்கிறது. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் தமிழகத்தின் திட்டச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை கிட்டத்தட்ட 25 ஆயிரம் கோடி ரூபாய். அவற்றிலே



2002 ஏப்ரல் 11] [திரு. க. முருகவேல் ராஜன்]

S.C./S.T. மக்களுக்கும், O.B.C. மக்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை 4 சதவிகிதம்தான் என்பதை வருத்தத்தோடு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். 25 ஆயிரம் கோடி ரூபாயில் கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய் மட்டும்தான் தமிழகத்திலே 85 சதவிகிதமாக இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, பட்டியலின, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்த 4 சதவிகிதத்திலேகூட பட்டியலின, பழங்குடியின மக்கள் எத்தனை சதவிகிதத்தை அடைந்திருக்கக்கூடும் என்பதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். அப்படி என்றால் எத்தகையதோர் சமூக நீதி தமிழ்நாட்டிலே நிலவுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு 2002-2003-க்கான இந்த மானியக் கோரிக்கையிலே பாராட்டிச் சொல்லக்கூடிய சில அம்சங்களும் இருக்கின்றன. 31 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுப்பது, ப்ளஸ் 1, ப்ளஸ் 2 ஆதிதிராவிட பழங்குடியின மாணவிகளுக்கு ரூ. 6 கோடி செலவிலே மிதிவண்டி வழங்குவது, ரூ. 45½ கோடி செலவிலே பட்டியலின, பழங்குடியின மாணவர்களுக்கு விடுதிகளைக் கட்டிக் கொடுப்பது, சிறப்புக் கூறுத் திட்டத்தையும், பழங்குடியினர் துணைத் திட்டத்தையும் உயர்நிலைக் குழுவைக் கொண்டு ஆய்வு செய்வது என—இந்த உயர்நிலைக் குழுவை அமைக்க வேண்டும் என்பதை கடந்த ஆதிதிராவிட மானியக் கோரிக்கையிலே பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்திச் சொல்லியிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு முன்முயற்சி எடுத்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சி தன்னுடைய பாராட்டுக்களை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறது—வேலைவாய்ப்பை உருவாக்குகிற வகையில் புதிய திட்டங்களும், தாட்கோவை சீரமைப்பதற்கான புதிய வழிமுறையைக் காணுவது என்னும் ஒருசில நல்ல திட்டங்களும் இந்த மானியக் கோரிக்கையிலே ஆதிதிராவிடர்களுக்காக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பட்டியலின, பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக 1967-ல் கொண்டு வரப்பட்ட சிறப்புக் கூறுத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் என்பது எந்த நிலைமையிலே இருக்கிறது? அதை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழக அரசு முனைப்பு காட்ட வேண்டும் என்று சொன்னதற்குப் பிறகு அதன்மீது ஒரு குழு அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்வதெல்லாம் ஒதுக்கப்படுகிற ஒவ்வொரு துளியிலும் 18%,

[திரு. க. முருகவேல் ராஜன்] [2002 ஏப்ரல் 11

19% பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பதுதான் அந்தத் துணைத் திட்டத்தினுடைய நோக்கமும், சிறப்புக் கூறுத் திட்டத்தினுடைய நோக்கமும் ஆகும். அப்படி என்று சொன்னால் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியிலே கிட்டத்தட்ட 1000 கோடி ரூபாய்க்கு மேலாக இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை என்ன என்பதை நாம் பார்க்கிறபோது, இந்தப் புள்ளிவிவரத்தைப் பார்க்கின்றபோது மிகுந்த வருத்தத்திற்குரிய செய்தியாக இருக்கிறது. நிதிநிலை அறிக்கை குறிப்பு பகுதி-2-லே பக்கம் 113-லே சொல்லப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்திலே இந்த ஆண்டு பட்டியலின, பழங்குடியின மக்களின் நலத்திற்கான இந்தத் துறைக்கு 307 கோடியே 60 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 336 கோடியே 41 இலட்சமாகும். ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட வேண்டிய நிலைமை சட்டத்திலே வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிற நேரத்திலே கடந்த ஆண்டைவிட நாம் எவ்வளவு தொகையைக் குறைத்து ஒதுக்கியிருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். அதிலும் குறிப்பாக, பொருளாதார முன்னேற்றத்திலே உலகக் குறியீடுகளை எட்டிப் பிடிக்க வேண்டுமென்று கருதுகிற நம்முடைய முதல்வருடைய ஆட்சியிலே இந்த ஆண்டு ஆதிதிராவிட மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 10 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் என்பது மிகுந்த வருத்தத்திற்குரிய செய்தி. 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கிவிட்டு நாம் எப்படி பொருளாதார முன்னேற்றத்திற்கான வழித்தடங்களைக் காண முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முற்பகல் 11-20

கடந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே இங்கே பல்வேறு தரப்பிலேயிருந்து சட்டப் பேரவை உறுப்பினர்கள் கூறினார்கள். தமிழகம் முழுவதும் பழங்குடியின மக்களுக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்குவதிலே மிகப் பெரும் சிக்கல் இருக்கிறது; S.T. மக்கள் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளியிலே சேர்த்துப் படிக்க வைப்பதற்கு ஜாதிச் சான்றிதழ் பெறுவதிலே மிகப் பெரும் சங்கடங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், அவற்றை நீக்க வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வைத்தார்கள். குறிப்பாக, குரும்பன், குறிஞ்சன், காட்டுநாயக்கன் போன்ற சமுதாயங்களுக்கு தருமபுரி, வேலூர், திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் மிகப்



2002 ஏப்ரல் 11] [திரு. க. முருகவேல் ராஜன்]

பெரும் அளவுக்கு போராட்டங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. அப்படியொரு போராட்டத்தை திண்டுக்கல்லில் டாக்டர் ஐயா அவர்கள்கூட நடத்திக் காட்டினார்கள். ஆனால், இன்றைக்கும் அந்த நிலைமையிலே எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கல்வி படிப்பதற்கு ஜாதிச் சான்றிதழ் பெறுவதில் இத்தனை தடைகளை வைத்துக்கொண்டு சமூகக் குறியீடுகளில் எப்படி தமிழகம் உலகளவில் முதலிடத்தை எட்டிப் பிடிக்க முடியும் என்பதைப் பணிவோடு நான் இந்த அரசுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல P.C.R. சட்டம், S.C. S.T. வன்கொடுமை தடுப்புச் சட்டம் சரியாகச் செயல்படுத்தப்படவில்லை என்று பட்டியலின மக்கள் தரப்பிலே கோரிக்கை வைக்கப்படுகிறது. தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்று இன்னொரு தரப்பிலும் செய்தி வருகிறது. எனவே P.C.R. சட்டமும், வன்கொடுமை தடுப்புச் சட்டமும் சிறப்பாக, ஒழுங்காக, முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்ந்து கண்காணிப்பதற்கு தமிழ்நாட்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் ஒரு குழுவை அமைத்திட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நாங்கள் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

P.C.R. வழக்குகளை விசாரணை செய்கிற காவல் நிலையங்கள் இன்றைக்கு கட்டப் பஞ்சாயத்து மையங்களாக மாறியிருக்கின்றன. வழக்கு கொடுக்கிறவர்களிடமும் பணம் வாங்கிக்கொள்கிறார்கள்; வழக்குக்கு உட்படுத்தப்படுபவர்களிடமும் பணம் வாங்கிக்கொண்டு 100 வழக்குகள் கொடுக்கப்படுகின்றன என்றால், ஒரு சதவிகிதம்தான் அதிலே வழக்கு மன்றத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது என்ற நிலைமை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கிறது. எனவே, இதை மாற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு புதிய வகையான அணுகுமுறையைக் கையாள வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

அதைப்போல, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது என்பதை ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு பேரவையில் வெளியிடுவதை வழக்கமாகக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்கிறோம். இன்றைக்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே பெரிதாக பேசப்படுகிற ஒரு செய்தி, பொதுத் துறை ஒழிப்பு, தனியார்மயம், போக்குவரத்துத் துறையிலே தனியாருக்கு அனுமதி, அரசுத் துறைகளில் ஆட்குறைப்பு, வேலைக்கு புதியதாக ஆட்களைச் சேர்ப்பதில்லை என்று

சொல்லப்படுகிறது. இது யாரை பாதிக்கும் என்று சொன்னால், முழுக்க முழுக்க அரசாங்கம் கொடுக்கிற கல்வியையும், அரசாங்கம் கொடுக்கிற வேலை வாய்ப்பையும் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற பட்டியலின, பழங்குடி மக்களின் வயிற்றிலே இது நெருப்பு வைக்கிற செய்தியாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோஷம் இன்றைக்கு தமிழ்நாட்டிலே எழுந்திருக்கிறது. கர்நாடக மாநிலம் அதை வலியுறுத்தி தன்னுடைய சட்டப் பேரவையிலே ஒரு தீர்மானமே நிறைவேற்றியிருக்கிறது. இன்றைக்கு நீதிபதி வெங்கடாசலையா தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தச் சட்டக் கமிஷன், பரிந்துரை கமிஷன், 294 பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதிலே ஒன்று கண்டிப்பாக தனியார் துறைகளிலே இட ஒதுக்கீடு முறையை அமல்படுத்துவதற்கு வகை செய்யப்பட வேண்டும் என்று வெங்கடாசலையா கமிட்டி இன்றைக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அதிலும்கூட, மகளிர் உட்பட அனைத்துத் தரப்பிற்கும் இந்த இட ஒதுக்கீடு கிடைப்பதை உறுதி செய்வதைக் கண்காணிப்பதற்கு மத்தியிலே ஓர் ஆணையம் அமைக்கப்பட வேண்டுமென்று வெங்கடாசலையா அவர்கள் பரிந்துரைத்திருக்கிறார்கள். இந்த மாமன்றம் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல், அனைவரும் ஒன்று சேர்ந்து வெங்கடாசலையா கமிட்டியின் பரிந்துரைகளைச் சட்டமாக்குவதற்கு மத்திய அரசுக்கு வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

நீண்ட காலமாக 18 சதவிகிதம் இட ஒதுக்கீடு தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்பது சரியாக இருக்காது, 22 சதவிகிதமாக அதை உயர்த்தித் தர வேண்டுமென்று எங்களுடைய மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு கருத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, 53-வது குடியரசு தின விழாவையொட்டி நாட்டு மக்களுக்கு நம்முடைய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன், அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு சில பகுதிகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "அரசியல் ரீதியாக நமது ஜனநாயகம் மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கும் இந்தக் காலகட்டத்திலும் நாம் ஓர் அரவணைப்பு சமுதாயமாக மாறவில்லை என்பது ஆச்சரியப்படத்தக்க விஷயம்தான். தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய ஒடுக்கப்பட்ட, சமத்துவமற்ற நிலையிலிருந்து விடுபட்டு நாட்டின் குடிமக்களுக்குரிய நாகரிகம் அடைந்த மனிதர்களுக்குரிய உரிமைகளைப்



பெற்றிட வேண்டுமானால், தற்போதைய மற்றும் வருங்கால பொருளாதார அமைப்பு முறையில், தனியார் துறையில் அம்மக்களுக்குச் சாதகமான சமத்துவம் அளிக்கும் கொள்கை கைக்கொள்ளப்பட வேண்டியது மிக அவசியம்" என்று தன்னுடைய 53-வது குடியரசு தின விழாவிலே நம்முடைய ஜனாதிபதி அவர்கள் உரையாற்றியிருக்கிறார்கள். இதே கொள்கையை வலியுறுத்தி..

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து மணித்துளி கொடுங்கள்.

அதைப்போலவே, தரிசு நில மேம்பாடு-நினைத்துப் பார்க்க வேண்டும். சவுக்கடி, சாணிப்பால், கீழ்வெண்மணி போன்ற சம்பவங்கள் இன்றைக்கும் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கின்றன தமிழ்நாட்டின் வரலாற்றிலே. ஆனால் தனியார் துறைக்கு அனுமதி என்று சொன்னால், மீண்டும் அந்த நிலைமைகள் தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டுவிடும். பண்ணை முதலாளித்துவ முறை புகுத்தப்பட்டுவிடும். அப்படி வருகின்றபோது, அது நிச்சயமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இருக்கும். ஒருவேளை, தனியார் துறைக்கு அனுமதி கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று இந்த அரசு முடிவு எடுக்குமானால், குறைந்தபட்சம் இடஒதுக்கீட்டு முறை, வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம், குறைந்தபட்சக் கூலி நிர்ணயம், வேலை பெறும் உரிமை, ஓய்வூதியம் பெறும் உரிமம் ஆகியவற்றை உத்தரவாதப்படுத்த வேண்டும். அடுத்து, செருப்பு தைப்பவனாக, பிணம் சுமப்பவனாக, மனித மலத்தைச் சுமப்பவனாக இன்றைக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது ஜனநாயகத்தின் மிகப் பெரிய அவமானம், தேசிய அவமானம். அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலே அருந்ததி இன மக்கள் இடஒதுக்கீடு பெறுவதிலே மிகப் பெரும் இடர்ப்பாடும், இன்னலும் இருக்கிறது. எனவே, தமிழக அரசு அருந்ததி இன மக்களுக்கு என்று தனி இடஒதுக்கீட்டைக் கொண்டு வரவேண்டும். ஆந்திராவைப் போல் compartmental system வரவேண்டும். உத்தரப் பிரதேசத்திலே தாழ்த்தப்பட்டவர் பட்டியலுக்குள்ளே ஒரு M.B.C. இருக்கிறது. அதைப்போன்ற அணுகுமுறையைக் கொண்டு வரவேண்டும். இந்த விஷயங்களுக்காகத்தான் பாட்டாளி மக்கள் கட்சி 27 உயிர்களைக்

கொடுத்துப் போராடி இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் ஒரு செய்தி பத்திரிகையிலே வந்தது. துப்புரவுத் தொழிலாளர்கள் மேம்பாட்டிற்காக மத்திய அரசு ஒதுக்கிய 33 கோடி ரூபாய் தமிழக அரசால் இன்னமும் செலவிடப்படவில்லை என்று S.C./S.T. கமிஷன் ஒரு செய்தியைத் தருகிறது. அந்த நிலைமை என்ன என்பதை நமது அரசு ஆராய வேண்டும். அதைப்போலவே இந்த Special Component Plan and Tribal Sub Plan என்பது முறையாகச் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க குழு அமைக்கின்றபோது, அந்தக் குழுவின் தலைவராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்க வேண்டும். மகாராஷ்டிரம், கர்நாடகம் போல அரசு நிதியொதுக்கீட்டை S.C.P. மூலம் கொடுக்கக் கூடிய நிதியொதுக்கீட்டை, T.S.P. மூலம் கொடுக்கக் கூடிய நிதியொதுக்கீட்டை ஆதிதிராவிடர் நலத் துறைக்கு அளிப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். ஒவ்வொரு வருடமும் ஆந்திராவிலே பட்ஜெட் கூட்டத் தொடரிலே Action Taken Report கொடுக்கிறார்கள். ஒதுக்கப்பட்ட நிதி பழங்குடியின, பட்டியலின மக்களுக்கு எப்படிச் செலவிடப்பட்டது என்பது பற்றி ஒவ்வோர் ஆண்டும் Andhra Pradesh அரசு அறிக்கை சமர்ப்பிக்கிறது. அதைப்போன்ற ஓர் அணுகுமுறையை நமது அரசும் கையாளவேண்டும். SCP-ன்கீழ் வருகின்ற நிதியை பட்டியலின மக்கள் வாழக்கூடிய காலனியின் அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு பயன்படுத்த வேண்டும். அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மத்தியப் பிரதேசத்தினுடைய முதலமைச்சர் திக் விஜய்சிங் அவர்கள் பட்டியலின மக்களையெல்லாம் கூட்டி மாநாட்டை நடத்தி அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்கள். அது இன்றைக்கு இந்தியா முழுவதும் பேசப்படுகிறது. போபால் பிரகடனம். அதைப்போன்று நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற பட்டியலின மக்களையும், பழங்குடியின மக்களையும் அழைத்துப் பேசி அவர்களுடைய உணர்வுகளை, பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு எதிர்காலத்திலே ஒரு பாதுகாப்பு அரணை உருவாக்குவதுபோல் தமிழ்நாட்டிலே இருந்தும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பிரகடனத்தை வெளியிடுவதற்கு அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இனச் சுழற்சி முறை முறையாகப் பின்பற்றப்படுவது இல்லை. 160 கல்லூரிகளில் ஒன்றில் கூட முதல்வராக தாழ்த்தப்பட்டவர்கள் இல்லை. அண்ணா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் போன்ற இடங்களிலே 2 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் பட்டியலின. பழங்குடியின மக்கள் பேராசிரியர்களாக இருக்கிறார்கள் என்றால் சமூக நீதி எந்த அளவிலே இருக்கிறது. G.O.44-ஐச் சொல்கிறோம். Backlog vacancies 6,000-க்கும் மேலாக பட்டியலின மக்களுக்கு இருக்கிறது. அதன்மீது எந்தத் தீர்வும் ஏற்படவில்லை. G.O.44-ஐ நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது. அதை வெளியிட்டு இருக்கிறார்கள். அப்படி இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தாத அதிகாரிகள்மீது கிரிமினல் வழக்கு தொடுப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை. இந்த அரசு முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் G.O.44-ஐப் பற்றிச் சொன்னார்கள் அந்த G.O.44 கடந்த தி.மு.க. ஆட்சியில் விலக்கிக் கொள்ளப்பட்டது. ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட உடனேயே அந்த G.O.44 மீண்டும் கொண்டுவரப்பட்டு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு எந்தெந்தத் துறையில் எவ்வளவு காலியிடங்கள் இருக்கின்றன என்று கண்டறியப்பட்டுக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் அந்தக் காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நன்றி. அதேபோல் இப்போது இருக்கும் ஒதுக்கீடு, அரசு வேலைவாய்ப்பில் மட்டும்தான் இருக்கிறது. ஆனால், புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய தொழிற்கொள்கையில் நாளுக்கு நாள் வேலைவாய்ப்பு கிடைப்பது குறைந்து கொண்டிருக்கிறது. எனவே, பொது ஆதார வளங்களிலிருந்து, குறிப்பாக ரோடு கான்ட்ராக்ட், பில்டிங் கான்ட்ராக்ட், டிரான்ஸ்போர்ட் பர்மிட், கிராமங்களிலுள்ள கோயில் நிலங்கள், பொதுச் சொத்துக்கள், அரசு குத்தகை நிலம், ஒயின் ஷாப், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே வேலை பெறுவது போன்ற எல்லாவற்றிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் பங்கு

[திரு. க. முருகவேல் ராஜன்] [2002 ஏப்ரல் 11

பெறுவதற்கு வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டொரு விஷயம். முடித்துவிடுகிறேன். சிறிய விஷயம்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்ட 5 நிமிடம் முடிந்துவிட்டது.

**திரு. க. முருகவேல் ராஜன்:** முடித்துவிடுகிறேங்க. இங்கே சொல்லப்பட்டது. அரசு, வன்முறை என்று. அதை நம்முடைய முதல்வர் அவர்கள் மறுத்தார்கள். கொடியங்குளம், தாமிரபரணி, சங்கரலிங்கபுரம், இன்றைக்குக் கடைசியாக இருக்கங்குடி அந்த வரிசையிலே வந்து சேர்ந்திருக்கிறது. இன்று காவல் துறையினுடைய அடாவடித்தனம் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

விசாரணைக் கைதியாக, தானே விசாரணைக்கு முன்வந்து நீதிமன்றத்திலே சரண் அடைந்து, அருப்புக்கோட்டை சிறையிலே தன்னைக் கைதியாக ஒப்படைத்துக்கொண்ட சுப்பையா சந்தேகத்திற்கிடமான முறையில் மரணம் அடைந்திருக்கிறார். என்னை நான்கு மணிநேரத்திலே வெளியே கொண்டுவராவிட்டால் என் உயிருக்கு ஆபத்து என்று சொல்லி இருக்கிறார் சுப்பையா. அவருடைய மனைவி சொல்கிறார். இன்றைக்கு இருக்கங்குடியிலே அந்தக் கோயிலைச் சுற்றி பிழைப்பு நடத்திக்கொண்டு வந்த, அந்தக் கோயிலை உருவாக்கி....

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முருகபாண்டியன் அவர்கள் (குறுக்கீடு) முருகவேல் பாண்டியன் அவர்கள் (குறுக்கீடு) முருகவேல் ராஜன் அவர்கள் இங்கே என்னிடத்தில் 4-4-2002 அன்று இருக்கங்குடியிலே நடைபெறக்கூடிய பிரச்சினைகள் பற்றிச் சொன்னார்கள். நான் உடனடியாக தொடர்பு கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் பேசினேன். அங்கு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இல்லையென்று சொன்னார்கள். அதற்கு மறுநாள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் அங்கே ஒருசில பெண்களை அழைத்து, நீங்கள் உண்ணாவிரதம் இருங்கள் என்று சொன்னதாக எனக்குத் தகவல் வந்தது. உடனடியாக அந்த ஆலயத்திலே இருக்கின்ற செயல் அலுவலரிடத்திலும், இணை ஆணையரிடத்திலும் கூறி, தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று



2002 ஏப்ரல் 11] [திரு. பி.சி. இராமசாமி]

சொல்லியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிந்தே தவறான தகவலை அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்தவர்கள்மீது....

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியான தகவலைத்தான் சொல்கிறேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் தவறான தகவலை இந்த அவைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** உண்ணாவிரதம் இருந்தவர்களிடம் கைவிட வேண்டும், முதல்வரிடம் மனு கொடுத்திருக்கிறோம், அமைச்சரிடம் மனு கொடுத்திருக்கிறோம், நல்ல தீர்வு ஏற்படும், உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று பழச்சாறு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தவன் நான். ஆனால் நானே அங்கே உண்ணாவிரதத்தை இருக்கச் சொன்னதாகச் சொல்கிறார். எவ்வளவு தவறான செய்தி? இப்படித்தான் காவல் துறையினர் இந்த அரசாங்கத்தை misguide பண்ணுகிறார்கள்; mislead பண்ணுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவரே அங்கே தகவலைக் கொடுத்துவிட்டு, இவரே முடித்துவைத்து விட்டதாகத்தான் எங்களுக்கும் தகவல் கிடைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. க. முருகவேல் ராஜன்:** சரி, எது எப்படி இருந்தாலும் நம்முடைய பிரச்சினையாக எடுத்துக்கொள்ளலாம்.** அப்படியென்று சொன்னால், அடித்துக்கொன்றதற்கான வலுவான ஆதாரங்கள் இருக்கும்போது முதல்வர் அவர்கள் தலையிட்டு ஒரு முடிவைக் காண வேண்டும். அதேநேரத்திலே இன்னொரு செய்தி, பாலக்கோம்பை...(மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** ஒரே நிமிடம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முருகவேல் ராஜன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன நடைபெற்றது? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை முதலமைச்சர் இங்கே விளக்க வேண்டும் என்று கேட்டால் பரவாயில்லை. ஆனால் ** என்று சொல்வது சரியல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கங்குடி சம்பந்தமாக ஏதாவது குறிப்புகள் ஆதாரபூர்வமாக இருந்தது என்றால் அதை முதலமைச்சரிடத்திலே கொடுக்க வேண்டுமே தவிர, நீங்களே உங்களுடைய விருப்பப்படி சொல்லக்கூடாது. நீங்கள் கடைசியாகச் சொன்ன அந்த வார்த்தைகள் எல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. பேச்சை முடியுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** பாலக்கோம்பை, சொக்கலிங்கபுரம், ராஜாக்கால்பட்டி, லட்சுமிபுரம் காலனி, முல்லையன்பட்டி, அழகாபுரி, குள்ளப்புரம், வடுகபட்டி, முதலக்கம்பட்டி, வைகைபுதூர், இவையெல்லாம் ஏதோ உலகப் புகழ்பெற்ற, பிரசித்திப்பெற்ற தலங்களாக நாம் நினைத்துவிடக்கூடாது. இவை முதலமைச்சர் அவர்களுடைய ஆண்டிப்பட்டி தொகுதியிலே இருக்கக்கூடிய சில கிராமங்கள். அங்கு என்ன சிறப்பு என்று சொன்னால், அங்கே ஆதிதிராவிட மக்களுக்குத் தனியாக குவளை இருக்கிறது. எனவே சமூகக் குறியீட்டில், பொருளாதாரக் குறியீட்டில்...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் முருகவேல் ராஜன் அவர்கள் இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஏதாவது ஆதாரத்தோடு பேசவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி ஏதாவது ஆதாரங்கள் இருந்தால், முருகவேல் ராஜன், நீங்கள் எழுதிக்கொடுங்கள். உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது. திரு. போளூர் வரதன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முற்பகல் 11-35

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்ற விவரத்தின்படி தாழ்த்தப்பட்ட மக்கள், அதாவது S.C. மக்களுடைய பாப்புலேஷனிலே, 53.24 பர்சென்ட் படிக்காதவர்கள். அப்படியென்றால் படித்தவர்கள் 46 பர்சென்ட். S.C. 100 பேர் இருக்கிறார்கள் என்றால், அதிலே S.C.யில் 46 பேர் படித்தவர்கள், S.T.-யிலே 27 பேர் படித்தவர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த விழுக்காடுகளை வைத்துப் பார்க்கிறபோது அரசு ஆண்டுதோறும் ஒதுக்குகின்ற நிதியில் 70% கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலையும் சொல்லியிருக்கிறீர்கள். அப்படிச் சொல்லுகின்றபோது, 1,017 பள்ளிகள் S.C.-க்காகவும், 245 பள்ளிகள் S.T.-க்காகவும் இயங்குகின்றன என்ற ஒரு குறிப்பையும் சொல்லியிருக்கிறீர்கள். இவ்வளவு பெருந்தொகையை ஆண்டாண்டு காலமாக அரசு செலவழித்தும் இந்த மக்களுடைய கல்வித் தரம் என்ன என்று பார்க்கின்றபோது Poor percentage-தான் என நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். கல்வித் தரம் என்று பார்க்கின்றபோது அறிவு வளர்ச்சி உண்டாக்க வேண்டுமென்று அரசு முயலுவது தவறல்ல. ஆனால் கல்விக்காகச் செலவழிக்கின்ற பணம் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால் நிச்சயம் இல்லை என்பதைத்தான் கடந்த கால வரலாறுகள் தெளிவாகவே சொல்லியிருக்கின்றன.

பள்ளிகளிலே எஸ்.சி./எஸ்.டி. மாணவ, மாணவிகளுக்கு இரண்டு சீருடைகள் வழங்குவதற்காக 2000 ஆண்டிலே 7,27,46,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 4,31,84,000 ரூபாய் செலவு செய்ய முடியவில்லை என்று அரசாங்கத்திற்கு சரண்டர் செய்திருக்கிறார்கள். அப்படி சரண்டர் செய்கின்றபோது—இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி முழுமையாக செலவழிக்கப்பட்டால்தான் அந்த மக்களுக்கு வளர்ச்சி இருக்கும் என்று நாம் எண்ணுகிறோம், திட்டங்கள் தீட்டுகிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு சார்பிலே ஒதுக்கியது 7 கோடி, அதிலே 4½ கோடி ரூபாய்க்கு துணியையும் தைத்துக் கொடுக்கவில்லை, தைத்தவர்களுக்குக் கூலியும் கொடுக்கவில்லை என்பது வரலாறு.

அதுமட்டுமல்ல. உழவு மாடுகள் வழங்குவதற்காக அந்த ஆண்டிலே இரண்டு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு மாடு வாங்கிக் கொடுத்தது வெறும் முப்பதாயிரம் ரூபாய்க்கு மட்டும்தான். சரண்டர் செய்தது இரண்டு இலட்சத்து இரண்டாயிரம் ரூபாய். 30 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு இலட்சத்து இரண்டாயிரம் ரூபாய் கவர்மெண்ட்டுக்கு திருப்பித் தரப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. ஒவ்வொரு நிதியிலேயும் பாடப் புத்தகங்கள், நோட்டுகள் வாங்குவதற்கு என்று அந்த ஆண்டிலே 3 கோடி ரூபாய், அதாவது 300 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு கோடியே 72 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவு செய்ய முடியவில்லை என்று திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிக் கொடுத்தால் தாழ்த்தப்பட்ட மக்களுடைய கல்வித் தரம் என்ன ஆவது? ஏன் இந்தத் திட்டங்கள், எதற்காக இந்த பட்ஜெட்? எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஆதிதிராவிட மாணவர்களுக்கு, தனிப் பள்ளி இல்லாத இடங்களிலே மற்றவர்களோடு இணைந்து படிக்கின்ற பள்ளிகள் வருகின்ற இடங்களிலே, அவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுகள் வாங்குவதற்கு 940 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அதிலே 853 இலட்சம் ரூபாய் சரண்டர் செய்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கின்றபோது, கல்வியினுடைய தரம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு தமிழகத்தில் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். சொல்வதற்குக் காரணம், இரண்டு, 3 நாட்களுக்கு முன்னால், கடந்த வாரம் சட்டமன்றத்தில் நான் பேசுகின்றபோது அரசாங்கத்தினுடைய செயல்பாடுகளைப் பற்றி, எந்த அரசாக இருந்தாலும் செயல்பாடு ஒன்றுதான் என்று நான் சொன்னேன். சம்பந்தி என்ற வார்த்தையையும் நான் சொன்னேன். தேர்தல் வருகின்றபோது தமிழகத்தில் அரசியல் கட்சிகள் சம்பந்தி. இந்தக் கல்வி வருகின்றபோது, ஒதுக்கப்படுகின்ற பணம் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறதே அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எங்களுடைய சம்பந்திக்கு இது தெரியாதா? (மேசையைத் தட்டும் ஒலி) என்ன சம்பந்தி? சேரியிலே இருக்கின்ற ஒரு பெண்ணை நீ எடுத்திருந்தால் வரவேற்றிருப்போம். ஏதோ அவர் என்ன பெரிய உயர்ந்த ஜாதி மாதிரியும், நாங்களெல்லாம் உருப்படாத ஜாதி மாதிரியும் நினைத்துக்கொண்டு பேசுகிறார். நான்கூட ஒரு பிராமண இனத்திலே



பெண் எடுத்தவன். Love பண்ணி இல்லை. இரண்டு குடும்பங்களும் இணைந்து திருமணம் நடந்தது. மரியாதைக்குரிய நம்முடைய உறுப்பினர் அண்ணன் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே வரவில்லை, அவர்களுடைய தலைமையில்தான் என்னுடைய கல்யாணம் நடந்தது. இவர் சொல்வதுமாதிரி, பங்களாவாசியைப் பார்த்து சம்பந்தி என்று சொல்லிவிடக்கூடாது. மகனுக்குப் பெண் எடுத்தேன், பேரப் பெண்ணைக் கொடுத்தேன் என்று சொல்கிறார். எப்போது சொல்கிறார்? தேர்தல் வரும்போது. ஏன், இந்தப் படிப்பு விஷயம் வரும்போது வரவில்லையா சம்பந்தி வேலை. (குறுக்கீடுகள்) அண்ணே, துரைமுருகன் அண்ணே, நீங்கள் பின்னாலே பேசுங்கள், அண்ணே. (குறுக்கீடுகள்) I am not yielding to you. இல்லை, இருக்கிற உண்மைகளைப் பேசவிடுங்கள்.

முற்பகல் 11-40

**Thiru DURAIMURUGAN:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. வரதன், அவர் என்ன என்று சொல்லட்டும்.

**திரு. போளூர் வரதன்:** என்னை உண்மைகளைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. வரதன், அவர் சொல்லட்டும்.

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால், மானியக் கோரிக்கையிலே அதாவது நிதிநிலை அறிக்கையிலே பேச வேண்டும், அதை எதிர்க்கட்சித் தலைவர்கள் தங்களுடைய உறுப்பினர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அன்றைக்கு ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த அவையிலே இப்போது நடப்பது மானியக் கோரிக்கையின்மீது விவாதம். அந்த விவாதத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சரியாக நிதி ஒதுக்கப்படவில்லை, செலவு செய்யப்படவில்லை, இந்த ஆட்சியிலாவது செய்யுங்கள் என்று அவர்கள் கேட்பதிலேகூட எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது; புள்ளி விவரங்கள் சொல்வதிலே. ஏன் என்றால், உறுப்பினருக்கு அந்த உரிமைகள் உண்டு. ஆனால், அதை விட்டுவிட்டு எடுத்த மானியக் கோரிக்கைக்கு சம்பந்தமே இல்லாமல் ஒரு சம்பந்தி விஷயத்தை எடுத்து வைத்துக்கொண்டு (குறுக்கீடுகள்) இதிலே பேசிக்கொண்டிருப்பது

என்று சொன்னால் (குறுக்கீடுகள்) அதனாலே அவர், மானியத்திலே பேசப் போகிறாரா இல்லை (குறுக்கீடுகள்) அவர் சம்பந்தத்தைப் பற்றிப் பேசப் போகிறாரா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. பொன்முடி, திரு. துரைமுருகன் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதற்குள்ளே நீங்கள் எழுந்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். அதற்குள்ளே நீங்கள் ஏன் பதில் சொல்கிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நான் கருத்தைச் சொல்கிறேன். ஆகையினாலே மாண்புமிகு பேரவைத் தலைவர் தீர்ப்புச் சொல்ல வேண்டும். இந்த நிலையில் நான் கேட்பது என்னவென்றால் மாண்புமிகு உறுப்பினர் மானியத்திலே பேசுகிறாரா? இதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதிக்கிறாரா? இதுதான் வாதம் என்று சொன்னால் எல்லோரும் செய்தால், இந்த அவையினுடைய வாதம் என்னவாகும்? தங்களின் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திருமதி டி. யசோதா:** தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா அவர்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய அரசாங்கம் முந்தைய அரசாங்கத்தை விமர்சனம் செய்வது நடைமுறை. இன்றைக்கிருக்கிற அரசாங்கம் செய்கிற தவறுகளை, வரப்போகிற அரசாங்கம் சுட்டிக்காட்டுவது என்பது சாதாரணமானதுதான். இங்கே சட்டமன்றத்திற்குள்ளே வரக்கூடிய வாய்ப்பிருந்தும் வராமல், சட்டமன்றத்திலே நடக்கின்ற நடவடிக்கைகளை சந்திக்காமல், அதிலும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை அறிக்கைகளின் மூலமாக, 'பெட்டி வாங்கிக் கொண்டார்கள்' என்றெல்லாம் இழிவுபடுத்திப் பேசுவதற்கு, அதற்கு சம்பந்தி முறை என்று அவரே கூறுகின்றபோது, அதை விமர்சனம் செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கின்றதா, இல்லையா? (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) சரி, சரி. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவதெல்லாம் (குறுக்கீடு) சார், இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒவ்வொன்றுக்கும் குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறார். அவர் பேசுவதில் அர்த்தம் இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களினுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னால் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் நான் சொல்வதைக் கேட்க வேண்டும். யார் குறுக்கிட்டாலும் இதிலே நான் சொல்கின்ற ஒரு கருத்து (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், பேச்சைத் தொடருங்கள்.

**திரு. போளூர் வரதன்:** அரசாங்கத்தினுடைய குறிப்பேடுகளில் நீங்கள் செய்திருக்கின்ற .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடு) திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாகத்தான் விவரங்களைச் சொல்கின்றேன்; தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் நேரடியாக என்னிடத்திலே அவர்கள் தரக்குறைவான தாக்குதலை உருவாக்கக்கூடிய நிலையிலே பேசுவார்கள் என்று, சொன்னால் .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எதுவாக இருந்தாலும் பேரவைத் தலைவரை நோக்கிப் பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** இந்தச் சட்டமன்றத்திலே பெண்களுக்கு, இந்தச் சட்டப்பேரவையில் பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்கின்றதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதுவாக இருந்தாலும் பேரவைத் தலைவரை நோக்கி நீங்கள் பேசுங்கள்; கருத்தைச் சொல்லுங்கள். அதிலே ஒன்றும் தவறில்லை. (குறுக்கீடுகள்)

**திருமதி டி. யசோதா:** முன்னாள் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் நேரடியாக என்னிடத்திலே மிகத் தரக்குறைவாகப் பேசுகின்ற அந்த நிலைமையைத் தயவுசெய்து நீங்கள் தடுத்தாக வேண்டும். பெண் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அனுமதியில்லாமல் ஒலிபெருக்கியினுடைய துணையும் இல்லாமல் பேசுகின்ற பேச்சுக்கள் அவைக் குறிப்பிலே ஏறாது. ஏதாவது பேசுவதாக இருந்தால், என்னுடைய அனுமதியைப் பெற்ற பிறகு நீங்கள் பேசுங்கள். திரு. துரைமுருகன் அவர்கள் கேட்டார்கள். மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது கடந்த கால ஆட்சியிலே இருக்கக்கூடிய சில தவறுகளைச் சுட்டிக்காட்டி, ஒப்பிட்டுக் காட்டிப் பேசுவது எல்லாம் ஒன்றும் தவறு இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தைத்தான் வரதன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். அந்தப் பேச்சுக்கு கொஞ்சம் சுவை சேர்க்க வேண்டும் என்பதற்காக சில கருத்துகளைச் சேர்த்துச் சொல்கிறார். அவ்வளவுதானே தவிர வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-45

**திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும். பேரவைத் தலைவரிடத்திலிருந்து நான் இதை எதிர்பார்க்கவில்லை. நியாயத்தை, நேர்மையை, நியாயமான பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, ஒவ்வொருவருக்கும் பேசுகின்ற பாணி என்று ஒன்றிருக்கிறது. உங்களுக்கு ஒரு பாணி இருக்கிறது. எனக்கொரு பாணி இருக்கிறது. அந்தப் பாணியிலே வரதன் அவர்கள் சொல்ல வேண்டிய சில கருத்துகளை அவர் இங்கே வலியுறுத்திச் சொல்வதற்கு, சில கருத்துகளைச் சொல்கிறார். அது அவையின் உரிமையை மீறிய கருத்துகள் அல்லது அவை மரபை மீறிய கருத்துகள் என்றால் நீங்கள் சொல்லுங்கள், நான் அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, நீங்கள் அன்றைக்கே சொன்னீர்களே, நிதிநிலை அறிக்கையிலே மட்டும் பேசுங்கள் என்று. அப்படி மானியக் கோரிக்கையின் மீது பேசுங்கள் என்று சொல்லுங்கள். இந்த பாணி வேண்டாம். இது போணி ஆகாத பாணி என்று ஏன் சொல்லக்கூடாது? (சிரிப்பு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் போணி ஆகுமா, ஆகாதா என்று சொல்லட்டும்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போணியாவது இல்லை என்பதைத்தான் இப்போது ஜனங்கள் சொல்லிவிட்டார்களே. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் எதற்கு சொல்ல வேண்டும் அதை? போணி ஆகாமல்தான் வெளியே இருக்கிறீர்கள். திரும்பத் திரும்ப போணி ஆகாது, போணி ஆகாது என்று பேசுவதற்கு என்ன சாக்கனாங் கடையா இது? (குறுக்கீடுகள்) 30 வருடமாக நாங்கள் போணி ஆகவில்லை என்பதை எத்தனை முறை கை கட்டி வாய் பொத்தி அன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, இப்போது நீங்கள் பேசினீர்கள் அல்லவா இது உங்கள் பாணி. வரதன் பேசுகிறார் அல்லவா, அது அவருடைய பாணி. (குறுக்கீடு) யசோதா பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தமிழகத்திலே போணி ஆகவில்லை என்றாலும் தமிழகத்தைச் சேர்த்து ஆளுகின்ற டெல்லிப் பட்டணத்தை இன்றைக்கும் நாங்கள் கைவிடாமல் கோட்டையைப் பிடித்து, 14 மாநிலங்களிலே இந்திய தேசிய காங்கிரஸ் ஆட்சியிலே இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் குண்டாஞ் சட்டிக்குள்ளே குதிரை ஓட்டுகிறவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, இது யசோதா அவர்களுடைய பாணி. (சிரிப்பு) அவரவர்களுக்கு ஒரு பாணி இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டுகள் தமிழகத்திலே காங்கிரஸ் போணியாகாத கட்சி என்று சொன்னவர் யார் தெரியுமா? நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர். இனிமேல் போய் காங்கிரஸ் பக்கமே திரும்பிக்கூட பார்க்க மாட்டேன் என்று சொல்லச் சொல்லுங்கள் அவர்களை. (மேசையைத் தட்டும் ஒலி) கடைக்கண் பார்க்காதா அன்னை சோனியா காந்தியினுடைய பார்வை, 10, ஜன்பத்திலேயிருந்து படாதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிற நீங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) யாரைப் பார்த்துப் பேசுவது? அன்னை சோனியா காந்தி காங்கிரஸ்



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224371
சென்னை-600 008

கட்சியினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னாலே இந்திய அரங்கிலே அத்தனை கட்சிகளும் ஒன்று சேர்ந்து 24 கட்சிகளும் மோதிப் பார்த்தார்கள். 14 மாநிலங்களிலே அன்னை சோனியா காந்தி இன்றைக்கு ஆள்காட்டியவர்கள்தான் Chief Minister-ஆக இந்த மண்ணிலே இருந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், நீங்கள் ஒரு வழியாக வாருங்கள்.

**திரு. போளூர் வரதன்:** வந்துவிடுகிறேன். இவர்கள் போணி ஆகாத கட்சி என்பதற்கு பதில் சொல்லியே தீரவேண்டும். அன்னை இந்திரா காந்தி இறந்த பின்னாலே, அதற்குப் பின்னாலே சரிவு ஏற்பட்டது. அந்தச் சரிவை இன்றைக்கு இந்திய மண்ணிலே சரிக்கட்டி 14 முதலமைச்சர்களை—பன்னிரண்டா—நாளைக்கு மறுநாள் அஸ்ஸாம் கௌஹாட்டியிலே கூட்டியிருக்கிறார்கள், அம்மா சோனியா காந்தி. அங்கேயிருந்தாவது பார்வை படாதா என்று பார்த்துக் கொண்டிருக்கிற நீங்கள் எங்களைப் போய் போணி ஆகாத ஆள் என்று சொன்னால் எனக்குப் புரியவில்லை அது. காரணம் அண்ணன் துரைமுருகன் அவர்கள் இருக்கிற இயக்கத்திற்கு வேண்டுமானால், ஏதாவது சட்டமன்றத்திலே பேசி பத்திரிகையிலே வர வேண்டும் என்று பார்க்கலாம். அது வேண்டுமானால் இருக்கலாமே தவிர டெல்லி போகும்போது எந்த வாசல் திறந்திருக்கும் என்று பார்த்துக்கொண்டு போகிற இயக்கம் இல்லை நாங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல இவர் சொல்கிறார்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக் கொண்டிருக்கிறார், (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அனுமதி இல்லாமல் பேசக் கூடாது. வரதன் பேசுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** 1999-2000 ஆண்டிலே மத்திய சர்க்கார் (குறுக்கீடு) ஒன்றே ஒன்று சொல்லிவிடுகிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். வரதன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** 1999-2000 ஆண்டுக் காலத்திலே துப்புரவுத் தொழிலாளப் பணியாளர்களுக்கு NSTFDC-யிலே 45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அதாவது என்னுடைய அனுமதி இல்லாமல், என்னுடைய அனுமதி இல்லாமல் ஒலிபெருக்கியினுடைய துணையும் இல்லாமல் பேசக் கூடிய பேச்சுக்கள் அவைக் குறிப்பிலே ஏறாது. நீங்கள் ஒலிபெருக்கி துணை இல்லாமல் பேசுகிறீர்கள். பேசுவதற்கு அங்கேயிருந்து பதில் வருகிறது, அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) வரதன், பேசுங்கள்.

முற்பகல் 11-50

**திரு. போளூர் வரதன்:** 1999-2000 ஆண்டிலே தி.மு.க. அரசு இருந்தபோது மத்திய சர்க்கார் NSTFDC-யிலே 45 கோடி ரூபாய் அந்தத் துப்பரவுப் பணியாளர்களுடைய வளர்ச்சி நிதிக்கு திட்டங்களைக் கொண்டு வந்து பணம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள், தாட்கோ மூலமாக. அதிலே 20 பேர் கொண்ட குழுக்களை அமைத்து அந்தக் குழுவிற்கு 4 இலட்சம், 4 இலட்சம் ரூபாய் கொடுத்து அந்த மக்கள் முன்னேறுவதற்கு பினாயில், ஊதுபத்தி போன்ற சின்ன சின்ன பொருட்களை வீட்டிலே தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதிலே 50 சதவிகிதம் சப்சிடி, 50 சதவிகிதம் திருப்பிக் கட்ட வேண்டும். இந்த நிலையிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற பணம் 37 கோடி ரூபாயை இவர்கள் ஆட்சியிலே சுவாகா பண்ணி ஏப்பம் விட்டிருக்கிறார்கள். யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள் சொல்லமுடியுமா? பினாமி பெயரிலே. ஆப்டெக்ஸ் என்று ஒரு கம்பெனி. இதிலே யார் லோன் வாங்கினாலும் தாழ்த்தப்பட்டவர்கள்தான் வாங்க முடியும். ஆப்டெக்ஸ் கம்பெனிக்காரன் எந்த ஜாதி, 1999-லே அவருக்கு 42 இலட்ச ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். 2000-லே 37 இலட்ச ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். ஒட்டுமொத்தமான நிதியில், 45 கோடி ரூபாயில் 37 கோடி ரூபாயை செலவு செய்துவிட்டதாக கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது தாட்கோவிலே. அதுமட்டுமல்லாமல் அன்றைக்குக் கொடுத்த பணம் இன்னும் 8 கோடி ரூபாயை செலவு செய்ய முடியவில்லை என்று வங்கியிலே டெபாசிட் செய்து வைத்திருக்கிறார்கள். இதுதான் உங்கள் ஆட்சியிலே, எங்கள் சம்பந்தி ஆட்சியிலே எங்களுக்குச் செய்த சாதனையா? நீங்கள் எங்களுக்குச் செய்த உதவிகளா? நான் கேட்கிறேன். அதுமட்டுமல்லாமல், சொல்லுகிறார், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்னமோ இரட்சகர்போல தம்பி, தங்கை போல. நீங்கள் என்ன பெரிய அப்படி என்று வீரமான வசனம். அது ஒன்றும் இல்லை. 64 வருடத்திற்கு முன்னாலே நடந்ததை எழுதுகிறார் பத்திரிகையிலே. எனக்குக்கூட பத்திரிகை பலம் இருந்திருந்தால் நான்கூட எழுதமுடியும். எழுதிக்காட்டுகிறார். அவர்

சொல்கிறார், 1938 வரலாறு சொல்கிறார். என்ன சொல்கிறார் என்றால் திருவாரூரிலே அப்போது அவருக்கு 14 வயது (குறுக்கீடுகள்) நம்புகின்ற மாதிரி நீங்கள் எல்லாம் பார்க்க வேண்டும். 14 வயதினிலே, 14 வயதினிலே இங்கே எழுதப்பட்டிருக்கிறது. பத்திரிகையிலே சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, இங்கே பார்த்துப் பேசுங்கள், உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். நீங்கள் அமருங்கள். வரதன் மானியக் கோரிக்கையை 2, 3 மணித்துளிகளிலே முடித்துவிடுங்கள். உட்காருங்கள், உட்காருங்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியின் தலைமையும், மாண்புமிகு திரு. போளூர் வரதன் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியின் தலைமையும், அகில இந்திய அளவில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், டெல்லியிலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது தெரியாமலேயே இங்கே இவர்கள் சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில், திரு. முரசொலி மாறன் அவர்கள் இரகசியமாக திருமதி சோனியா காந்தி அவர்களைச் சந்தித்து நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய அகில இந்திய தலைமையில் இருக்கின்றவர்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, இங்கிருக்கின்ற கட்சித் தலைமையின் அனுமதியோடு இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும்போது, இவர் புரியாமல் போணி ஆகாத கட்சி அது, இது என்று பேசிக்கொண்டிருக்கிறார். நாளை மாண்புமிகு உறுப்பினர், அவருடைய தலைமையிடத்தில் வாங்கிக் கட்டிக்கொள்ளப்போகிறார் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அமைச்சர், மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற சோனியா அம்மையார் அவர்களைச் சந்தித்துப் பேசினார் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. நம்ம ஊரிலேதான், ஒரு கட்சி, இன்னொரு கட்சிக்கு சாவு வாழ்வுக்குக்கூட போவது கிடையாது. ஆனால்



டெல்லியில் ஒரு கட்சியினர் எதிர்க்கட்சியோடு கலந்துரையாடுவார்கள். அவர்கள் விருந்திற்கு அழைத்தால் போவார்கள். திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்வார்கள். சென்ட்ரல் ஹாலிலே உட்கார்ந்து பேசுவார்கள். ஆகையால், மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் திருமதி சோனியா காந்தி அவர்களோடு பேசி இருந்தால் அது தப்பில்லை. அது டெல்லியினுடைய அரசியல் மரபு. (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்தே நடந்த சந்திப்பு என்று நான் குறிப்பிடவில்லை. இரகசியமாகச் சந்தித்தார் என்ற தகவல் கிடைத்தது என்றுதான் குறிப்பிட்டேன்.

**திரு. துரைமுருகன்:** இதிலே இரகசியம் ஒன்றும் கிடையாது. பெரிய என்ன இன்டர்நேஷனல் இரகசியமா இருக்கிறது? ஆகவே எதிர்க்கட்சியோடு பேசுவதில் தவறு இல்லை. ஆனால் பேசுவதை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் அரசியலில், இவர்கள் இவர்களோடு தான் சேருவார்கள், அவர்கள் அவர்களோடுதான் சேருவார்கள் என்று பத்திரிகையிலே ஹேஷ்யம் எழுதலாம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதையே ஆதாரபூர்வமாகக் கொண்டு இங்கு சொல்லக்கூடாது. எனக்குக்கூட இரகசியங்கள் வந்து இருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கு இருக்கிற, டெல்லியிலே இருக்கிற B.J.P. தலைவர்கள் சிலருக்கு தூதுவிட்டு, நான் இப்படி பேசிக்கொண்டிருக்கிறேன், நீங்கள் எனக்கு உதவுங்கள் என்பதைப் போலவும், மீண்டும், இவர்களிடத்திலே இவர்களுடைய தோழமைக் கட்சித் தலைவர்களைப் பார்த்து நான் ஆட்சியிலே இருக்கிறேன். ஆகவே B.J.P. யோடு நெருக்கமாகக் காட்டிக்கொள்வேன், ஆனால் கடைசி நேரத்திலே நாம் ஒன்றாகத்தான் இருக்கப் போகிறோம் என்று சொல்வதாகக்கூட எனக்குச் சில தகவல்கள்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசியதுதான் கற்பனை செய்தி. (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய ஹேஷ்யங்களை, அவருடைய யூகங்களை அவர் இங்கே தெரிவித்து இருக்கிறார். என்னிடத்தில் உளவுத் துறை இருக்கிறது என்பதை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** அம்மையார் அவர்கள் என்னுடைய செய்தியைக் கற்பனை என்கிறார்கள். நான் அவருடைய செய்தியைக் கற்பனை என்கிறேன். காலம்தான் எது கற்பனை என்று முடிவு கட்டும்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-லே 18 சதவிகிதமாகவும், 1990-லே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வரதன் அவர்களே, இன்னும் 2, 3 பேர் பேசவேண்டும். (குறுக்கீடு)

**திரு. போளூர் வரதன்:** சார், நான் மானியக் கோரிக்கையின் மீதுதான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதற்காகச் சொல்லவில்லை.

**திரு. போளூர் வரதன்:** இல்லை, இன்னும் நான் பேசவே இல்லை, என்னுடைய பேச்சினை நான் தொடங்கவே இல்லை. நீங்களே எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நிறைய நேரத்தைக் கொடுத்துவிட்டீர்கள். நான் பேசவே இல்லை, நான் பேசவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இன்னும் 3 நிமிடங்களில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பைத் தாருங்கள். 1971-லே 18% கொடுத்ததாகச் சொல்கிறார். 1990-லே 18+1 கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார். இந்த 19% ரிசர்வேஷனை கொடுத்தாலும் அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஒதுக்கப்பட்ட நிதி அந்தத் துறை மக்களுக்கு, அந்த இன மக்களுக்குப் பயன்படவில்லை என்ற குற்றச்சாட்டை ஆதாரபூர்வமாக நான் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல. நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுடைய ரட்சகர் என்று சொல்லவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. நான் அந்த இனத்தைச் சார்ந்தவன். அம்பேத்கருக்கு தம்பி, தங்கச்சி,—நான் தம்பி, யசோதா அக்கா அவர்கள் தங்கச்சி என்று எழுதுகிறார். நாங்கள் அம்பேத்கருடைய பேரப் பிள்ளைகள், கேட்கிறோம், எங்களுக்கு உரிமை இருக்கின்றது, கேட்கிறோம். மணிமண்டபத்தைப் பற்றி பெரியதாகச் சொல்கிறார். அம்பேத்கர் பெயரிலே அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்று சொல்லிவிட்டு, கடைசியிலே மணிமண்டபத்திற்கு வருகிறார். அம்பேத்கருடைய மணிமண்டபம் கட்டுவதற்கு இங்கே இருக்கின்ற முதலமைச்சர் அம்மா அவர்கள் 1993 ஆம் வருடம், 5 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி, 5 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, அழகிய



ஒரு மணிமண்டபத்தைச் சென்னையிலே கட்ட வேண்டுமென்று இந்த அவையிலே அறிவித்தார்கள். அதற்கான நடவடிக்கையையும் எடுத்தார்கள். ஆட்சி மாற்றத்திற்குப் பின்னாலே, காட்சி மாற்றம் வரும் என்று சொல்வார்கள். அந்த மாதிரி தமிழகத்திலே ஒரு காட்சி மாற்றம் வந்தபோது, நீதிமன்ற வழக்கைக் காட்டி, 75 சென்ட்டிலே ஒரு மணிமண்டபம், அதைச்சுற்றி 75 சென்ட்டிலே பார்க் என்று ஒன்றைப் போட்டு, 1½ ஏக்கரில் வெறும் 1.00 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, —அந்த நிதியைக்கூட 'தாட்கோ'-வினிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். 'தாட்கோ' துறை, வெறும் 57 இலட்சத்து, 33 ஆயிரத்து 81 ரூபாயில் —அவர் சொன்னாரே, போணியாகாத கட்சி என்று, போட்டி கட்சி என்று, போண்டி கட்சி என்று,—கோழி முட்டை மாதிரி, உடைந்த கோழி முட்டை கீழே போட்டால் எப்படி இருக்குமோ, அப்படிக் கவிழ்த்துப் போட்டமாதிரி, ஒரு மணிமண்டபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பெயர் மணிமண்டபமா? சொல்வதற்கே, பார்ப்பதற்கே ரொம்ப அருவெறுப்பாக இருக்கிறது. ஒதுக்கீடு செய்த பணத்தைக்கூட ஒழுங்காக செலவு செய்ய முடியாமல், அம்பேத்கருக்கு தான்தான் பெரிய வாரிசு என்று சொல்லக்கூடியவர், ஒதுக்கீடு செய்த 1 கோடி ரூபாயைக்கூட செலவழிக்காமல், அதிலே 42 இலட்சம் ரூபாயை மீதம் செய்து, துறைக்கு அனுப்பப்பட்டது என்ற தகவல் இந்த அரசாங்கத்திலே சொல்லப்படுகிறது என்றால்,—நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரட்சகர்தான், அதனால்தான் கேட்கிறோம். எந்தக் காலத்திலே, தேர்தல் வரும்போது வேண்டுமென்றால், சம்பந்தி என்று சொல்லிவிட்டு ஏமாற்றலாமேதவிர, இந்த உண்மைகளையெல்லாம் வரலாற்றிலே மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது.

அதுமட்டுமல்ல. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, சமத்துவபுரம்,—சமத்துவபுரத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள், ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். சமத்துவபுரம்—அமைக்க வேண்டுமென்றால், அதிலே என்னென்ன இருக்கவேண்டுமென்று சொல்லிவிட்டு,—அரசு, நான் சொல்லவில்லை, அரசினுடைய கெஸட்டிலே அறிவிக்கப்பட்டதைத்தான் நான் சொல்கிறேன். அதிலே அவர்கள் சொல்கிறார்கள்—விதிமுறைகளையெல்லாம் சொல்லிவிட்டு, 100 சமத்துவபுரங்கள் அமைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்குப் பணம் தாட்கோ-விலிருந்து S.C.-க்கு ஒதுக்கப்பட்ட பணத்தை எடுத்து, ஒட்டுமொத்தமாக பணம் கட்டி, ஒவ்வொருவருக்கும் எத்தனை percentage? 40%, 25%, 30% என்று பிரிக்கிறார்.

[திரு. போளூர் வரதன்] [2002 ஏப்ரல் 11

100 இடங்களிலே இந்தத் துறையைச் சார்ந்த பள்ளிகள் அமைக்க வேண்டுமென்று விதியிருக்கிறது. இந்த 100 இடங்களிலே எத்தனை இடங்களிலே இந்த S.C./S.T. பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் சொல்ல வேண்டும்.

அதுமட்டுமல்ல. 2001-லே நடந்த தேர்தலிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலே அமைந்திருக்கிற இந்தக் கூட்டணி—இங்கேயிருக்கிற பெரும்பாலானவர்கள் அந்தக் கூட்டணியைச் சார்ந்து வெற்றி பெற்றவர்கள்தான்—44 பேர் இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினர்களாக, S.C./S.T.-யிலே இருக்கிறோம். அந்தக் கூட்டணியிலே இருப்பவர்கள் 3 பேர். 41 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டணியிலே இருக்கிறோம். இதை வைத்துப் பார்க்கின்றபோது, தாழ்த்தப்பட்ட மக்கள் ஒட்டுமொத்தமாக, என்ன பெயரைச் சொல்லிக்கொண்டு போனாலும், புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள் நீங்கள் என்று தமிழகத்திலே புறக்கணித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள், எதை வேண்டுமானாலும் பேசுவோம், எழுதுவோம் என்று சொன்னால், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், இன்னும் ஒரு மணித் துளிக்குள் முடித்துவிடுங்கள். இன்னும் 5 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. போளூர் வரதன்:** முடித்து விடுகிறேன். S.T. மக்களைப் பற்றி இரண்டு நிமிடங்கள். சாதிச் சண்டைகள் என்று வருகிறபோது, தஞ்சை மாவட்டத்திலே கீழ்வெண்மணி, தாமிரபரணி ஆறு, திருநெல்வேலி, அங்கே என்ன நடந்தது? 1998-லே என்று நினைக்கிறேன்; 1997-98-லே. இராமநாதபுரத்திலிருந்து நிறைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் வந்திருப்பீர்கள். தேவையில்லாத ஒரு சண்டையை உருவாக்கி, இராமநாதபுரத்திலே எத்தனை பேர் செத்தார்கள்? மேலவளவிலே.... (குறுக்கீடுகள்) வர்க்கப் போராட்டம்தான் சொல்கிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ** அதைத்தான் சொல்கிறேன். (கூச்சல்-குழப்பம்) அமைச்சர், அமைச்சர் அவர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், கீழ்வெண்மணி சம்பவம் நடந்த காலத்திலே தி.மு.க. ஆட்சி இல்லை.

**திரு. போளூர் வரதன்:** முதலமைச்சர் இல்லை.

**திரு. துரைமுருகன்:** கீழ்வெண்மணி கிராமத்திலே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. போளூர் வரதன்:** மேலவளவு பற்றிச் சொல்கிறபோது அவர் முதலமைச்சர் என்று சொல்ல வந்தேன். முருகேசன் என்ற ஒரு பஞ்சாயத்துத் தலைவரே அங்கே, மேலவளவிலே வெட்டிக் கொல்லப்பட்டார். அந்தச் சூழ்நிலை இருக்கின்றபோது, ஆட்சிகள் மாறுகின்றபோது தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு காலகட்டங்களிலே பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆட்சி வரும்போது, யார் ஆட்சியில் முதலமைச்சராக இருந்தாலும், S.C.-யிலே ஒரு அமைச்சரைப் போட்டுவிடுகிறார்கள். அந்த அமைச்சருக்குரிய மரியாதையைக் கொடுத்து, அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை; கொடுக்கின்ற பணம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை. ஆகவே, நான் மெத்தப் பணிவோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நாங்கள் குறிப்பிட்ட இந்தப் பணமெல்லாம். செலவழிக்காதது, இந்த 37 கோடி ரூபாய் ஊழல் நடந்திருப்பதைக் கண்டுபிடிக்க குறைந்தபட்சம் ஒரு C.B.,C.I.D. enquiry-யாவது போட்டு, நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இந்தத் துறையினுடைய அமைச்சர் பொறுப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஏற்கெனவே சில உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல, 25 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தியாவிலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியின மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நலத் திட்டங்கள் சம்பந்தமாக மத்திய அரசு நிறைவேற்றி இருக்கக்கூடிய சிறப்புக் கூறு திட்டத்தின்

[திரு. கே. மகேந்திரன்] [2002 ஏப்ரல் 11

அடிப்படையில் அனைத்துத் துறைகளிலும் குறிப்பிட்ட நிதி ஒதுக்கீட்டினை வழங்குவதற்கு தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று முதலிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 2000-2001 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியாக இருந்தாலும் சரி, 2001-2002 ஆம் ஆண்டு, 2002-2003 ஆம் ஆண்டு என்று படிப்படியாக நாம் பார்த்தோம் என்றால், இந்த ஆண்டுகளிலே படிப்படியாக நிதி என்பது இந்தத் துறைக்கு குறைந்து கொண்டே வரக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. 19 சதவிகிதத்திற்கும் அதிகமாக வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியின மக்கள் வாழ்க்கை சம்பந்தப்பட்ட, சமூகப் பொருளாதார மேம்பாடு சம்பந்தப்பட்ட இந்த நலத் துறைக்கு கூடுதலான நிதியினை ஒதுக்குவதற்கு — இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் இந்தத் துறைக்கு கூடுதலாக நிதி ஒதுக்குவதற்கு— தமிழக அரசு முன்வரவேண்டுமென்று முதலிலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதேபோன்று, இந்தக் கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது; தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உயர்கல்வி படிப்பதற்கு 6,500 ரூபாய், தொழிற்கல்வி படிப்பதற்கு 7,000 ரூபாய் கடனுதவி மானியமாக வழங்கப்படும் என்று. ஆனால் கடந்த ஆண்டைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்திலே, திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களிலே படிக்கக்கூடிய, உயர்கல்வி படிக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய கடன் உதவி முறையாகக் கிடைக்கவில்லை என்ற தகவலைச் சொல்வதோடு, அந்த மாணவர்களுக்கு முறையான நிதி, கடன் உதவி கிடைக்க வேண்டுமென்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். இன்றைக்கும், இந்தக் கோரிக்கை முழுமையாக நிறைவேறவில்லை என்ற விவரத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு அரசின் சார்பாக, ஆதிதிராவிடர் நலத் துறை சார்பாக நடத்தப்படக்கூடிய உணவு விடுதி, தங்கும் விடுதிகளிலே தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு கடந்த ஆண்டு 225 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக மாதம் உணவுக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய மாணவர்களுக்கு—பேரவை உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது—ஒரு மாதத்திலே 30 நாட்களுக்கு உணவு அருந்த வேண்டுமென்றால், பள்ளிப்படிப்பைப் படிக்கக்கூடிய, கல்லூரிப்படிப்பைப் படிக்கக்கூடிய மாணவர்கள் உணவை அருந்தவேண்டுமென்றால் மாதத்திற்கு 300 ரூபாயிலே தரமான உணவு கிடைக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்த்து, இந்த அரசு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய விடுதிகளுக்கு வழங்கக்கூடிய கட்டணத்தை 300 ரூபாயிலிருந்து 900 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 11] [திரு. கே. மகேந்திரன்]

அதேபோன்று சமூக நீதியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 989 என்கின்ற கணக்கு தமிழகத்திலே கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஒரு வெள்ளை அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசிலே இருக்கக்கூடிய பல்வேறு துறைகளிலே ஆய்வு செய்து கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த வெள்ளை அறிக்கையில் 6,000 பின்னடைவுப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன, அந்தப் பின்னடைவுப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே இருக்கக்கூடிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் அன்றைக்கு சட்டப் பேரவை உறுப்பினர்களாக இல்லாதபோது, அந்த வெள்ளை அறிக்கை என்பது உண்மையான அறிக்கையல்ல என்ற விவரத்தைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழக அரசிலே இருக்கக்கூடிய அனைத்துத் துறைகளிலும் கடந்த பல ஆண்டு காலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்குக் கிடைக்க வேண்டிய இட ஒதுக்கீடு என்பது முறையாகக் கிடைக்கவில்லை. பின்னடைவுப் பணியிடங்கள் என்று கடந்த கால ஆட்சியிலே சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய அந்த 6,000 இடங்கள் மட்டுமல்ல, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள், 27 ஆயிரம் பின்னடைவுப் பணியிடங்கள் இருக்கின்றன என்று. உண்மையிலே இன்னும் கூடுதலான பின்னடைவுப் பணியிடங்கள் என்பது நிரப்பப்படாமல் இருக்கின்றன. இலட்சக் கணக்கான இடங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு கிடைக்க வேண்டிய அந்த இடஒதுக்கீடு முறையாக அமலாக்கப்பட வேண்டுமென்றால், மீண்டும் இந்தச் சட்டப் பேரவையிலே இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளுடைய சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் சார்பாக அனைத்துத்

[திரு. கே. மகேந்திரன்] [2002 ஏப்ரல் 11

துறைகளிலும் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மீண்டும் ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கூட்டுறவுத் துறையில் பட்டய மேற்படிப்பு படித்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இல்லாத சூழ்நிலையில் பட்டய மேற்படிப்பு படித்தவர்களுக்கு வழங்கப்படக்கூடிய கூட்டுறவு துணை மேலாளர் பதவி என்பது நிரப்பப்படாமல் இருந்தது. அந்தத் துணை மேலாளர் பதவியை நிரப்புவதற்கு ஆதிதிராவிடர் நலத் துறை சார்பாக ஒரு தேர்வு நடத்தப்பட்டு 210 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான பட்டய மேற்படிப்பு சொல்லிக் கொடுக்கப்பட்டும் கடந்த இரண்டு ஆண்டு காலமாக கூட்டுறவுத் துறையிலே அந்தத் துணை மேலாளர் பதவி இன்றைக்கும் நிரப்பப்படாமல் இருக்கிறது. இதுசம்பந்தமாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை கடந்த ஆண்டு சந்தித்து மனு கொடுத்தோம், கோரிக்கை வைத்தோம். ஆனாலும், அந்தக் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. 210 மாணவர்களுக்கு, பட்டய மேற்படிப்பு படித்த அந்த மாணவர்களுக்கு, கூட்டுறவு துணை மேலாளர் பதவியைக் கொடுப்பதற்கான நடவடிக்கையை இந்த ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புவது, இன்றைக்கு சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமூகத்திலே ஒரு முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்றால்—பல்வேறு திட்டங்கள் என்பது அறிவிக்கப்பட்டு இருக்கின்றன—பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, நாடு விடுதலை அடைந்த காலத்திலேயிருந்து, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுடைய வாழ்க்கையிலே முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும், நாடு விடுதலையடைந்து 54 ஆண்டுகளுக்குப் பின்னாலும்கூட, அப்படிப்பட்ட ஒரு நிலைமையை இந்தியாவிலே நம்மால் ஏற்படுத்த முடிந்திருக்கிறதா என்றால் ஏற்படுத்த முடியவில்லை. கடந்த மானியக் கோரிக்கையிலே நான் சுட்டிக்காட்டினேன். டிராப் அவுட்ஸ் என்று சொல்லக்கூடிய பள்ளிப்படிப்பை படிக்கக்கூடிய மாணவிகள் டிராப் அவுட்ஸ் ஆகக்கூடாது என்பதற்காக மத்திய அரசு ஒதுக்கக்கூடிய நிதி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, விருதுநகர் மாவட்டத்தில் 13 இலட்சம் ரூபாய் வேறு பல பணிகளுக்காக



2002 ஏப்ரல் 11] [திரு. கே. மகேந்திரன்]

திருப்பிவிடப்பட்டிருக்கிறது என்று மத்திய தணிக்கைத் துறை குற்றம் சுமத்தியிருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படக்கூடிய இப்படிப்பட்ட நிதியை வேறு பல பணிகளுக்கு ஒதுக்குவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

இன்றைக்கும் மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்தியாவினுடைய குடியரசுத் தலைவராக மாண்புமிகு கே.ஆர். நாராயணன் அவர்கள் இந்தக் காலத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார். நாங்களும் அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவராக ஒரு தலித்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்த சமூக் அமைப்பு இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய கிராமங்களில் பஞ்சாயத்துத் தலைவர்களாக, ஊராட்சி மன்ற உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளாத ஒரு நிலைமையும் நீடித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர்களுக்குச் சொல்ல விரும்புவது, ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி வெளி வந்திருக்கக்கூடிய இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது "Dalit Councillor at receiving end in Nellai District" என்று. காசிமேஜர்புரத்திலே ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்ட பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ரமேஷ் என்ற கவுன்சிலர் அங்கே Chair-லே உட்காருவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே ஏப்ரல் மாதம் 5ஆம் தேதியிலே வெளி வந்திருக்கிற பத்திரிகையிலே செய்தி வெளி வந்திருக்கிறது. அந்தக் கவுன்சிலர் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளிடம் 1989 ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, அந்த வழக்கு முழுமையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறதா, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா என்றால், அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கும் உருவாக்கப்படவில்லை என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்றைக்கு சமூக ரீதியாக ஓர் அங்கீகாரத்தை தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்றால், மேற்கு வங்க மாநிலத்திலே ஆளக்கூடிய இடதுசாரி முன்னணி அரசு, கடந்த 26 ஆண்டுகாலமாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற அந்த அரசு அந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய 12 இலட்சத்து 600 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்களை பிரித்துக் கொடுத்து இருக்கிறது. இங்கே தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அமலாக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்கள் பிரித்துக்கொடுக்கப்பட்டால், உண்மையிலேயே சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக ஒரு முன்னேற்றத்தை அந்த மக்கள் அடையமுடியும் என்பதைக் கணக்கில் கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே நிலங்களை பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு பழங்குடியின மக்களைப் பொறுத்தவரை ஜாதிச் சான்றிதழ் கொடுப்பதிலே பல்வேறு பிரச்சினைகள் இருந்துகொண்டே இருக்கின்றன. மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஒன்றுபட்ட மதுரை மாவட்டமாக இருக்கும்வரை 1985 ஆம் ஆண்டு வரை, மலை வேடன் ஜாதியினருக்கு அங்கு ஜாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த மாவட்டம் தேனி மாவட்டமாக, திண்டுக்கல் மாவட்டமாக பிரிக்கப்பட்டதற்கு பின்பு, தேனி மாவட்டத்திலும், திண்டுக்கல் மாவட்டத்திலும் மலை வேடன் ஜாதிச் சான்றிதழ் வழங்கப்படாமல் இருக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 1084 மலை வேடன் ஜாதியினருக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று ஆணையம் சுட்டிக்காட்டியிருந்தும்கூட, இன்று வரை ஜாதிச் சான்றிதழ் வழங்கப்படாமல் இருக்கிறது. அதேபோன்று மலைக் குறவர் ஜாதிச் சான்றிதழ் வழங்கப்படுவது மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் S.C., M.B.C. பட்டியலிலும் இன்றைக்கும் இருக்கக்கூடிய நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலும், பிரிக்கப்பட்ட ஒன்றுபட்ட நாகை மாவட்டத்திலும் ஆதியன் என்ற பழங்குடியின மக்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) ஜாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இன்றைக்கு திருவாரூர் மாவட்டமாக அந்த மாவட்டம் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு, அங்கே இருக்கக்கூடிய ஆதியன் ஜாதி மக்களுக்கு ஜாதிச் சான்றிதழ், இனச் சான்றிதழ் வழங்கப்படுகிறதா என்றால் கிடையாது.



பழங்குடியின மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு, குடிநீர் வழங்குவதற்கான திட்டம் இந்த மானியக் கோரிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. வனத் துறையைப் பொறுத்தவரை மத்திய அரசின் கையிலே அந்தத் துறை இருந்துகொண்டிருக்கிறது. அங்கே மின்சாரம் எடுக்க வேண்டும் என்றாலும், குடிநீரை கொண்டு செல்ல வேண்டும் என்றாலும் மத்திய அரசினுடைய ஒப்புதலை நாம் பெற வேண்டிய நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மலைகளிலே வாழக்கூடிய அந்தப் பழங்குடி மக்களுக்கு மின்சாரத்தையும், குடிநீரையும் நாம் கொண்டு செல்ல வேண்டுமென்றால் மத்திய அரசின், வனத் துறையோடு பேச்சு வார்த்தைகள் நடத்துவதன் மூலமாக அவர்களுக்கு அந்த வசதியை நம்மால் பெற்றுத்தர முடியும்.

அதேபோன்று பழங்குடியின மக்கள் கடந்த பல நூறு ஆண்டு காலமாக பயன்படுத்திக்கொண்டிருக்கக் கூடிய அந்த நிலங்களை விட்டு வெளியேற்றப்படக்கூடிய நிலைமை இன்றைக்கு தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அருகிலே இருக்கிற கேரள மாநிலத்திலே பழங்குடியின மக்கள் பயன்படுத்திய நிலங்கள் அந்த மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பட்டா என்பது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையைத் தமிழகத்திலே உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

கன்னியாகுமரி மாவட்டம், ஏழுதேசம் வருவாய் கிராமத்தில் கலிங்கராஜபுரம் என்னும் ஊரிலே ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். அதேமாதிரி கன்னியாகுமரி மாவட்டம், களியல் வருவாய் கிராமத்திலே பழங்குடியின மக்கள் வாழும் மடைப்பாறை என்னும் பகுதியில் பழங்குடியின மக்களுக்கான குழந்தைகள் கல்வி பயிலுவதற்கு மழலையர் பள்ளி உருவாக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, உரையின் இறுதியில் நான் சுட்டிக்காட்ட விரும்புவது, தமிழகத்தில் இன்றைக்கும் தீண்டாமைக் கொடுமைகள் பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தீண்டாமைக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை—இந்த அவையிலே இருக்கக்கூடிய ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி மட்டுமல்ல,

அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஒன்றிணைந்து இத்தகைய அவலங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை—மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிக முக்கியமான துறையினுடைய மானியக் கோரிக்கைக்கான விவாதம் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்ற சூழ்நிலையில், அதில் குறிப்பிட்ட ஒரு மணி நேரம் தேவையற்ற விவாதங்களுக்காக இங்கே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. சமூகத்தில் இருக்கக்கூடிய 19 சதவிகிதம் மக்களின் வாழ்க்கை சம்பந்தமான விவாதம் நடைபெறும்போது தயவுசெய்து லாவணிக் கச்சேரிக்காக, இந்தச் சட்டப் பேரவையை மாற்ற வேண்டாம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.

***திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் குறித்த மானியக் கோரிக்கை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கண் இருந்தும் குருடராய், வாய இருந்தும் ஊமையாய், கோடானுகோடி மக்களின் வாழ்க்கையின் பிரதானமாக இருக்கின்ற ஆதிதிராவிடர் நல மானியக் கோரிக்கை மீது, குறிப்பாக ஆதிதிராவிடர் மக்கள், தலித் மக்களுடைய வாழ்க்கைக்காக இருக்கின்ற பிரதானமான துறைக்கு, கடந்த காலத்திலும் சரி, கோடானுகோடி ரூபாயை ஒதுக்குவதைப் புள்ளிவிவரங்களோடு பல நேரங்களில் அரசு வெளியிட்டிருந்தும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனிதநேயத்தோடு, இந்த மக்களுடைய பணிகளில் ஈடுபடுவதாக நான் கருதுகிறேன்.

குறிப்பாக, அரசுத் துறைகளில் இன்றைக்குத் தனியார் மயம் என்ற கொள்கை வந்தபின்னால், மத்தியிலும், மாநிலத்திலும் இருக்கக்கூடிய ஆதிதிராவிட தலித் மக்களுக்கு 18+1=9 சதவிகித, இட ஒதுக்கீடு வழங்கக்கூடிய ஒரு நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்தால், ஓரடி முன்னால் ஈரடி பின்னால் என்கிற அடிப்படையில், இன்றையதினம் தாழ்த்தப்பட்ட படித்த இளைஞர்கள் மத்தியில், மாநில அரசுப் பணியில் இருக்கக்கூடியவர்களுக்கு ஓர் பெரும் அபாயம் வந்திருக்கிறது.



குறிப்பாக எல்லாமே இன்றைக்குத் தனியார்மயமாக்கக்கூடிய நிலையில் அரசாங்கம் கொள்கை நிலையை எடுத்ததற்குப் பின்னால் இதுகுறித்து இந்த மன்றக் கூட்டத்திலேயே தாங்கள் அரசினர் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, பொருளாதார நிலையைக் கருத்தில்கொண்டு, தாழ்த்தப்பட்ட தலித் மக்களுடைய பொருளாதார மேம்பாட்டை உருவாக்கவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு எல்லாமே தனியார் மயமாகிறபோது தனியார் தொழிற்சாலைகளிலே, அரசுப் பணிகளிலே ஈடுபடக்கூடியவர்களை, இன்றைக்கு வேலை இழக்கக்கூடிய அபாயத்திலிருந்து பாதுகாக்கவேண்டுமென்று சொன்னால், தனியார் துறையிலும் அவர்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டுவரக்கூடிய ஒரு சட்டத்தை, இந்த மன்றத்திலே ஒரு முன்மாதிரியான சட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குடியரசுத் தலைவர் மேதகு கே.ஆர். நாராயணன் அவர்கள்கூட மத்திய அரசும் இதுபோன்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற தன் கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவராவிட்டால் இந்தியாவில் இருக்கிற தலித் மக்களை, ஆதிதிராவிட மக்களைப் பாதுகாக்க முடியாது என்ற கவலையை அவர் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற காரணத்தால் நான் இதைச் சொல்கிறேன். இதை ஒரு தனித் தீர்மானமாக இந்த அவையிலே நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும்.

அதுமட்டுமல்ல. தமிழகத்திலே பல்வேறு அரசுத் துறைகளில் இருக்கக்கூடிய விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வு கிடைக்காதவர்களுக்கான ஒரு வெள்ளை அறிக்கையை—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல— நீங்கள் இந்த அவையில் அந்தத் துறைமூலம் சமர்ப்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருக்கிற அந்தப் பணியையாவது சரியாகச் செய்யவேண்டும். எனக்கு அதிகமாகப் பேசுவதற்கு நேரம் கிடைத்தால் ஒரு துறை சம்பந்தப்பட்ட விவரங்களை மட்டும் அரசின் கவனத்திற்கு என் பேச்சின் இறுதியில் சொல்ல விரும்புகிறேன். அந்த வகையில் இன்றைக்குப் பார்ப்போம் என்று சொன்னால், ஆதிதிராவிட மக்களுக்கு என உருவாக்கப்பட்டிருக்கிற பள்ளிகளை, ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள்

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 11

என்பதை இன்றையதினம் கல்வித் துறையிலே இணைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 12-20

பாபாசாகிப் அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்தால் கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமை; இது கிடைக்கவில்லை என்று சொன்னால், கிராமப்புறத்திலே முற்றிலும் வாழ்ந்து கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள்—நகரத்திலே வாழ்பவர்கள் மிகமிகக் குறைவு—அநேகமாக, கிராமத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்கள்; விவசாயத் தொழிலாளிகளாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்கள்; உழைப்பை நம்பியே தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கக்கூடியவர்களுடைய வாழ்க்கையிலே, கல்வியிலே ஒரு விடிவுகாலம் இல்லாமல் போய் விடும். ஆகையினால், அந்தப் பள்ளிகளை, ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகளை, கல்வித் துறையிலே இணைக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதேபோல், இன்னொன்றையும் நான் குறிப்பிடுவது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். ஆதிதிராவிட மாணவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய அந்த விடுதிகளைத் தனியார் துறைக்கு விட்டுவிடவும் கூடாது. ஏனென்றால், ஏற்கெனவே இருந்த அரசாங்கம் இதுபோன்று சிந்தித்தது. அதைத்தான் இப்போது இருக்கிற அரசாங்கம்—அதற்கான முயற்சிகளை—ஆதிதிராவிட மாணவர்கள் தங்கிப் படிக்கிற மாணவர் விடுதிகளை, தனியாரிடத்திலே, குத்தகை முறையிலே விட்டுவிடலாம் என்று சொல்லியிருப்பது சரியல்ல என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) Hostels, S.C. Hostels.

அதேபோன்று, ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகள்; 31 ஆயிரம் வீடுகள் கட்டுவதாகச் சொல்லியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல திட்டம்; ஏற்கெனவே நடைமுறையிலே இருக்கிற திட்டம். கடந்த காலங்களிலே, மத்திய அரசு கொடுத்த 80 சதவிகிதத்தோடு, 20 சதவிகிதம் மாநில அரசு கொடுக்காத காரணத்தினால், இந்தத் திட்டங்கள் தமிழகத்திலே முழுமையாக நடைபெறாமல், நிறைவேற்ற முடியாமல் தடைபட்டிருக்கின்றன.



2002 ஏப்ரல் 11] [திரு. ஜி. பழனிசாமி]

இன்றைக்கும் அது தொடர்கிறது. ஆகையால், அந்த 34 ஆயிரம் ரூபாய் என்பதை ரூபாய் 40 ஆயிரமாக உயர்த்திக் கொடுக்கப்பட வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், தஞ்சை மாவட்டம், கடலூர் மாவட்டம் போன்ற மாவட்டங்களிலே அந்த மண்ணினுடைய தன்மை சரியாக இல்லாத காரணத்தால், கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகுப்பு வீடுகள், சில ஆண்டுகளிலேயே பழுதடைந்த நிலையிலே இன்றையதினம் காணப்படுகின்றன. ஆகையால், இதற்கு 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிறகு 40 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு வீடு, தாழ்த்தப்பட்ட ஏழையெளிய அந்த அரிசன ஆதிதிராவிட மக்களுக்கு. பயன்தாரர் ஒரு பத்தாயிரம்; ஆதிதிராவிடர் நலத் துறை ஒரு பத்தாயிரம்; வங்கி இருபதாயிரம் கடன் கொடுக்கிற திட்டம். அநேகமாக, தமிழகத்திலே எங்கேயும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. ஏனென்று சொன்னால், 10 ஆயிரம் கொடுத்து, தங்களுடைய வீடுகளைப் புதுப்பிக்கின்ற தகுதி படைத்தவர்கள், பெரும்பகுதி கிராமப்புறத்திலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இல்லை. 10 ஆயிரம் ரூபாய் கொடுத்தும்கூட, அவர்கள் தேர்வு செய்யப்பட்டால் வங்கிக் கடன் கொடுப்பதற்கு மறுக்கப்படுகிறது. ஆகையால், இந்தத் திட்டம், அதற்கு சொல்லப்பட்ட காலத்திற்குள்ளே, நிறைவேற்ற முடியாத நிலைமை, இன்றும் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. கட்டாயமாக தங்களுடைய பணம் 10 ஆயிரம் ரூபாய் செலுத்திய பிறகும்கூட, ஆதிதிராவிடர் நலத் துறை, காலத்தில் 10 ஆயிரம் ரூபாய் செலுத்தி, வங்கியும் கொடுக்கக்கூடிய அனுமதியை முதலில் பெறுவதற்கான முயற்சிகளை அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே சாதிச் சான்றிதழ் ஒரு பெரிய பிரச்சினை. இப்போது, சேலம், தருமபுரி, ஈரோடு போன்ற மாவட்டங்களிலேயிருந்து மலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற அந்தப் பழங்குடியின மக்கள் வாழ்க்கை நடத்துவதற்காக, சமவெளிப் பகுதியிலே வந்து கொண்டிருக்கிறார்கள். நீண்ட காலமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள், இங்கு வந்து. குறவர்களாக, சிலர் குரங்காட்டிகளாக, பலபேர் இங்கே தங்கிக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சில மாவட்டங்களிலே மட்டும்தான் பழங்குடி இனத்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில், சாதிச் சான்றிதழ்

அவர்களுக்கு வழங்கக்கூடாது என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஒரு மாவட்டத்திலேயிருந்து வறுமையின் காரணமாக, வேறு மாவட்டத்திற்குக் குடிபெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியாததல்ல. முந்தைய காலங்களில், தஞ்சை மாவட்டத்திலே அறுவடை நடக்கிற காலத்தில், பல மாவட்டங்களிலேயிருந்து அந்த மாவட்டத்திற்கு வருவார்கள்; ஜோசியம் சொல்வதற்கு வருவார்கள். பூம்பூம் மாட்டுக்காரர்கள் அங்கு வருவார்கள். குரங்குகளை ஓட்டிக் கொண்டு வருவார்கள். அங்கே வந்து சில விளையாட்டுகளைக் காண்பித்து, நெற்களை பிச்சை எடுத்து வாழ்க்கையினை நடத்தக்கூடியவர்கள் அங்கேயே தங்கி விடுவார்கள். முதலிலே அவர்கள் ஒரு மரத்தடியிலே தங்குவார்கள். பின்பு அவர்கள் இலேசாக ஒரு குடிசையைப் போடுவார்கள். பிறகு, ஆற்றோரம், புறம்போக்கு என்று இதுபோன்ற இடங்களிலே தங்கி தங்களுடைய வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், சாதிச் சான்றிதழ் கேட்டால், இப்போது மறுக்கப்படுகிறது. இந்த மாவட்டத்தில் அப்படிப்பட்ட சாதியே கிடையாது என்று சொல்லப்படுகிறது. ஆகையால், அவர்களுக்கெல்லாம் சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர்களுக்கு நீங்கள் நலத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்றால், முதல் திட்டமாக, மயானப் பாதைகள்; மயான shed-கள் கட்டுகின்ற அந்தத் திட்டத்தை முதலிலே தமிழ்நாட்டில் ஒரு தன்னிறைவு பெறச் செய்ய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு புரட்சிகரமான திட்டமாக எடுத்துக்கொள்ளுங்கள். பல கிராமங்களிலே சாதியத் தகராறுகூட ஏற்பட்டு பிணங்களை எடுத்துக் கொண்டுபோய் எரிக்க முடியாத சூழ்நிலை தமிழகத்திலே இருக்கிறது. என் தெருவிலே, என் பாதையிலே ஆதிதிராவிடர் பிணத்தை எடுத்துக்கொண்டு போகக்கூடாது என்று சொல்லி தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. இடம் இல்லாத காரணத்தால், ஆற்றங்கரையிலே கொண்டு போய் புதைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தண்ணீரிலே பிணம் இழுத்துச் செல்லக்கூடிய ஒரு கொடுமையான நிகழ்ச்சியெல்லாம் தமிழகத்திலே இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையை மாற்றும் திட்டத்திற்கு மத்திய அரசு கொடுக்கும் நிதியை வேறுவிதமான துறைகளுக்கு அதைச் செலவிட அனுமதிக்காமல், அந்தத் திட்டத்திற்கே முழுமையாகச் செலவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். சுடுகாட்டில் தரமான கான்கிரீட் shed-கள், மயானக் கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பது தமிழகம்



முழுவதும் இருக்கிற பிரச்சினையாக இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-25

தென் மாவட்டங்களில் சாதிச் சண்டைகள், இனக் கலவரங்கள் தொடங்குகின்றன என்று சொன்னால், அநேகமாக அவர்கள் பிணத்தை எடுத்துக்கொண்டு போய் எரிப்பதிலேதான் முதலில் தொடங்குகிறது. அதை எந்தத் தெருவிலும் எடுத்துக்கொண்டு செல்ல முடியவில்லை. அதற்கு அரசாங்கம் அங்கீகாரத்தோடு ஒரு பாதையை அமைத்துக் கொடுத்து, அதற்கான ஷெட்டுகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும். இப்படிப்பட்ட கொடுமைகள் நகரங்களில் இன்னும் நடைபெறுகின்றன; கிராமங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றைத் தடுக்க உரிய முயற்சிகளில் அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வனத் துறையைச் சார்ந்த வனங்களில் வாழ்ந்து கொண்டிருந்த பழங்குடி சாதி மக்கள் இன்றைக்கு வனத் துறை அதிகாரிகளால் துன்புறுத்தப்படுகிறார்கள். அவர்கள் வரப்புற்களை வளர்க்கிறார்கள்; தொழில் செய்கிறார்கள்; தேன் பூச்சிகளை வளர்க்கிறார்கள்; மலையிலே குச்சிக் கிழங்குகளைப் போடுகிறார்கள்; இப்படி பல்வேறு தொழில்களைச் செய்கிறார்கள். இன்றைக்கு வனத் துறை அதிகாரிகள் அவர்களைத் துன்புறுத்தி, அந்த மலைவாழ் மக்கள் அவ்வளவு பேர்களையும் வெளியேற்றி இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுடைய வாழ்க்கைக்கு ஓர் உத்தரவாதம் அளிக்க வேண்டும். அவர்கள் மிகப் பெரிய மாளிகை கட்டி வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. அங்கே இருக்கிற மரங்களிலே, செடி, கொடிகளை கட்டி வைத்துக் கொண்டே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போன்று எந்த இடத்திலே நடைபெறுகிறது என்பதை அவர்கள் சொல்லிவிட வேண்டும். ரிசர்வ் பாரஸ்ட்டிலே அவர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்று மத்திய அரசு ஆணையிட்டு இருக்கிறது. அந்த ஆணைக்கு நம்முடைய தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்க வேண்டிய நிலையில் இருக்கிறது என்பதை இந்த அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தப்பட்ட விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கிறேன். எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது பற்றி எனக்கும் மனு அனுப்பி இருக்கிறார்கள்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டு இருக்கிறது. அதை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தாலுகா தனித் தாசில்தார் அலுவலகம். அங்கு என்ன கொடுமை என்றே தெரியவில்லை. அது 100 ஆண்டுகளாக இருக்கிறது. அந்த தனித் தாசில்தார் அலுவலகம் இருப்பதைப் பாருங்கள்; அங்கு, பனிஷ்மெண்ட் கொடுக்கப்படும் அதிகாரிகள்தான் நியமிக்கப்படுகிறார்கள். அங்கு அவர் 2 ஆண்டுகள்கூட தாசில்தாராக இருப்பதில்லை. ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு மனைக்கு பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்கச்சென்றால், அவர்களுக்கு 2 தாசில்தார்—மனு வாங்குகிற தாசில்தார், அதோடு போய்விடுவார், 6 மாதத்திலே; அடுத்து அவர் யாரையாவது பிடித்து இன்னொரு பதவிக்குப் போய்விடுவார். அடுத்த தாசில்தார் 3 மாதத்திலே வருவார்; அவரும் 3 மாதம் இருப்பார்; பிறகு போய்விடுவார். பனிஷ்மெண்ட் துறையாகவே அந்த தாலுகா அலுவலகங்கள், ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலகங்கள் இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நான் கேட்கிறேன், குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்காவது ஆதிதிராவிடர் நலத் துறையில் ஒரு தாசில்தாரை நீங்கள் நியமிக்க வேண்டும். அவர்களுக்கு ஜீப் கிடையாது; Phone கிடையாது. அங்கு இருக்கிற வட்டாட்சியர் அலுவலகத்திலோ அல்லது R.D.O. அலுவலகத்திலோ அவர்களுக்கு அலுவலகம் கொடுப்பதற்கும் இடம் கிடையாது. எங்கேயாவது ஒரு குடிசையிலே, ஓரத்திலே அந்த தாசில்தார் இருப்பார்; தாசில்தார் இருக்கிறாரா என்பதே தெரியாது; இன்றும் தமிழகம் முழுவதும் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. 3 ஆண்டுகாலம் மாற்றம் இல்லாமல் பணிபுரிவதற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கக்கூடிய தாட்கோ கடன், அநேகமாக அவ்வளவும் பினாமி; மத்திய அரசு கொடுப்பதிலும் பினாமி; மாநில அரசின் நிதி ஒதுக்கலிலும் பினாமி; தமிழகத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் பார்த்தீர்கள் என்றால், மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிற Gas, பெட்ரோல் பங்க், அவ்வளவும் பினாமி; யாராவது வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள படித்த ஆதிதிராவிடர்



ஒருவனைப்பிடித்து, அவன் பெயரில் போட்டு—அநேகமாக எல்லா பங்குகளும், தமிழ்நாட்டில் இருக்கிற அவ்வளவு பங்குகளும்—ஒரு ஆதிதிராவிடர் நடத்திய வரலாறே கிடையாது. Gas-ம் அதே மாதிரிதான்; பட்டியல் வேண்டுமென்றால் நிறைய சொல்லலாம்; சில பேர் வருத்தப்படக்கூடும். நான் அசெம்பிளியில் அந்த வம்பை இழுப்பதற்குத் தயாராக இல்லை; இந்த நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை.

அதேமாதிரி, இதிலேயும் பார்த்தீர்கள் என்றால், கார் லோன், வண்டி லோன், சுய தொழில் லோன்—இவற்றையெல்லாம் பார்த்தால், தகுதி உள்ளவர்களுக்குக் கிடைப்பதில்லை. அநேகமாக வங்கிகள் கொடுப்பதற்கு மறுக்கின்றன. ஆகவே, இதற்கு ஒரு நிர்ணயம் செய்து, மாவட்டத்திற்கு இத்தனைபேர், கல்வியிலே முதல் மாணவர்களாக இருக்கக்கூடியவர்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கக்கூடியவர்கள் (மணியடிக்கப்பெற்றது) அவர்களில் தொழில் செய்யக்கூடியவர்கள் முடித்துவிடுகிறேன்—அவர்களுக்காவது நீங்கள் லோன்களை வழங்குவதற்கு இந்தத் துறையின் மூலமாக தேர்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து விவசாயத் தொழிலாளர்கள். 1998 அக்டோபர் மாதம் 28 ஆம் தேதி ஒரு கூலிச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. இதைப் பொறுத்தவரையிலே இன்றுவரை 3 ஆண்டுகாலமாகிறது. அந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். கோலப்பன் கமிஷனிலே கிராமப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதையும் அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

ஒன்றை நான் சொல்கிறேன். பல்வேறு துறைகளிலே அரசுப் பணிகளிலே இருக்கக்கூடியவர்கள், உதாரணத்திற்கு மாண்புமிகு நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சருடைய கவனத்திற்கு—ஒரு துறையை மட்டும் நான் எடுத்துக்கொள்கிறேன்—அதிலே இருக்கிற பதவி உயர்வை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். C.E. பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் 10 பேர், அதிலே இரண்டு பேர் ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். அந்தப் பதவி உயர்விலே C.E. அளவிலே இருக்கக்கூடியவர்கள், ஒருவருமே கிடையாது. அதேபோன்று S.E. அளவிலே இருக்கக்கூடியவர்கள் 40 பேர்; 8 பேர் இருக்க வேண்டும். ஒருவர்கூட கிடையாது. அதுபோன்று D.E. அளவில்

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 11

இருக்கக்கூடியவர்கள் 100 பேர்; அதிலே 18 பேர் இருக்க வேண்டும். ஒருவர்கூட கிடையாது. அடுத்து, A.E. அளவிலே இருக்கக்கூடியவர்கள் 400 பேர்; 104 பேர் இருக்க வேண்டும்; அநேகமாகப் பார்த்தீர்கள் என்றால் இதிலே 20 பேர் மட்டும்தான் பணியாற்றுகிறார்கள். அந்தமாதிரி J.E. 700 பேர் இருக்கிறார்கள். அதிலே 126 பேர் இருக்க வேண்டும். அதிலே இருக்கிற நபர் என்பது ஒரு நபர் மட்டுமே இருக்கிறார். இப்படி ஒரு துறையில் மட்டும் சொல்லலாம். அதுபோன்று உள்ளாட்சித் துறை, கூட்டுறவுத் துறை; இப்படிப் பல்வேறு துறைகளில் உள்ளன. ஏன் நிதித் துறையிலே பார்த்தோம் என்று சொன்னால் ஆதிதிராவிடர்களுக்கு, பதவியிலே இருக்கக்கூடியவர்களுக்கு பதவி உயர்வு அளிக்காத ஒரு மோசமான நிலை இருக்கிறது. இதற்கு ஒரு வெள்ளை அறிக்கை வைத்து அதன்மூலமாக அந்த இடங்களில் பதவி உயர்வு அளிப்பதற்கான முயற்சியினைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு அனுமதி தந்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே உரையாற்றுகிற வாய்ப்பைத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலே மிகச் சிறந்த உழைப்பாளிகள் என்று கருதப்படுகிற, தமிழக விவசாயப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்று கருதப்படுகிற, தன்னை வருத்திக் கொண்டு மற்றவர்களுடைய வாழ்க்கை உயருவதற்கு உழைக்கும் தன்னலம் பாராத பொதுநலவாதிகள் என்று கருதப்படுகிற, என்ன, எதற்கு என்று எதிர்த்துக் கேட்காத வாயில்லாத பூச்சிகளான ஆதிதிராவிட பெருமக்களுடைய மானியக் கோரிக்கையிலே உரையாற்றுவதிலே நான் பெருமைப்படுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு உறுப்பினர் முருகவேல் ராஜன் அவர்கள் பேசுகிறபோது, இரட்டைக் குவளை முறை தமிழகத்திலே இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வேன், உங்களை எங்கள் ஊரிலே தெரியாது. நீங்கள் என்னோடு எங்கள் ஊருக்கு வாருங்கள். இரட்டைக் குவளை முறை இருக்கிறது என்பதை நான் உங்களிடத்திலே நேரடியாகவே காண்பிக்கின்றேன். தயவுசெய்து...



2002 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள் கடந்தகால ஆட்சியில் நடைபெற்றதை இப்போது வாய்ஜாலங்கள் மூலமாக இந்த அவையில் பொத்தாம்பொதுவாக அவைக்குத் தெரிவிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இரட்டைக் குவளை முறை, அந்தமாதிரி இரட்டைக் குவளை முறை என்று சொல்வதை நிறுத்த வேண்டும். மாண்புமிகு அம்மா ஆட்சி பொறுப்பேற்றவுடனே தாழ்த்தப்பட்ட மக்கள், இப்போது மாண்புமிகு அம்மா ஆட்சிக்கு எவ்வளவு ஆதரவாக வரவேற்பு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-35

**திரு. ப. அரசன்:** தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக ஆட்சி செய்கிறார்கள் என்பதிலே எனக்கு மகிழ்ச்சி. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், உங்களைக் குற்றம் சாட்டுவதற்காக நான் சொல்லவில்லை. அரசாங்கம் கொடுக்கிற, அதிகாரிகள் கொடுக்கிற புள்ளிவிவரங்களை இதுபோன்ற சென்சிடிவ் ஆன பிரச்சினையிலே நீங்கள் தயவுசெய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும்; நம்பாதீர்கள் என்று நான் சொல்லவில்லை. ஏன் என்று சொன்னால் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் எங்களது மாவட்டத்திலே இருந்தார். சென்ற ஆட்சியிலே, இலவச வேட்டி, சேலை அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்கப் போனேன். இல்லை, இல்லை கொடுக்க முடியாது என்று சொன்னார். நான் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டேன், ஏன் அதிகமாகக் கொடுக்க முடியாது ஐயா என்று கேட்டேன், அவர் சொன்னார் சென்ற ஆண்டு below poverty line 100 என்று சொன்னால் இந்த ஆண்டு அரசாங்கத்திற்கு 95 என்று கொடுக்க வேண்டும். 5 பேரைக் குறைத்துக் கொடுத்தால்தான் below poverty line-லே இருப்பவர்களை நாம் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டோம் என்று அரசாங்கம் கருதும். ஆகவே அப்படிக் கொடுத்து இருக்கிறோம் என்று புள்ளி விவரம் கொடுக்க வேண்டும் என்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார். அதனாலேதான் நான் இதை sensitive-ஆன பிரச்சினை என்று முதலிலே சொன்னேன். குற்றச்சாட்டுக்காக அல்ல. அந்த முறை இருக்கிறது. நீங்கள் வரவில்லை என்று சொன்னால், உங்கள் சார்பாக ஒரு தூதுவரை, அடையாளம் தெரியாத ஓர் அதிகாரியை அனுப்பி

வையுங்கள். நான் அதை நிரூபிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல நான் இன்னொரு சம்பவத்தைக்கூட உங்களிடத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே ஒரு கிராமத்திலே ஆதிதிராவிட தாய்மார்கள், வேலிக் கருவை முள்ளை, தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக, விறகுக்காக வெட்டினார்கள், அதுவும் நெடுஞ்சாலைத் துறையினுடைய சாலையிலே இருக்கிறது; ஓரத்திலே இருக்கிறது. ஒரு தனியாருடைய தோட்டத்திலே அல்ல, வயலிலே அல்ல. நெடுஞ்சாலைத் துறைச் சாலையிலே இருக்கிற முள்ளை வெட்டியதற்காக ஒரு பெரிய மிராசுதாரர் அந்தத் தாய்மார்களை அடித்தார். எனக்குக் கொஞ்சம் குசும்பு அதிகம். நான் அந்த ஊருக்குப் போய் அந்தத் தாய்மார்களிடத்திலே சொன்னேன். நாளைக்கு நீங்கள் எல்லாம் சேர்ந்து போய் அந்த மிராசுதாரரை அடித்து விட்டு வாருங்கள் என்று அவர்களிடத்திலே சொல்லிவிட்டு வந்தேன். அந்த நிலை இன்னும் இருக்கிறது. குற்றச்சாட்டுக்காகவே நான் சொல்லவில்லை. தயவுசெய்து, இன்னும் தமிழகத்திலே ஆதிதிராவிட மக்கள் தனி இனமாக, ஒரு தீண்டத்தகாத இனமாக, தொடக்கூடாத இனமாக மனதளவில் கருதிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களே என்னுடைய தொகுதியிலே காட்டுநாய்க்கர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் சான்றிதழ் பெறுவதிலே மிகுந்த சிரமம் இருக்கிறது. அவர்களுக்கு S.T. என்று சான்றிதழ் தரமாட்டேன் என்று சொல்கிறார்கள். நானும் பலமுறை கோட்டாட்சித் தலைவர் அவர்களிடத்திலேயும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு அந்தப் பகுதியிலே வாழ்கிற காட்டுநாய்க்கர் இன மக்களுக்கு S.T. என்று சான்றிதழ் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்குக் கல்வி புகட்டுவதற்காக கடன் உதவி கொடுக்கிறீர்கள். பத்தாண்டு காலத்திற்கு முன்னாலே கொடுத்த தொகையைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். விலைவாசிகள் உயர்ந்து இருக்கின்றன. ஆகவே கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். ரூ 6,500 என்று இருப்பதை - பட்டப் படிப்புக்கு 6,500 ரூபாய் என்று இருப்பதை—கொஞ்சம் கூடுதலாகவும், தொழிற்கல்வி



பட்ட மேற்படிப்புக்கு 7,000 ரூபாய் என்று இருப்பதை கொஞ்சம் அதிகமாகத் தரவேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு, அந்த இளைஞர்களுக்கு, படித்த இளைஞர்களுக்கு பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை, அந்தந்த மாவட்ட அளவிலே தீட்டவேண்டுமென நான் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்த மாவட்டத்திலே என்ன தொழில் செய்தால், அதற்கு மார்க்கெட் இருக்கும் என்பதை யோசித்து அதற்குத் தகுந்தாற்போல, ஏனோதானோ என இல்லாமல்—அதைப்போல எந்தெந்த பயிற்சி பெற்ற இளைஞர்கள் இருக்கிறார்களோ அதற்குத் தகுந்தாற்போல தொழில்களைத் தேர்ந்தெடுத்து—ஆதிதிராவிட இளைஞர்களுக்காகவே தனியாக ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல வீடு கட்டுவதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். சமவெளியிலே ரூ.32,000 கரிசல் மண் பூமியில் ரூ.34,000, 10 ஆண்டுகளாக அதையே கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நெடுஞ்சாலைத் துறையிலே இன்று 100 ரூபாய் என்று சொன்னால் ஏப்ரல் மாதத்திற்குப் பின்னாலே அது 110 அல்லது 115. அதைப்போலவே பொதுப் பணித் துறையிலே இன்றைக்கு 100 என்று சொன்னால் ஏப்ரல் மாதத்திற்குப் பின்னாலே 100 அல்லது 115 என்று கொடுக்கிறார்கள். அதைப்போல பஞ்சாயத்துக்களிலே நடைபெறுகிற வேலைகளுக்கும் அப்படியே கொடுக்கிறார்கள். இப்படி விலைவாசி உயர்ந்து இருக்கிற காலத்தில் நீங்கள் இன்னும் ரூ. 32,000, 34,000-ஐ கொடுத்துக் கொண்டிருந்தால் எப்படி தரம் உள்ள வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் உங்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மீனவர்களுக்கெல்லாம்கூட 40,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அது கடற்கரை ஓரத்திலே இருப்பதினாலே கொடுக்கிறார்கள். இவர்களுக்கு அந்த அளவுக்கு இல்லை என்று சொன்னாலும் இன்னும் 2000, 3000 ரூபாய் அதிகமாகக் கொடுத்து வீடுகள் கட்டித் தரவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல குடிநீர்த் திட்டத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். 50, 60 வீடுகள் இருந்தால் அவர்களுக்கு individual scheme என்று சொல்லுகிற, தனிப்பட்ட குடிநீர்த் திட்டத்தை அவர்களுக்கு நிறைவேற்றித்

தரவேண்டுமென நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

நிறைய ஆதிதிராவிடர் விடுதிகளுக்குக் கட்டட வசதி இல்லாமல், மாணவர்கள் படிப்பதற்குப் போதிய வசதி இல்லாமல் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு விடுதிகள் கட்டித் தரவேண்டும் என இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். "நடப்பு ஆண்டில் 143 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஹட்கோ நிறுவனத்திடமிருந்து ரூ.31.37 கோடி கடன் பெற்றும், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டும் கட்டடங்கள் கட்டப்படும்" என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே 575 விடுதிகள் சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இந்த 143 விடுதிக் கட்டடங்கள் போனால், மீதம் 432 இருக்கின்றன. நீங்கள் அதற்கு முன்னாலே என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்றால், இரண்டு ஆண்டுகளிலே கட்டித் தரப்படும் என்று. ஆக, அந்த 143 விடுதிகளுக்கு இந்த ஆண்டிலே கட்டடங்கள் கட்டித் தந்துவிட்டால், மீதமுள்ள 432 விடுதிகளுக்குக் கட்டடங்களை அடுத்த ஆண்டு கட்டித் தரப் போகிறீர்களா என்பதை உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

கொள்கைக் குறிப்பிலே 31 ஆம் பக்கத்திலே ஒரு சிறிய தவறு இருக்கிறது. "முதற்கட்டமாக ஹட்கோ கடன் உதவியுடன் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 143 விடுதிகளுக்கு அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் அரசு கட்டடங்கள் கட்ட செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது". இது 31 ஆம் பக்கத்திலே இருக்கிறது. முதலிலே என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னால், 143 விடுதிகளுக்கும் இந்த ஆண்டிலே கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், 31 ஆம் பக்கத்திலே என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நிறைய நேரம் பாக்கி இருக்கிறது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய பாக்கி எல்லாம் இப்போது வசூலிக்க முடியாது (சிரிப்பு).

**திரு. ப. அரசன்:** ஆகவே, அதுபற்றி கொஞ்சம் குழப்பமாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. அது என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட—இன்னும் சமுதாயத்திலே இவ்வளவு பெரிய அறிவியல் முன்னேற்றங்கள் வந்ததற்குப் பின்னாலும் ஆதிதிராவிடப் பெருமக்களை நம்முடைய மாநிலத்திலே இருக்கிற 20 சதவிகிதத்திற்கு மேற்பட்ட அந்த மக்களை நம்மோடு சமமாக பாவிக்கிற, நம்மோடு ஒத்துவாழ்கிற ஒரு சகோதரர்களாக ஏற்றுக்கொள்கிற மனப்பான்மையினை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

## 5. உரிமை மீறல் பிரச்சினை

### காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து அவைக்குத் தவறான தகவல்கள் அளித்துள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் மீதான உரிமைப் பிரச்சினைக்கு பேரவைத் தலைவர் தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உரிமை மீறல் பிரச்சினை குறித்த என்னுடைய தீர்ப்பை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைமுருகன், டாக்டர் க. பொன்முடி, திரு. இ. புகழேந்தி, திரு. எ.வ. வேலு மற்றும் திரு. கு. பிச்சாண்டி ஆகியோர் 9-4-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவிரி நதி நீர் வழக்கு வாபஸ் பெறப்பட்ட பிரச்சினை குறித்து அவைக்குச் சில தவறான தகவல்கள் அளித்துள்ளதாகவும், எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது அவை உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப அனுமதி கோரி 10-4-2002 ஆம் நாளிட்ட கடிதத்தில் அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். மேலும், மேற்கூறிய உறுப்பினர்கள் இப் பிரச்சினையை வலியுறுத்தி இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கோரி 11-4-2002 அன்று மேலும் ஓர் அறிவிப்பினைக் கொடுத்துள்ளார்கள்.

நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் என்னுடைய அனுமதி இல்லாமலேயே இப்பிரச்சினையை அவையில் எழுப்பினார். நான் அப்போதே இப்பிரச்சினை தொடர்பாக நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்து எனது தீர்ப்பினைப் பின்னர் அளிப்பதாகக் கூறியிருந்தேன்.

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 11

9-4-2002 அன்று திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து அவையில் குறிப்பிட்டுப் பேசியபொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9-4-2002 அன்றே பேரவையில் "நான் சொன்னதைத் திருத்திக் கொள்கிறேன். முதலில் சி.பி.ஐ. வழக்குகள், அதன் பின்னால் சர்க்காரியா கமிஷன். நான் திருத்திக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டு அவையிலேயே திருத்திக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 10-4-2002 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இப்பிரச்சினையை அவையில் எழுப்பியபோதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "தவறு செய்வது மனித இயல்பு. தவறு செய்யாதவர்கள் இந்த உலகத்திலேயே இல்லவே இல்லை. நானும் மனிதப் பிறவிதான். நேற்று தவறாக வாய் தவறி ஒரு கருத்தைச் சொன்னேன். உடனே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எழுந்து அந்தத் தவறைச் சுட்டிக்காட்டினார்கள். உடனடியாக நான் அவர் சொன்னதை ஏற்றுக்கொண்டு தவறைத் திருத்திக் கொள்கிறேன் என்று உடனடியாகச் சொன்னேன். அதுவும் அவைக் குறிப்பிலே இருக்கிறது" என்றும் தெரிவித்துள்ளார்.

முந்தைய நேர்வுகளில் பாராளுமன்ற நடவடிக்கைகளிலும் இதுபோன்ற நிகழ்வுகள் உரிமை மீறல் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1985 ஆம் ஆண்டு காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்மீது அவைக்குத் தவறான தகவல் தந்துள்ளதாகக் கொண்டு வரப்பெற்ற அறிவிப்பில் உரிமைப் பிரச்சினை ஏதுமில்லை எனத் தெளிவாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மேலும், "If any statement is made on the floor of the House by a Member or Minister which another Member believes to be untrue, incomplete or incorrect, it does not constitute a breach of privilege. If an incorrect statement is made, there are other remedies by which the issue can be decided. In order to constitute a breach of privilege or contempt of the House, it has to be proved that the statement was not only wrong or misleading but it was made deliberately to mislead the House. A breach of privilege can arise only when the Member or the



2002 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

Minister makes a false statement or an incorrect statement wilfully, deliberately and knowingly" என்று பாராளுமன்ற நடைமுறைகள் குறித்த நூலில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-45

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே, தெரிந்தே, உள்நோக்கத்துடன் இப்பிரச்சினை குறித்த விளக்கத்தை அவைக்கு அளித்தார்கள் என்று கருத இடமில்லை.

எனவே, இப்பிரச்சினையில் உரிமை மீறல் ஏதும் இல்லை என அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம். திரு. செ.கு. தமிழரசன், சுருக்கமாக 5 மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நல மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய மக்கள் தொகையில் ஒடுக்கப்பட்ட மக்கள், ஐந்தில் ஒரு பங்கு இருக்கிறார்கள். தமிழகத்திலும் ஒடுக்கப்பட்ட மக்கள், தலித் மக்கள் ஐந்தில் ஒரு பங்கு இருக்கிறார்கள். இந்திய மாநிலங்களிலே தலித் மக்கள் அதிகம் வசிக்கிற மாநிலங்களில் ஆறாவது இடத்தை நம்முடைய தமிழ்நாடு பெற்றிருக்கிறது. தமிழகத்தில் இன்றைக்கு ஏறக்குறைய ஒரு கோடியே 80 இலட்சம் தலித் மக்கள் இருக்கிறார்கள். ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்காக இருக்கிற, இவ்வளவு பெரிய மக்கள் தொகையை ஆண்டாண்டு காலமாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்பட்டு கிடக்கிற, நசுக்கப்பட்டு கிடக்கிற, ஒடுக்கப்பட்டு கிடக்கிற, நித்தம் நித்தம் சுரண்டப்படுகிற, வஞ்சிக்கப்படுகிற இந்த மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசவேண்டுமானால், அது மணிக்கணக்கில், நாட்கணக்கில், மாதக்கணக்கில் விவாதிக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய பிரச்சினை.

பேரவைத் தலைவரின் அனுமதிக்கிணங்க, மிகச் சுருக்கமாகக் கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். முதலிலே ஒடுக்கப்பட்ட மக்கள்மீது இன்றைக்கு இந்த அரசுக்கு எத்தகைய பார்வை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டும்.

மூன்றாவது முறையாக மிகப் பெரிய அளவில் மக்கள் ஆதரவோடு வெற்றிபெற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், முதல் பயணமாகவே ஒரு தலித் குடியிருப்புக்குச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே சங்கரலிங்கபுரத்திலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி, அவர்கள்மேல் போடப்பட்டிருக்கிற பொய்யான வழக்குகளையெல்லாம் இன்றைக்குத் திரும்பப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த அரசுக்கு அடித்தளத்து மக்கள்பேரிலே எத்தகைய பார்வை இருக்கிறது என்பதை அவர்களுடைய முதல் பயணமே (மேசையைத் தட்டும் ஒலி) அடித்தளத்து மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதனாலே என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மக்களுக்கு, ஆதிதிராவிடர்களுக்கு 18% என்றும், பழங்குடியினருக்கு 1% என்றும், 19% மாநில அரசால் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. மைய அரசு, மாநிலங்களின் மக்கள் தொகைக்கேற்ப, அந்த மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்ற மரபை தொன்றுதொட்டு ஏற்படுத்தியிருக்கிறது. நம்முடைய தமிழக அரசின் புள்ளிவிவரமே, ஏன், ஆதிதிராவிடர் நலத் துறை நமக்கு வழங்கியிருக்கிற இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே தமிழ்நாட்டில் 20% தலித் மக்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, கொள்கை விளக்கக் குறிப்பின் அடிப்படையிலேயே இந்த மக்களுக்கு 20% இட ஒதுக்கீடு இருந்திருக்க வேண்டும். 19% என்பது 20%-ஆக இருக்க வேண்டும். ஆனால் இந்த மக்கள்தொகை கணக்கெடுப்புகூட 10 ஆண்டுகளுக்கு முன்னாலே எடுக்கப்பட்டதுதான், 1990-லே எடுக்கப்பட்டதுதான். ஆகவே இப்போதைய புள்ளி விவரப்படி அடித்தளத்து மக்களுக்கான, தலித் மக்களுக்கு மிகக் குறைந்தபட்சம் 22% இடஒதுக்கீடு வழங்கவேண்டுமென்றுதான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குறிப்பிட்டதைப்போல மதம் மாறிய தலித்



கிறித்துவர்களுக்கும் 1 சதவிகிதமோ அல்லது 2 சதவிகிதமோ அவர்களுக்குத் தனியே இடஒதுக்கீடு வழங்க வேண்டியதை விரைவிலே நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தாமிரபரணியிலே 17 பேர், மேலவளவிலே 7 பேர், காட்டுமன்னார்கோவிலிலே 3 பேர், தியாகி சங்கரலிங்கனார் பெயரிலே போக்குவரத்துக் கழகத்திற்குப் பெயர் வைத்ததால் வந்த விளைவினால் இனக் கலவரத்தால் 40-க்கும் மேற்பட்டவர்கள், தென்னார்க்காடு மாவட்டத்தில் 10-க்கும் மேற்பட்டவர்கள், இப்படி கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் கலவரங்களாலும், போராட்டங்களாலும் படுகொலை செய்யப்பட்டு, இந்தியாவிலே வன்கொடுமைகள் நிகழ்ந்த 5-வது மாநிலமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 5-வது மாநிலம் என்ற பெயரை (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சி ஏற்படுத்தியிருந்தது என்ற புள்ளி விவரத்தை மைய அரசின் S.C./S.T. ஆணையம் தெரிவித்திருக்கிறது.

ஆகவே, அந்த நிலைமையை மாற்றி இன்றைக்கு தமிழகத்திலே அடித்தளத்து மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கக்கூடிய, தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற தோழனாக விளங்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே, இந்தியாவுக்கே முன்னுதாரணமாக, தாழ்த்தப்பட்ட பெண்கள், மேல்நிலை வகுப்பு படிக்கிற பெண்களுக்கு ஒரு சைக்கிள் தருகிற திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்து ஆதிதிராவிடர் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கான விடுதிகளை நிரந்தரக் கட்டடங்களாக ஆக்குவதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் ஒரு ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிக்கான பணத்தை ஒதுக்கவேண்டுமென்ற நிலையை உருவாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முறையை இந்த நடப்பாண்டிலேயே 234 ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளைச் சொந்தக் கட்டடத்திலே நடத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-50

அதேபோல, உத்தரப்பிரதேசத்திலே செல்வி மாயாவதி பொறுப்பேற்றபோது, முதலமைச்சராக இருந்தபோது சொன்னார்,

என்னுடைய முதல் திட்டமே உத்தரப்பிரதேசத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு கக்கூஸ் கட்டித் தருவதுதான். கழிவறை கட்டித் தருவதுதான் என்று. ஒரு பெண்ணுக்குத்தான் பெண்ணின் நிலைமை புரியும் என்கின்ற வகையிலே தமிழ்நாட்டிலே இருக்கிற அடித்தளத்து மக்கள் மாட மாளிகைகள் இருக்கிறதோ, வீடு இருக்கிறதோ இல்லையோ, கழிவறைகூட இல்லாமல் படுகிற அல்லலைப் பார்த்து இன்றைக்கு இந்த நடப்பாண்டிலே—கடந்த கூட்டத் தொடரிலேயானாலும், இந்த நிதிநிலை அறிக்கையிலேயானாலும்—தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கிற அனைத்துப் பகுதிகளுக்கும் தண்ணீருடன் கூடிய கழிவறைகளை ஒரு குடியிருப்புக்கு இரண்டரை இலட்சம் என்கிற வகையிலே ஒவ்வொரு தொகுதியிலும்—எல்லாத் தொகுதியிலும்—மிகக் குறைந்தபட்சம் 12 அல்லது 15 என்ற அளவில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான கழிவறை வளாகங்களைத் தமிழ்நாட்டிலே ஆதிதிராவிடப் பெண்கள் பயன்படுத்துகிற அளவுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிற அந்தத் திட்டத்தையும் நாம் நிச்சயமாக மனப்பூர்வமாக பாராட்டியாக வேண்டும்.

நான் இன்னொன்றை இங்கே அவசியமாக வலியுறுத்த விரும்புகிறேன். இந்தியாவுக்கே முன்னுதாரணமாக 1993-லே மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு திட்டத்தை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அறிமுகப்படுத்தினார்கள். Separate Industrial Estates for Dalits. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தனித் தொழில் வளாகம் என்பது இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலுமே கிடையாது. இந்த மாநிலத்திலே ஒவ்வொரு முறையும் நூறு ஆதிதிராவிட மக்களைக் கோடிக்கணக்கிலே தொழிலிலே முதலீடு செய்கிற அளவிற்கு கோடீஸ்வரர்களாக, தொழில் அதிபர்களாக உருவாக்குகிற அந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிலே புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். திருப்பூரில் முதலிப்பாளையத்திலும், ஈரோட்டிலே ஈஞ்சூரிலும் அதற்கான தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன. ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதை எவ்வளவு கிடப்பில் போடவேண்டுமோ, அவ்வளவு கிடப்பிலே போட்டு, அந்தத் திட்டத்தை எப்படியெல்லாம் இருட்டடிப்புச் செய்யவேண்டுமோ, எப்படியெல்லாம் அதைச் சீர்குலைக்க வேண்டுமோ, அப்படியெல்லாம் சீர்குலைத்து அப்படியே நிறுத்தி வைத்துவிட்டது. 200 தொழிற்கூடங்கள் உருவாக்கப்பட்டு 54 பேர் மட்டுமே பயனடைந்துள்ளனர். மீதமுள்ள நூற்றுக்கணக்கான தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு—கட்டப்பட்ட நிலையிலேயே—ஒரு தொழிற்கூடத்திற்கு 12 இலட்சம் அரசாங்கம் செலவு செய்திருக்கிறது. இன்றைக்கு 150 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு, கட்டப்பட்ட நிலையிலேயே—இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதில் ஒரு தனி அக்கறை எடுத்து, எந்தத் திட்டத்தை உருவாக்கி நாட்டுக்கு அவர்கள் முன்னுதாரணமாகக் கொண்டுவந்தார்களோ, அதை அவர்களே வந்து ஈரோட்டிலோ அல்லது திருப்பூரிலோ அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.





தற்போது 1300-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான விடுதிகள் இருக்கின்றன. இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகிற நிதி ஒதுக்கீட்டிலே 70 சதவிகிதம் அதற்கு ஒதுக்கப்பட்டுவிடுகிறது. இந்த நிலையிலே இந்தப் பள்ளிகளையும் இந்த விடுதிகளையும் கல்வித் துறையோடு இணைத்துவிடுவார்கள் என்கிற ஐயம்—அப்படிப்பட்ட ஒரு சந்தேகம்—இன்றைக்கு வெளிவந்து கொண்டிருக்கிறது. நான் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவென்றால், இந்த ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளைப் பொறுத்தவரை, இவை பிரிட்டிஷ் காலத்திலேயே தொடங்கியவை. சுதந்திரத்திற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பாகவே (மணியடிக்கப்பெற்றது) தமிழ்நாட்டிலே தொடங்கப்பட்ட பள்ளிகள். ஆகவே இந்த தனித்துவம் கருதி. இவற்றை கல்வித் துறையோடு இணைக்கக்கூடாது. ஆனால் தேசிய அளவிலே ஒரு திட்டம், ஒரு செலவினம் என்கிற வகையிலே நீங்கள் அதை இணைக்கவேண்டுமென்று விரும்பினால், கல்வித் துறையிலேயிருந்து நிதி ஒதுக்கீடு தந்து, இதன் தனித்துவம் போகாமல் இதற்காக ஒரு டைரக்டரேட், ஒரு தனி டைரக்டரேட்டை—கல்வித் துறையிலே Directorate for School Education இருக்கிறது. Directorate for Elementary School Education இருக்கிறது. Higher Secondary Education-க்கு ஒரு டைரக்டரேட் இருக்கிறது. அதைப்போல ஆதிதிராவிடர் நலத் துறைக்காக ஒரு டைரக்டரேட்டை—வேண்டுமானால் நீங்கள் போட்டு, இதன் தனித்துவம் எந்த வகையிலும் கெடாத அளவிற்கு இதன் மரபு காப்பாற்றப்படுகிற அளவிற்கு கல்வித் துறையிலேயிருந்து நீங்கள் மானியம் தந்து, கல்வித் துறையிலேயிருந்து நிதி ஒதுக்கீடு செய்து அதைச் செயல்படுத்தவேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன், முடித்து விடுங்கள், அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

பிற்பகல் 12-55

**திரு. செ.கு. தமிழரசன்:** இரண்டு நிமிடம் கொடுங்கள். இன்றைக்கு மத்திய அரசினுடைய, மத்தியிலே இருக்கின்ற பாரதிய ஜனதாவினுடைய ஒரு தவறான தனியார்மயமாக்கும் கொள்கையினால் மத்திய அரசினுடைய பல்வேறு நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டு வருகின்றன. இன்சூரன்ஸ், வங்கிகள், அஞ்சல் துறை, தொலைபேசித் துறை என அரசு நிறுவனங்கள் முழுக்க, முழுக்கத் தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றன. இப்படி தனியார்மயமாக்கப் படுமேயானால் வருங்காலத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு கிடைக்குமா? வேலைவாய்ப்பு என்பது ஒரு கேள்வியாக, சந்தேகக்குறியாக இருக்கிறது. ஆகவே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தமிழக அரசிலே அதையும் ஒரு முன்னுதாரணமாக தனியார் துறையிலே இட ஒதுக்கீடு கொண்டு வரவேண்டும். பல நிறுவனங்கள், பெரிய நிறுவனங்கள், நம்முடைய அரசாங்கத்திலேயிருந்து நிதி உதவி பெற்றுத் தொடங்கப்படுகிற நிறுவனங்கள்தான். கோடிக்கணக்கிலே புழங்குகிற எந்த நிறுவனமாக இருந்தாலும் அரசாங்கத்திடமிருந்து நிதியுதவி பெறாமல் தொடங்க முடியாது. ஆகவே தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு கொண்டு வருவதற்கு நம்முடைய மாநில அரசு முன் வரவேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

அதேபோல 44-வது அரசாணையைப் புரட்சித் தலைவி அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதே எங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து, எங்களுக்காகப் பல்வேறு அறிக்கைகளைத் தந்து அவர் ஆளுங்கட்சியாக வந்த பிறகும் மறக்காமல் முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே 44-வது அரசாணையை நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவுபடுத்த வேண்டும். அதை முழுமைப்படுத்த வேண்டும். துறைதோறும், ஒவ்வொரு நிலையிலும், Class 1, Class 2, Class 3, Class 4, Class 5 என்று சொல்லப்படுகிற 5 பிரிவுகளிலும் ஒவ்வொரு துறையிலும் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு முன் வரவேண்டும். இது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைச் சுட்டிக்காட்டுகிற வகையிலே வெளிப்படுத்துகிற வகையிலே ஒரு வெள்ளை அறிக்கையை—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு வெள்ளை அறிக்கையைத் தந்தார்கள். அது வெள்ளை அறிக்கை அல்ல, அது முழுக்க, முழுக்க ஒரு கொள்ளை அறிக்கை என்றே நான் சொல்வேன். 9 துறைகளிலே எங்களால் விவரம் சொல்ல முடியவில்லை என்று ஓர் அரசு சொல்கிறது என்று சொன்னால், ஓர் அரசாங்கம் 6 மாத காலம் எடுத்துக்கொண்ட பின்னாலே 9 துறைகளிலே எங்களால் கணக்கு எடுக்கமுடியவில்லை, ஆகவே 9 துறைகளிலே எங்களால் சொல்ல முடியவில்லை, இதைத்தான் சொல்ல வந்திருக்கிறோம் என்று ஒரு வெள்ளை அறிக்கையைத் தர முடிந்திருக்கிறது என்று சொன்னால் ஓர் அரசாங்கத்திற்கே 9 துறைகளிலே கணக்கு எடுக்கமுடியவில்லை என்று 'சொன்னால் இதை நாங்கள் வெள்ளை அறிக்கை என்று எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? ஆகவேதான் கொள்ளை அறிக்கை என்று சொல்கிறேன். இப்போது—முழுமைப்படுத்தப்பட்ட, தெளிவுபடுத்தப்பட்ட, விரிவுபடுத்தப்பட்ட, உண்மையான ஒரு வெள்ளை அறிக்கையை நம்முடைய தமிழக அரசு வெளியிட வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லி வந்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பஞ்சமி நிலமீட்பு ஆணையம் கொண்டு வருவோம், பஞ்சமி நிலங்களை எல்லாம் மீட்டு, ஏழை தலித் மக்களுக்குத் தருவோம் என்று தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள் அவர்கள்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை முடியுங்கள்..

**திரு. செ.கு. தமிழரசன்:** நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே 50% தாழ்த்தப்பட்டவர்களுக்கோ அல்லது தாழ்த்தப்பட்டவர்களை உள்ளடக்கிய கூட்டுறவு நிறுவனங்களுக்கோ—அவர்கள் ஏழைக் கூலித் தொழிலாளர்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அவர்களுக்குப் பயன்படுகிற வகையிலே 50%-ஐ அவர்களுக்கோ—அல்லது அவர்கள் அமைக்கிற கூட்டுறவு நிறுவனங்களுக்கோ தரவேண்டும் என்கிற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன்.

நம்முடைய T.N.P.S.C.-யிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கான ஓர் உறுப்பினர் இடம் நிரப்பப்படாமலேயே இருக்கிறது. வேலைவாய்ப்பை ஏற்படுத்துகிற எல்லா நிறுவனங்களிலும் கட்டாயம் ஒரு தாழ்த்தப்பட்டவர் உறுப்பினராக இருக்க வேண்டும் என்கிற ஒரு மரபு இருக்கிறது. ஆனால் T.N.P.S.C.-யிலே 6 மாத காலத்திற்கு மேலாக ஒரு உறுப்பினர் பதவி நிரப்பப்படாமல் இருக்கிறது. உடனடியாக ஒரு உறுப்பினரை நியமிப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இன்னொரு கோரிக்கை. நம்முடைய சட்டப் பேரவைத் தலைவரே இந்தத் கோரிக்கையை ஏற்றுக் கொள்வார் என்று கருதுகின்றேன். தாழ்த்தப்பட்ட மக்களிலே மிகச் சிறந்த தமிழ் அறிஞராக விளங்கிய தேவநேயப் பாவாணருடைய நூற்றாண்டு இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த நூற்றாண்டைச் சிறப்புப்படுத்துகிற வகையிலே—ஒரு மிகப் பெரிய, அவர் தலித்தாக இருந்தாலும்—மிகப் பெரிய தமிழ் பேரறிஞராக இருந்த பாவாணரின் பெருமையை வலியுறுத்தும் வகையிலே அவர்களுடைய சொந்தத் தொகுதியான, நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் சொந்தத் தொகுதியான சங்கரநயினார் கோவில் தொகுதியிலே ஒரு பெரிய நினைவாலயத்தை உருவாக்க வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தாத்தா இரட்டைமலை சீனிவாசன், பண்டிதமணி அயோத்திதாசன் போன்ற எங்களுடைய மூத்தத் தலைவர்களுடைய அந்த அரிய சொற்பொழிவுகளை, கருத்துகளை, புத்தகங்களை எல்லாம் இன்றைக்கு ஒலி அளவில் இணைத்து வைக்கின்ற ஒரு பெட்டகமாக இந்த அரசு அதைக் காப்பாற்ற முன்வந்திருப்பதை நான் பாராட்டுகின்றேன்.

தாத்தா இரட்டைமலை சீனிவாசனுக்கு ஒரு சிறப்புச் செய்ய வேண்டும். பாபா சாகிப் அம்பேத்கருக்கு மணி மண்டபம் கட்டியவர்கள் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணல் அம்பேத்கருக்கு சிலை வைத்தவர்கள் புரட்சித் தலைவி. அண்ணல் அம்பேத்கருக்குப் போக்குவரத்துக் கழகம் வைத்தவர்கள் புரட்சித் தலைவி. இப்படிப் படிப்படியாக அண்ணல் அம்பேத்கருக்கு நினைவுச்சின்னம் வைத்ததோடு மட்டும் இல்லாமல் எங்களுடைய வணக்கத்திற்குரிய தந்தை, பேராசிரியர் சிவராஜ் அவர்களுடைய சிலையை மின்ட்டிலே வைத்தவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். தாத்தா இரட்டைமலை சீனிவாசனுக்குத்தான் ஒரு நினைவுச் சின்னமில்லாமல் இருக்கிறது. கோயம்பேட்டிலே அவர் வசித்த பகுதியிலே ஒரு மிகப் பெரிய பேருந்து நிலையத்தை இந்த அரசாங்கம் கட்டிக் கொண்டிருக்கிறது. அதன் திறப்புவிழாவின்போது தாத்தா இரட்டைமலை சீனிவாசனுடைய பெயரை அந்தப் பேருந்து நிலையத்திற்கு வைக்கவோ அல்லது அவர்களுடைய சிலையை உருவாக்கவோ இந்த அரசு முன் வர வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



பிற்பகல் 1-00

நான் ஒரே ஒரு கருத்தை இறுதியாக வலியுறுத்த விரும்புகிறேன். மனதில்பட்ட எந்தக் கருத்தையும் துணிந்து சொல்கிற ஓர் அரசியல் தலைவராக இன்றைக்கு இந்தியாவிலேயே விளங்கக்கூடியவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தியாவே பெருமைப்படுகிற அளவிற்கு இந்தியக் குடியரசின் தலைவராக முதல் முறையாக அரை நூற்றாண்டு கால சுதந்திரத்திற்குப் பிறகு ஒரு தலித் வந்திருக்கிறார். மீண்டும் குடியரசுத் தலைவர் தேர்தல் வரவிருக்கிறது. இந்த தலித் குடியரசுத் தலைவரே தொடர்வதற்கும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் குரல் கொடுப்பார்களேயானால், இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற 20 கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் புரட்சித் தலைவியினுடைய பின்னாலே நிச்சயம் நிற்பார்கள் என்கிற அந்த உணர்வை நான் இங்கே பிரதிபலிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. செ. கு. தமிழரசன்:** தமிழ்நாட்டிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயே, தெய்வத் தாயே..

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

## 5. உரிமை மீறல் பிரச்சினை—தொடர்ச்சி

**காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து அவைக்குத் தவறான தகவல்கள் அளித்துள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் மீதான உரிமைப் பிரச்சினைக்கு பேரவைத் தலைவர் தீர்ப்பு** —தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் கொஞ்சம் இருங்கள். துரைமுருகன் என்ன?

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள், நாங்கள் கொடுத்திருந்த உரிமைப் பிரச்சினைமீது தீர்ப்புரைத்திருக்கிறீர்கள். நான் தீர்ப்புக்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், இதிலே தாங்கள் கையாண்ட நடைமுறையைப் பற்றி நான் தங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம். முதலில், இந்த உரிமைப் பிரச்சினையைக் கொடுத்தவர்களுக்கு அவகாசம் கொடுத்திருக்க வேண்டும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாருக்கு?

**திரு. துரைமுருகன் :** எங்களுக்கு, பேசுவதற்கு இந்த அவையிலே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைப் பிரச்சினை கொடுக்கப்பட்டது. என்னிடத்திலே எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்டது. நான் நேற்றே, நீங்கள் கிளப்பிய போதே சொன்னேன், அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது, தீர்ப்பை நான் சொல்லப் போகிறேன் என்று சொன்னேன். அதற்குப் பிறகுதான் தீர்ப்பைச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** இரண்டாவது, எங்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்திருந்தால்தான்; இன்னும் பல விஷயங்களை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். நேற்று கொடுத்த உரிமைப் பிரச்சினையோடு ஒட்டிய இன்னொன்றையும் இன்றைக்கு நாங்கள் தந்திருக்கிறோம். எனவே—இரண்டையும் சேர்த்து எங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்திருந்தால்—நீங்கள் அதை... (குறுக்கீடு) இல்லை நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைப் பிரச்சினை என்று நான் கருதினால்தான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்க முடியும். உரிமைப் பிரச்சினை என்று நான் கருதவில்லை. ஆகவே, வாய்ப்புக் கொடுக்கவில்லை. துரைமுருகன் அவர்களுக்கு, நான் பேரவை விதி 224-ஐ வாசித்துக்காட்ட விரும்புகிறேன்.

'பேரவைத் தலைவர் இசைவினை மறுத்தாலும் அல்லது அவையின் கவனத்தை ஈர்க்க வேண்டிய அவசியமில்லை எனக் கருதினாலும் அறிவிப்பு அளித்த உறுப்பினருக்கு அத்தகவலை அளிப்பின் அதன் பிறகு அப்பொருள் குறித்து எவ்வகையிலும் பேரவையில் எழுப்பக் கூடாது' என்பது விதி. ஆகவே, அந்த விதியைத் தாங்கள் மீறலாமா? அதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும். நான் விதியை மீற வேண்டுமென்று சொல்லவில்லை. தனிச் சலுகையையும் கேட்கவில்லை. ஆனால், இது ஒரு மரபு, நீங்கள்கூட பாருங்கள். இந்த அவையிலே கவன ஈர்ப்பிலே, சிறப்புக் கவன ஈர்ப்பு என்று ஒன்று விதியிலே கிடையாது. ஆனால், நாம் தருகிறோம். அப்படியொரு வாய்ப்பை எங்களுக்குத் தந்திருப்பீர்களேயானால், நாங்கள் இந்த உரிமைப்





பிரச்சினையை, எழுத்து மூலமாகக் கொடுத்ததைவிட இன்னும் சில விவகாரங்களை இங்கே பேசுவதற்கான வாய்ப்புக்களைத் தந்திருக்கலாம். எனவே, எங்களுக்குத் தரவேண்டிய அடிப்படை உரிமையை தாங்கள் எங்களுக்குத் தராமல் தடுத்துவிட்டீர்கள் என்பது என்னுடைய ஒரு கருத்து. இரண்டாவது, இந்த உரிமைப் பிரச்சினையைக் கொடுத்தவர்கள் நாங்கள் இந்த அவையிலே இருக்க வேண்டும் என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. ஆனால், சில நேரங்களிலே காபி சாப்பிடப் போகலாம், வெளியிலே போய்விட்டு வரலாம். இந்த அவையிலே கையெழுத்து போட்டவர்கள், இதைக் கொடுத்தவர்கள் ஒருவரும் இல்லாத ஒரு நேரத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, புகழேந்தி கொடுத்திருந்தார்கள்.

**திரு. துரைமுருகன்:** அப்புறம்தான் ஓடிவந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி இளம்வழுதி கொடுத்திருந்தார்.

**திரு. துரைமுருகன்:** நான் கேட்டேன். இல்லை, ஓடிவந்தார். ஆனால், முடிந்த அளவுக்கு, அதாவது எங்களிடத்திலே சொல்லிவிட்டு, இப்படியொரு உரிமைப் பிரச்சினை இருக்கிறது, அதன்மீது நான் தீர்ப்பு அளிக்கப் போகிறேன் என்று தெரிவித்திருந்தால் நாங்கள் முன்கூட்டியே உங்கள் தீர்ப்புக்காக நாங்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இது என்ன மன்னர் ஆட்சிக் காலமா கட்டியம் கூறிவிட்டு வர, பராக் பராக் என்று சொல்லிவிட்டு.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, தாங்கள் வருகிறபோது அப்படித்தான் கூறுகிறார்கள். 'மாண்புமிகு பேரவைத் தலைவர்' அப்படித்தான் சொல்கிறார்கள், கட்டியம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், பிரச்சினை வரும்போதெல்லாம் கட்டியம் கூற முடியாது.

**திரு. துரைமுருகன்:** ஆனால், இந்த மன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தர வேண்டிய ஒரு வாய்ப்பைத் தராததாலும், எங்களுக்குத் தெரியாமலேயே நீங்கள் தீர்ப்புரைத்துவிட்ட காரணத்தாலும், தங்கள் தீர்ப்பின்மீது நாங்கள் எந்தக் கருத்தையும் சொல்லக்கூடாது

[திரு. துரைமுருகன்] [2002 ஏப்ரல் 11

என்று ஒரு விதி இருக்கிற காரணத்தாலும், எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் நாங்கள் இப்போது வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. இரா. திருமாவளவன், டாக்டர் பி. வள்ளல் பெருமான் ஆகிய இருவரைத் தவிர ஏனைய் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம், விடுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** முக்கியமான ஒரு மானியக் கோரிக்கைமீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. அதுவும் ஆதிதிராவிடர் நலத் துறை. அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, உறுப்பினர்கள் கருத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அமைச்சர் அதற்கான ஒரு நல்ல பதிலைத் தருகின்ற நேரத்தில், அந்தத் துறையை மதிக்காமல் அவர்கள் வெளிநடப்புச் செய்வது மிகவும் கண்டனத்திற்குரியதாக இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயே தெய்வத் தாயே, குல தெய்வமே, பொற்பாதங்களை மண்டியிட்டு வணங்குகின்றேன்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் துணிவு, பேரறிஞர் அண்ணாவின் அறிவு, புரட்சித் தலைவரின் கருணை உள்ளம் இவை மூன்றையும் பெற்று, சீர்கெட்ட நிதிநிலை... சீரமைக்கும் சிந்தனைச் சிற்பியே, மதவாதமும், தீவிரவாதமும் மன்னிக்க முடியாத மாபாதகம் என்பதை மனதில் ஏந்தி மாநிலம் முழுவதும் மாண்பினைக் காக்கும் மனித நேய மாணிக்கமே,



2002 ஏப்ரல் 11] [திரு. சொ. கருப்பசாமி]

அகிலமே தங்களை ஆராதனை செய்கிறது. உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் இல்லாத எவரும் உயிர்வாழ முடியாது என்பதை உள்ளத்தில் ஏந்தி உருக்கொடுத்து செயல்படுத்தும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் ஒருமுறை வணங்கி சாதாரண குக்கிராமத்தில் விவசாயத்தையே நம்பி வாழ்ந்துகொண்டு இருக்கும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த என்னை ஊராட்சி மன்றத் தலைவராகவும், ஒன்றிய கழகச் செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும், அரசியல் வாழ்வு அளித்து இரண்டாம் முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கி மாண்புமிகு அம்மா அவர்களின் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சராகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வத்தின் பொற்பாத மலர்களில் எனது நன்றியினைக் காணிக்கையாக்கி எனது பதிலுரையைத் துவக்குகிறேன்.

ஒரு சமுதாயம் பல துறைகளிலும் முன்னேற அடிப்படையாக இருப்பது கல்வி. அதிலும், குறிப்பாக பெண்கள் கல்வியறிவு பெற்றால் ஒரு குடும்பமே முன்னேற வாய்ப்புண்டு. எனவே ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பரிசுத் தொகைகள் வழங்கும் திட்டம், ஊக்கத் தொகைகள் வழங்கும் திட்டம், சிறப்புக் கையேடுகள் வழங்கும் திட்டம், அனைத்து ஆதிதிராவிட நல விடுதிகளுக்கும் நூலக வசதி ஏற்படுத்தும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள். மேலும், ஆதிதிராவிட பெண் குழந்தைகள் அதிக அளவில் கல்வி பயில வேண்டும் என்றும் அவர்கள் படிப்பை இடையில் நிறுத்தி விடுவதை அறவே நீக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் பெண் குழந்தைகள் 60,000 பேர்களுக்கு மாதம் ரூ.50 வீதம் ஓராண்டில் 10 மாதங்களுக்கு ரூ.500 ஊக்கத் தொகை வழங்கவும், அதேபோல், 6 ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட பெண் குழந்தைகள் 30,000 பேர்களுக்கு மாதம் ரூ.100 வீதம் ஓராண்டில் 10 மாதங்களுக்கு ரூ.1000 வழங்கவும், வகை செய்யும் திட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். தொடர்ந்து செயல்பட்டு வரும் இத்திட்டங்களுக்காக நடப்பு நிதியாண்டில் ரூ.6 கோடியை ஒதுக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், பெண் குழந்தைகளின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் விதத்தில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு கல்வி பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகள், தங்கள் கிராமங்களிலிருந்து சிரமம் இன்றி பள்ளிக்குச் சென்று கல்வி கற்றுவர இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதல்முறையாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். மாண்புமிகு திருமாவளவன் அவர்கள் ஏதோ கவர்ச்சியான திட்டம், ஏதோ மத்திய அரசாங்கத்திலிருந்து கொடுப்பதாக ஒரு தவறான தகவலைக் கொடுத்திருக்கின்றார். கிராமத்திலுள்ள குடும்பங்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் எந்த அளவுக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற நிலையெல்லாம் தெரியாமல் ஏதோ பொத்தாம் பொதுவாகச் சொல்வது தாழ்த்தப்பட்ட மக்களை மிகவும் அவமானம் செய்வதாக உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இத்திட்டத்தைக் கடந்த ஆண்டில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி நல்ல தரமான 56,769 மிதி வண்டிகளை இலவசமாக மாணவிகளுக்கு வழங்கியுள்ளார்கள். இந்தத் திட்டத்தை நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு அதற்காக ரூ.6 கோடியை ஒதுக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. முதுகலைப் பட்டப் படிப்பு வரையிலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியர்களுக்கு இலவசக் கல்வியை அளித்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவியர்களுக்கு தனியாக ஒரு விடுதியையும் சென்னையில் ஏற்படுத்தி உள்ளார்கள். ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்க ரூ.10.12 கோடி நிதியும், இலவசச் சீருடைகள் வழங்க ரூ.5.74 கோடி நிதியும், கல்வி ஊக்கத் தொகை மற்றும் இலவசக் கல்வி போன்றவற்றிற்கு ரூ.40.84 கோடி நிதியும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துறையின்கீழ் 1017 ஆதிதிராவிட நலப் பள்ளிகளும், 245 பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளும், 1076 ஆதிதிராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதிகளும் மற்றும் 26 பழங்குடியின மாணவ மாணவியர் விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இதில் 66 பள்ளிகளும், 574 விடுதிகளும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பள்ளிகளில் கூடுதலாக கட்டட



வசதிகளுக்காக நடப்பு ஆண்டில் 19.47 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு 2 ஆண்டுகளில் அரசு சொந்தக் கட்டடங்களாக கட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி நடப்பு ஆண்டில் 143 விடுதிகளுக்கு கட்டடம் கட்ட "ஹட்கோ" நிதி நிறுவனத்திடமிருந்து தற்போது ரூபாய் 31.37 கோடி கடன் பெறப்பட்டுள்ளது. இதில் முதல்கட்டமாக 83 விடுதிகளுக்குக் கட்டடப் பணிகளை ஆரம்பிக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன. ஹட்கோவின் கடன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கித் தந்துள்ள நிதியைக் கொண்டும், இந்த விடுதிகளுக்குக் கட்டடங்கள் தாட்கோ மூலம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். கடந்த 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 134 ஆனால், விடுதிக் கட்டடங்கள் மட்டுமே கட்டப்பட்டுள்ளன என்பதை—இங்குள்ள மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இங்கு இல்லை—அவர்களுடைய, அவர்களின் தோழமைக் கட்சியாக இருக்கின்ற திரு. அரசன் அவர்கள் இதை நன்கு உணர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர் தோழமையா என்றே சந்தேகமாக இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. ப. அரசன்:** தோழமைக் கட்சிதான். அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** அடுத்தபடியாக ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டிற்கு ரூபாய் 8.16 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். ஆண்டுதோறும் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி, எண்ணிக்கையை உயர்த்துவதற்குப் பதிலாக, ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, பாதை வசதி போன்ற வசதிகளை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்காக 5 கோடி ரூபாயையும் ஏற்கெனவே ஒதுக்கித் தந்துள்ளார்கள். இத்தொகை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டு, அடிப்படை வசதிகளை விரைவாக ஏற்படுத்தித் தருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 31,000 இலவச வீடுகள் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கத் தேவையான நில எடுப்பு செய்யப்பட்டுள்ள இடங்களில் நில உரிமையாளர்கள் நீதிமன்றங்கள் மூலமாக தடையாணை பெற்று விடுகிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இப்படித் தடையாணை பெற்று, நிலுவையில் உள்ள வழக்குகள் மட்டும் 679 உள்ளன.

தாழ்த்தப்பட்ட மக்களின் சம்பந்தி என்று சொல்லும் தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்களே, விரைவில் வீட்டுமனைப் பட்டா வழங்க, 679 வழக்குகளுக்குத் தனி நீதிமன்றம் அமைக்காமல், அகில உலகமே உற்றுப் பார்க்கின்ற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்காக தனி நீதிமன்றம் அமைத்ததன் காரணமென்ன? (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலனில் உங்களுக்கு அக்கறையில்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் இயங்கும் இயக்கத்தை அழித்துவிட வேண்டும் என்பது கருணாநிதியின் குறிக்கோள் என்பது இதிலிருந்து தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

அதுபோல் ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகளில் 669 ஆசிரியர் பணியிடங்கள் கடந்த தி.மு.க.ஆட்சிக் காலத்தில் காலியாகவே வைத்திருந்ததன் காரணமாக ஆதிதிராவிட மாணவர்களின் கல்வித் தரம் பாதிக்கப்பட்டிருந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் ஓட்டு கேட்கும்போது, சம்பந்தி என்று சொல்லிக்கொண்டு சட்டசபைக்கு வெளியிலே இருக்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்களே, இந்த நாடு உங்களை மன்னிக்குமா? தாழ்த்தப்பட்டவர்களின் பாவம்தான் உங்களைச் சும்மா விடுமா? தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த என்னை இந்த அவைக்குள்ளே அடித்துக் கொல்லப் பார்த்தீர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்னைக் காப்பாற்றி (மேசையைத் தட்டும் ஒலி) இதே அவையில் இப்போது என்னை அமைச்சராகவும் ஆக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)





மேலும், கடந்த தி.மு.க. ஆட்சியில் உழவு மாடுகள் வழங்க ஒதுக்கப்பட்ட நிதியில்—மாண்புமிகு போளூர் வரதன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள், ஒதுக்கப்பட்ட நிதியில்—ரூபாய் 2.02 இலட்சமும், மாணவர்களுக்குச் சீருடை வழங்கும் செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபாய் 431.84 இலட்சமும், மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் ரூபாய் 1,025 இலட்சமும், சமத்துவபுரம் கட்டுவதற்காகப் பயன்படுத்தி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குத் துரோகம் செய்துவிட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திருமாவளவன் அவர்கள் ஏதோ, தாழ்த்தப்பட்டவர்களுக்காக எங்கேயும் இல்லாத பிரச்சினையை இங்கு சபையிலே வந்து, இல்லாதது பொல்லாததை பொத்தாம் பொதுவாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். யாருக்காக? தன் சுயநலத்திற்காகச்—சிலர் அரசியலில்—சில பேர் அரசியல் செய்து வருவதை இப்போது நாட்டுமக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் நன்கு தெரிந்து கொண்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இந்த அவைக்குள்ளே வராத கருணாநிதி உண்மைக்கு மாறான தகவலை, பேட்டியின் மூலம் குடும்பப் பத்திரிகையில், கடிதம் மூலமாக—எல்லோரும் இன்லேண்டு கடிதம்தான் எழுதுவார்கள். ஆனால், இந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி மட்டும் அவரது குடும்பப் பத்திரிகை முரசொலியிலே—மக்களுக்குக் கடிதம் எழுதிக் கொண்டேயிருக்கிறார். அதுதான் அவர்களுக்கு வேலை. மாண்புமிகு அம்மா அவர்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளைக் கணக்கெடுப்பு செய்து, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில் நடப்பு ஆண்டில் குடிநீர் வசதி குறைவாக உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குப் போதுமான குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர ரூ.35 இலட்சத்தை ஒதுக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

மேலும், மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கவனமாகக் கேட்க வேண்டும். மயானம் மற்றும் மயானப் பாதை வசதிகள் ஏற்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 1.16 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்கள் படுகின்ற கஷ்டத்தை, கடந்த

ஆட்சியில் பட்ட வேதனைகளை எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் தீர்த்து வைக்கக்கூடிய நிலையில் இந்த நிதி நெருக்கடியிலும், இப்போது இருக்கின்ற நிதி நெருக்கடியிலும் இந்த அளவுக்கு நிதி ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஆதிதிராவிடர் ஒருவர் இறந்தால் அவரது ஈமச் சடங்கிற்கு ரூபாய் 500 வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பு ஆண்டில் 2 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

அதுமட்டுமல்ல. குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமாவளவன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் முருகவேல் ராஜன் அவர்களும் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற உடனே நம்முடைய இந்த குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகியவற்றை செம்மையாகச் செயல்படுத்திடவும், தீண்டாமைப் பழக்கத்தை ஒழித்திடவும் கூடுதல் காவல் துறை இயக்குநர் (சமூக நீதி) அவர்கள் தலைமையில் ஒரு காவல் துறைத் தலைவர், 7 துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் 34 காவல் ஆய்வாளர்களைக் கொண்ட மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று தனியே செயல்பட்டு வருகின்றது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள குழு ஆண்டிற்கு இரு முறை கூடி இச்சட்டங்களின் செயலாக்கம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து வருகின்றது.

வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ், ஏற்கெனவே சொன்னதுபோல 2001 ஆம் ஆண்டில் 828 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதில் அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில், இந்த வழக்குகள் மீதான விசாரணை துரிதப்படுத்தப்பட்டதன் விளைவாக, 442 வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, 313 வழக்குகள் போதிய ஆதாரம் இல்லாமல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. 3 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. 9



வழக்குகளில் விடுதலை செய்யப்பட்டது. மீதி வழக்குகள் விசாரணையில் உள்ளன. விரைவாக நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடப்பு ஆண்டில் 30,000 ஆதிதிராவிட மகளிர் மற்றும் 10,000 பழங்குடி மகளிர் பயன் அடையும் வகையில் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, தாட்கோ மூலம் அவர்களுக்குத் தேவையான தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் குறிப்பிட்ட தொழில்களில் சிறப்புப் பயிற்சி ஆகியவை வழங்கப்படும். கடன் மற்றும் மானிய உதவிகள் வழங்க, விதிமுறைகள் எளிதாக்கப்படும். நிலமற்றவர்களாகவும், வேலைவாய்ப்பின்றி சிரமப்படுபவர்களாகவும் உள்ள ஏழை ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு நிலம் வாங்கி வழங்கும் ஒரு புதிய திட்டம் தாட்கோ மூலம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். தாட்கோ திட்டச் செயலாக்க முறையினைச் செம்மைப்படுத்த, தாட்கோ தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் கணினிமயமாக்கப்படும்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் தாட்கோ நிறுவனம் மூலம் 44,800 பேர்களுக்கு பல்வேறு கடனுதவிகள், வேலைவாய்ப்பு பயிற்சிகள் அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தாட்கோ திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டதன் காரணமாக—மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் ஏதோ வலுவாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள்—மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் வலுவாகச் செயல்பட்டதன் காரணமாகத்தான் தாட்கோ திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டதன் விளைவாக, 42,281 பேர்கள் பயன் அடைந்துள்ளார்கள். இப்பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.72.73 கோடி அளவுக்கு மானியம், விளிம்புத் தொகை மற்றும் பருவக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ரூ.63.45 கோடி செலவிடப்பட்டு, 20,143 பயனாளிகள் மட்டுமே பயன் அடைந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அமைச்சர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** இப்படி பல்வேறு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றம் அடைய

வேண்டும் என்பது மட்டுமல்ல, தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற அக்கறையோடு சீரிய திட்டங்களைச் செயலாற்றி வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள்—இந்தத் திட்டங்களோடு—புதிய அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் மூலமாக, அவர்கள் எந்த அளவுக்கு முனைப்போடு, முன்னேற்றப் பாதையில் செல்கின்ற விளக்கத்தை புதிய அறிவிப்பாக நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

ஆதிதிராவிடர் நலத் துறையில் இயங்கிவரும் அனைத்துப் பள்ளிகளிலும், தேவையான உள்ளமைப்பு வசதிகள் கண்டறியப்பட்டு சர்வ சிக்ஷா அபியான் நிதியின் மூலம் வேண்டிய வசதிகள் செய்து தரப்படும். சோதனைக்கூடமில்லை, கம்ப்யூட்டர் இல்லை, சுற்றுச்சுவர் இல்லை, வகுப்பறைகள் இல்லை என்ற பேச்சுக்கே இடமில்லாத வகையில் இவை நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளி ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை வளர்க்க அவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும். ஆசிரியர் நியமனத் தேவைகளைக் கண்டறிந்து தேவைப்படின், பயிற்சியளித்து காலியான இடங்களில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

உயர்கல்வி என்பது ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினரின் மேன்மைக்கு அறிகுறி. அந்த மேன்மையை அடைவதற்கு அவர்களுக்கிருக்கும் சிக்கலைக் களைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரை கடனாக வழங்கி வந்த கல்விக் கடன் தொகையை மிகவும் கருணைகொண்டு மானியமாக அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வகையில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், கூடுதலாகக் கடன் தொகையை கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மானியமாகவே 5 கோடி ரூபாய் வழங்கி விட்டார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பார்புகழும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவிகளின் தன்னம்பிக்கையை வளர்க்க வெற்றிகரமான இலவச சைக்கிள் திட்டம் இவ்வருடமும் நடைமுறைப்படுத்தப்படும்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மேன்மை மட்டுமின்றி, பொருளாதாரத்திலும் மேன்மையுறும் வகையில், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு நிலம் வழங்கப்பட்டு, அந்த நிலத்தை அவர்களுக்குப் பயனுள்ளதாக ஆக்க தாட்கோ மூலம் அவர்களுக்குக் கடனுதவி வழங்கப்படும்.

30,000 ஆதிதிராவிடர் மற்றும் 10,000 பழங்குடியினப் பெண்கள் பயனுறும் வகையில் சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சியும், தாட்கோ மூலம் கடனுதவியும் வழங்கப்பெறும்.

குறைந்தபட்சமாக 50,000 படித்த இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த புத்தறிவுப் பயிற்சிகள் வழங்கப்பெறும்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் முதன்முறையாக அவர்களது அறிவுரைப்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் அதிகாரிகள் அக்கறை கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் துணைச் செயலாளர் அளவிலிருந்து தொடங்கி உயர் I.A.S. அதிகாரிகளுக்கும் உயர் போலீஸ் அதிகாரிகளுக்கும் மேலும் ஆறு மாவட்டங்களில் உள்ள மாவட்ட அதிகாரிகளுக்குமாக 20 உணர்வூட்டல் முகாம்கள் நடத்தப்பட்டன. இவ்வருடமும் அந்த உணர்வூட்டல் முகாம்கள் மாநில அளவிலும், எல்லா மாவட்டங்களிலும் அதிக அளவில் நடத்தப்பெறும்.

இதுவன்றி மக்கள் சிவில் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் விழிப்புணர்வு முகாம்களும், கருத்தரங்குகளும் மத்திய அரசின் நிதியுதவி பெற்று நடத்தப்பெறும்.

கொத்தடிமையை ஒழிப்பதுடன் அம்முறை என்றென்றும் தலை தூக்கா வண்ணம் உலகத் தொழிலாளர்கள் அமைப்பினுடைய திட்டம், மாநில அரசின் 20 சதவிகித நிதியுடன், மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தபின் தொடங்கப்படும்.

கல்வி, பொருளாதார, சட்டப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்ததுடன் நின்றுவிடாமல் யாரும் இதுவரை நினைத்துப் பார்த்திராத வகையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆதிதிராவிடர்களின் கலை இலக்கிய மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் வகையில் பல திட்டங்களை அறிவிக்கிறது.

[திரு. சொ. கருப்பசாமி] [2002 ஏப்ரல் 11

ஆதிதிராவிடர்களின் கலை இலக்கியங்களை முன்னேற்றும் வகையில் ஆய்வு மையம் அமைக்கும்.

ஆதிதிராவிடர்களின் நிகழ் கலைகளுக்குப் பயிற்சி மையம் அமைக்கும். ஆதிதிராவிடர்களின் கலை வெளிப்பாட்டுக்காக சோழமண்டலத்திலாவது அல்லது படப்பையிலாவது தனியாக கலைக் கிராமம் அமைத்து அவர்கள் அங்கு ஓவியம்-சிற்பம் படைக்கவும் அவற்றைக் கண்காட்சிக்கு வைக்கவும் ஏற்பாடு செய்யும்.

ஆதிதிராவிடர்களுக்கான ஆவணக் காப்பகம் அமைத்து ஆதிதிராவிட மாமேதைகளின் படைப்புக்கள், பத்திரிகைகள், ஒலி நாடாக்கள், ஒளிப் பேழைகள் இவற்றைப் பாதுகாக்கும்.

ஆதிதிராவிடர்கள் படைப்புகளை வெளிக் கொணர்வதற்கென தனியாக வெளியீட்டுப் பதிப்பகம் அமைக்கும். இவை யாவும் அமையவிருக்கும் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

பழங்குடியின மக்களின் தனித் தன்மையைக் கருத்தில்கொண்டு தாட்கோவில் பழங்குடி மக்களுக்கென தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு மத்திய அரசின் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நிதியுதவி பெற்று, அவர்களின் பொருளாதார வளர்ச்சி கண்காணிக்கப்படும்.

ரூபாய் 26 கோடி செலவில், ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் 4,000 சிறுவிசைப் பம்புகள் அமைத்து குடிநீர் வசதி செய்து` கொடுக்கப்படும்.

இவ்வருடம் நீலகிரி, வேலூர் மற்றும் திண்டுக்கல்லில் உள்ள கொடைக்கானல் பகுதி மலைவாழ் மக்களுக்கு ரூ.29.39 கோடியில் பிரதமரின் கிராமப்புறத் திட்டத்தின்கீழ் மின் வசதி செய்து தரப்படும்.

தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் இலவம் பஞ்சு விளைச்சல் ஆகின்ற தேனி மாவட்டத்தில் 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் பயன்பெறும் வகையில் தரிசு நிலங்களை மேம்படுத்தி இலவம் பஞ்சு விளைச்சலைப் பெருக்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும்.



2002 ஏப்ரல் 11] [திரு. சொ. கருப்பசாமி]

அதிக வருமானம் தரக்கூடிய வகையில் இலவம் பஞ்சினைப் பயன்படுத்தி பொருள்கள் உற்பத்தி செய்கின்ற தொழில்கள் ஆண்டிப்பட்டியில் தொடங்குவதற்கான திட்டம் செயலாக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துகளைக் கூறியிருக்கின்றார்கள். உங்கள் கருத்துகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தாயுள்ளத்தோடு கவனத்தில் கொள்ளும். எனது இந்தப் பதிலுரை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும் என்று நம்புகிறேன். எனவே உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு வேண்டி அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்—அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.ஏ.எம். உசேன், இருக்கையில் இல்லை.



திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.



**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 4-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.354,38,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ,11,35,85,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2002) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2002) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

---

@ 4-4-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 11

***திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் மறுக்கிறோம்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு சம்பந்தமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் அகில இந்திய அளவில் குடியரசுத் தலைவராக வர இயலும் என்றாலும் இந்தக் காலத்தில் பஞ்சாயத்துக்களில் இன்னும் அத்தகைய சூழ்நிலை இல்லாதது அகில இந்திய அளவிலும் தமிழகத்திலும் ஜனநாயக சக்திகளுக்கு இது மிகப் பெரிய அவமானத்திற்குரியது என்பதை நாங்கள் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2002 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2002). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 1-30

பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 4-4-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2002) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்திற்குக் கூடுதல் நிதி வசதியை ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம் என்று Statement of Objects and Reasons-லே சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஒன்றை இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டம் இந்த நாட்டிலே இருக்கிற நடுத்தர மக்களை, ஏழையெளிய மக்களை பாதிக்கக்கூடிய ஒரு சட்டம், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருப்பது என்னவென்றால், ஏற்கெனவே I.M.F., W.T.O., Conditionalities-ஐ மத்திய அரசு அவர்கள் மட்டத்திலே அமல்படுத்தி வந்தார்கள். ஆனால் இப்போது 2002 ஆம் ஆண்டு வந்த நேரத்தில் அவர்கள் இதை மாநில அரசுகளும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் Planning Commission வழியாக, திட்ட நிதி தரப்பட வேண்டுமேயானால், இந்த Conditionalities-ஐ ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த மாநில அரசு அதை ஏற்றுக்கொண்டு, ஒரு Memorandum of Understanding-லே கையெழுத்து போடுவதற்கு ஒத்துக்கொண்டு கையெழுத்து போடப்பட்டிருப்பதாக ஒரு தகவல் அல்லது அப்படி அதை ஏற்றுக் கொண்டிருப்பதாக ஒரு தகவல். இதன் காரணமாக வேறு முறையிலே நிதி ஆதாரத்தைப் பெறுவதற்குப் பதிலாக—நாங்கள்

@ 10-4-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 11] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

என்ன சொல்கிறோம் என்றால்—இங்கு ஏற்கெனவே நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே மத்திய அரசினுடைய நிலையைப் பொறுத்த அளவிலே கடுமையாக ஆட்சேபித்து பல கருத்துகளைச் சொன்னார். அப்படி அவர்கள் எல்லாம் சொன்னதற்குப் பிறகு, எங்கே வருகிறது என்று சொன்னால் இந்த நாட்டிலே இருக்கிற ஏழையெளிய மக்களைப் பாதிக்கக்கூடிய முறையிலே உள்ள சட்டங்களை அல்லது வரிகளைப் போடுவது என்ற இடத்திற்கு வந்திருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் இன்றைக்கு கள்ளப் பணத்தை வெளியே கொண்டு வருவதற்கு அல்லது ஏகபோக முதலாளிகள் பல தில்லுமுல்லுகள் செய்து பெற்றுள்ள பணத்தை வெளியே எடுத்து இந்த நாட்டிலே இருக்கிற மக்களுடைய தேவைக்கு என பயன்படுத்தக்கூடிய முறையிலே திட்டங்களை இன்றைக்கு உருவாக்க முடியும். மேற்கு வங்காளத்தைப் பொறுத்த அளவிலே, அந்த அரசு நிதியமைச்சருடைய Budget Speech-லே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் ஒரு மாற்றுப் பாதையை உருவாக்குகிறோம். எங்கள் பாதை என்பது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக சொல்ல வேண்டியதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** I am not going into it. நான் என்ன சொல்கிறேன் என்றால், அப்படி ஒரு மாற்றுப் பாதையை உருவாக்குவதற்கு நம்முடைய மாநிலத்தினுடைய நிதியமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இன்றைக்கு மற்ற மாநிலங்களினுடைய உதவியோடு அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வந்து, ஏழையெளிய மக்களை, நடுத்தர மக்களைப் பாதிக்கக்கூடிய முறையிலே உள்ள சட்டங்களை உருவாக்குவது சரியல்ல.

ஆகவே இன்று மோட்டார் சைக்கிள் உபயோகப்படுத்தக்கூடியவர்கள் அல்லது சைக்கிளை உபயோகப்படுத்தக்கூடியவர்கள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கிற மாநிலம் இது. பெரிய வசதி படைத்தவர்கள் அல்ல. பெரிய வசதி படைத்தவர்கள் என்றால் அவர்கள் தங்கியிருக்கிற கொட்டாரத்திலுள்ள வண்டிகளிலேதான் பறப்பார்கள். ஆகையால், இன்றைக்கு நடுத்தர மக்களை பாதிக்கக்கூடிய இந்தச் சட்டத்தைக் கைவிட வேண்டுமென்று நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். இந்த வரிவிதிப்பு என்பது இந்த நாட்டிலே இருக்கிற ஏழையெளிய மக்களைப் பாதிக்காத முறையில் இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 11

பிற்பகல் 1-35

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவினாலே சாதாரண மக்கள் என்று சொல்லக்கூடிய அடித்தட்டு மக்கள், உழைக்கக்கூடிய மக்கள், நடுத்தர மக்கள் என்று சொல்லக்கூடிய ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகிற அந்த இரு சக்கர வண்டி அதிலும் 50 சி.சி. என்று சொல்லுகிறார்களே அவர்கள் பயன்படுத்துகிற அந்த வண்டிக்கு வரிவிதிப்பு என்பது மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கும். மிகப் பெரிய பணக்காரர்கள் எல்லாம், சொகுசு வண்டியிலே போய்க் கொண்டு இருக்கும் இந்தக் காலக்கட்டத்திலே ஏழை மக்கள் தங்களுடைய குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதற்கு அவசர வேலைக்குச் செல்கிற நேரத்திலே பயன்படுத்துகிற இந்த சாதாரண வண்டிக்கு life time tax போடுவது பொருத்தமாக இருக்காது. இது ஏழை மக்களை பாதிக்கும் என்ற காரணத்தினாலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த வரிவிதிப்பை—life time tax— மறுபரிசீலனை செய்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது பொருத்தமுடையதாக இருக்காது என்ற கருத்தைச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இயக்கூர்திகளுக்கான வரி விதிப்புகளுக்கான சட்டத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சில கருத்துகளைச் சொல்ல வேண்டாம். ஒன்றைச் சொல்லுங்கள் போதும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, ஒன்றே ஒன்று. இந்தச் சட்டம் அமலாக்கப்படுமானால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது ஒன்று. 50 சி.சி.க்குக் குறைவான வண்டிக்குக்கூட ஆயுட்கால வரி விதிப்பு விதிக்கப்படும் என்று சொல்லியிருப்பது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இன்னொன்று. இந்தச் சட்டம் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு, ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. அப்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறவில்லை, ஆகையால் இப்போது அங்கீகாரம் கேட்கிறோம் என்று சொல்லப்பட்டு இருப்பது இந்தச் சட்டத்தை முன்கூட்டியே நிறைவேற்றிவிட்டு இப்போது கேட்கப்படுவது என்பது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை



2002 ஏப்ரல் 11] [திரு. வை. சிவபுண்ணியம்]

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்ப்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதெல்லாம் ஏழை எளிய மக்கள்கூட டி.வி.எஸ். 50 போன்ற மொபட் வண்டிகளைப் பயன்படுத்தக்கூடிய ஒரு காலம் இது. ஏற்கெனவே, அரசு இதுபோன்ற வாகனங்களுக்கு வரி இல்லை என்று அறிவித்து எல்லோருமே அந்த வண்டியை வாங்கி பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது நீங்கள் ஆயுள் வரியை இதற்குப் போடுவதற்காக திட்டத்தைத் தீட்டி இதற்காக ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது என்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல. அதிலும் திட்டமிட்டு—பெரிய அவசரம் ஒன்று வந்து விடுவது இல்லை.— இப்படிப்பட்ட ஒரு ஆர்டினன்ஸ்-ஐப் போட்டுவிட்டு—ஏன் நாம் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டோம். சட்டமன்றத்தைக் கூட்டியிருக்கலாம். நடுவிலே வேண்டுமானால் சட்டமன்றத்தைக் கூட்டி இது தேவைதானா என்பதை விவாதத்திற்கு உட்படுத்தி விட்டு, பிறகு இந்தச் சட்டத்தை அரசு பாஸ் செய்து இருக்கலாம். ஆனால் ஆர்டினன்ஸ்-ஐப் போட்டுவிட்டு—அதற்கு ஒப்புதல் பெறுவதற்காக இப்போது சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதிலே ஓராண்டு வயது உள்ள வண்டியாக இருந்தால் 945 ரூபாய் ஆண்டுக்கு என்றும், இது ஆயுள் வரி என்றும், பிறகு ஒரு ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டு வரை இருக்கக்கூடிய வண்டிக்கு 850 ரூபாய் என்றும் [illegible] ஆண்டு, 10 ஆண்டு பழைய வண்டிக்குக்கூட 225 ரூபாய் கட்டவேண்டும் என்றெல்லாம் இப்போது புதிதாக இங்கே ஆயுள் வரியை நாம் வசூலிக்க இருக்கக்கூடிய ஒரு நிலை என்பது ஒரு குழப்பத்தை ஏற்படுத்திவிடும். இதை அரசு மீண்டும் பரிசீலனை செய்து, இதுபோன்ற 50 சி.சி.க்குக் கீழே இருக்கக்கூடிய வண்டிகளுக்கு இதை வேண்டாமென்றே பெருந்தன்மையோடு விட்டுவிடுவதுதான் நல்லது. எனவே, இந்தச் சட்டத்தை நிச்சயமாக அமல்படுத்தாமல் அல்லது செலக்ட் கமிட்டிக்காவது அனுப்பி ஆய்வு செய்யவேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை மன்றத்திலே ஆய்வு செய்வதற்கு முன்னதாக விவாதித்து பேரவை ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு இது வந்திருக்குமேயானால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்கின்ற என்னுடைய கருத்தை உங்கள் முன்னே சமர்ப்பித்து இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கின்றேன்.

[2002 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்**: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. 50 சி.சி. வரையிலான மொபட் வாகனங்களுக்கு ஆயுட்கால வரி விதிக்கின்ற இந்தச் சட்டம் இப்போது மட்டும்தான் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதில்லை. இது ஏற்கெனவே 1-4-1989 முதல் 50 சி.சி.க்கு உட்பட்ட மொபட் வாகனங்களுக்கு 500 ரூபாய் ஆயுட்கால வரியாக விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இடையிலே 1-10-1991 முதல் அந்த வரி நீக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் 5 ஆண்டு கால ஆட்சியிலே, தமிழ்நாட்டை எந்த அளவிற்கு நிதி நெருக்கடியிலே, தமிழக அரசை சிக்கவைத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதை இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மிக நன்றாக அறிவார்கள். இப்படிப்பட்ட நிதி நெருக்கடியிலே அரசு ஏதாவது கூடுதல் வருவாய் ஈட்ட வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

பிற்பகல் 1-40

அந்தவகையிலே சாதாரண மக்களை பாதிக்காதவண்ணம், மிகக் குறைந்த அளவிலேதான் இந்த வரியை இப்போது அரசு விதித்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1989-ல் 500 ரூபாயாக ஆயுட்கால வரி இருந்தது. அன்றைக்கு வண்டியினுடைய விலை 5,000 ரூபாய். 5,000 ரூபாய் விலை இருக்கும்போது, 500 ரூபாய் ஆயுட்கால வரி இருந்தது. இப்போது 15,000 ரூபாயாக அந்த இருசக்கர வண்டிகளின் விலையிருக்கிறது. 15,000 ரூபாய் விலை உள்ள வண்டிக்கு இப்போது 1,000 ரூபாய்தான் நாம் வரி விதித்திருக்கிறோம். அந்த வகையிலே ஒப்பிட்டுப் பார்த்தால், இன்றைக்கு 1,500 ரூபாய் விதித்திருக்கவேண்டும். ஆனால், நடுத்தர மக்கள் பயன்படுத்தும் வாகனம் என்பதைக் கருதி, அவர்களுக்குப் பெரும் சுமை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணர்ந்து, இந்த அளவிற்குக் கூடுதலாகப் போடக்கூடாது, குறைத்துப் போடவேண்டும், அவர்கள் பாதிப்பு அடையக்கூடாது என்று அம்மா அவர்களின் ஆணையின்படி, அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, குறைந்த அளவிலேதான் இந்த வரியை விதித்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 11] [திரு. இரா. விசுவநாதன்]

அதற்கு அடுத்தபடியாக மற்றொன்றையும் உங்களுக்கு இங்கே பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வரி ஏதோ தமிழகத்திலே மட்டும்தான் இருக்கிறது என்பதைப்போன்று இங்கே பலர் பேசினார்கள். ஆனால், அண்டை மாநிலங்களான ஆந்திராவிலே இந்த 50 சி.சி. உள்ள வாகனங்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. கர்நாடகாவிலே இருக்கிறது. கேரளாவிலே இருக்கிறது. கேரளாவிலே, ஆந்திரப்பிரதேசத்திலே 60 சி.சி.-க்குக்கீழ் உள்ள வாகனங்களுக்கு 7 சதவிகிதம் வரி அல்லது ரூ.1,050 என்ற அளவிலே வரி விதித்திருக்கிறார்கள். கர்நாடகத்திலே 75 சி.சி.-க்குக்கீழ் உள்ள வண்டிகளுக்கு 1,100 ரூபாய் வரி விதித்திருக்கிறார்கள். கேரளாவிலே 95 சி.சி.-க்குக்கீழ் உள்ள வண்டிகளுக்கு ஆயுட்கால வரியாக ரூ.1,500 விதித்திருக்கிறார்கள். இந்த அளவிலே, நம்முடைய தமிழகத்தை அப்படி ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்திலே குறைந்த அளவிலேதான் வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்கு அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொல்லும்போது—ஏதோ இந்த வண்டிகளுக்கும்—பழைய வண்டிகளுக்கும் ரூபாயை ஆண்டுக்காண்டு குறைத்து, ஒரு ஆண்டாக இருந்தால் ரூ. 975 என்று, ஆண்டுவாக்கிலே போட்டிருக்கின்ற வரியைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைத் தெளிவாக பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வரி நமது மாநிலத்திலேயிருக்கின்ற, பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற பழைய வாகனங்களுக்கு இல்லை. வெளி மாநிலங்களிலேயிருந்து வரக்கூடிய பழைய வாகனங்களுக்குத்தான் அந்த வரி இருக்கிறது என்பதை அன்போடு நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, இந்த அளவிலே மிகவும், சாதாரண, நடுத்தர மக்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்கு மிக அதிக அளவிலே அவர்கள் பாதிக்காத அளவிற்கு இன்றைக்கு அம்மா அவர்கள் விதித்திருக்கின்ற இந்த வரியை ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[திரு. இரா. விசுவநாதன்] [2002 ஏப்ரல் 11

மற்றொன்றையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இது இனிமேல் புதியதாக வாங்கக்கூடியவர்களுக்குத்தான் வரியே தவிர, ஏற்கெனவே ஓடிக் கொண்டிருக்கின்ற வாகனங்களுக்கு—அவர்களுக்கு— எந்தவித பாதிப்பும், நிதிச் சுமையும், வரிச் சுமையும் ஏற்படாது என்பதையும் தெரிவித்து, இந்த அளவிலே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக உங்களையெல்லாம் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2002 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-45

**(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2002). மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 11

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2002)(ஐ) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் காள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க பண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் தியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு ப்படுகிறது.

*2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்".
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(உ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2002). மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 11

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Town and Country Planning Act திருத்தச் சட்டத்தை வரவேற்கிற நான் சில கருத்துகளையும் சொல்ல முற்படுகிறேன். ஏற்கெனவே சென்னையிலே கட்டப்பட்டிருக்கக்கூடிய அடுக்குமாடி வீடுகளை அல்லது அனுமதியில்லாமல் கட்டப்பட்டிருக்கக்கூடிய வீடுகளையெல்லாம் வரைமுறைப்படுத்துவதற்காக மூன்று முறை Regularisation Scheme கொண்டுவரப்பட்டது. ஆனால், அதிலே 3 இலட்சம் மனுக்கள் வரும்; 3 இலட்சம் வீடு கட்டியவர்கள் இந்தத் திட்டத்தின் வாயிலாகப் பயன் அடைவார்கள் என்றெல்லாம் அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால், 208 விண்ணப்பங்கள் மட்டுமே இதுவரை வந்ததாக இந்த நோக்கக் காரண உரையில்கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாங்கள் தொடர்ந்து இந்த அவையிலே வற்புறுத்தி வந்து கொண்டிருக்கிறோம். கடுமையான சில விதிகளை வைத்துக் கொண்டு நீங்கள் எத்தனை முறை இந்த Regularisation Scheme-ஐ announce செய்தாலும்கூட எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு மனுக்கள் வரவே வராது. ஆந்திர முறையை நீங்கள் கடைப்பிடித்து, அங்கே ஏற்கெனவே அனுமதி இல்லாமல் கட்டப்பட்டிருக்கக்கூடிய வீடுகளுக்கு Square feet-க்கு இவ்வளவு என்று குறைந்த அளவு நீங்கள் மதிப்பீடு செய்து, அதற்கான கட்டணத்தை வசூல் செய்தால்தான் இந்தத் திட்டமே நிச்சயமாக பயன்பெற முடியும்; நிறைவேற்ற முடியும் என்று நாங்கள் பலமுறை இந்த அவையிலே சொன்னாலும்கூட, ஏனோ அலுவலர் பெருமக்கள் இதைக் கொஞ்சம்கூட காதிலே வாங்கமாட்டோம் என்கிறார்கள். அவர்கள் இதை இப்படிச் செய்தால் வரும், அப்படிச் செய்தால் வரும் என்று, மூன்று இலட்சம் மனுக்கள் வரும் என்று பலமுறை அரசாங்கத்திற்குக் கருத்துரை சொன்னார்கள். ஆனால் இதுவரை 208 மனுக்கள் மட்டுமேதான் வந்திருக்கின்றன. விதிமுறைகளை நீங்கள் தளர்த்துவதற்கு முன்வரவேண்டும்.

@ 10-4-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 11] [திரு. சி. ஞானசேகரன்]

அதேபோல கட்டணம் நிறைய வசூலிக்கிறீர்கள். அவர்கள் கட்டியதிலே பாதி ரூபாயைக் கட்டு என்று சொன்னால், யாரும் கட்ட முடியாது. நீங்கள் ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகளை இடிப்பதில்லை என்கிற உறுதியைக் கொடுத்துவிட்ட பின்னால் அவர்கள் எப்படி வருவார்கள் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Real Estate business பணப்புழக்கம் ஏற்படுவதற்கு அடித்தளமாக இருப்பது ஒன்று. Real Estate business-ஐ மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே உள்ள G.O. 150-ஐ மாற்றியமைத்தால்தான் அந்தத் தொழிலே வளரும் என்று நாங்கள் இந்த அவையிலே சொல்லியிருக்கிறோம். அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது பணப்புழக்கம் இன்னும் வராமல் Real Estate business இன்னும் படுத்துக் கொண்டேதான் இருக்கிறது. அதை எழுப்பிவிட வேண்டுமென்று சொன்னால், விதிமுறைகளை நீங்கள் நிச்சயமாகத் தளர்த்த வேண்டும். G.O. 150-ஐ நீங்கள் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நீங்கள் 6 மாதம் வரைதான் time கொடுத்திருக்கிறீர்கள். நிறைய பணம் ஆகிறது. முன்பணம் கட்டுவதற்கேகூட பணம் கிடையாது. ஆகவே, 6-வது மாதம் 30 ஆம் தேதி வரை கொடுத்திருக்கக்கூடிய இந்த கால அவகாசத்தைக்கூட இன்றைய தேதியிலிருந்து 6 மாத கால அவகாசம் கொடுத்தால்தான் ஓரளவு மனுக்கள் வரும், எதிர்பார்த்த இலக்கை நீங்கள் அடைய முடியும் என்பதைச் சொல்லி, விதிகளைத் தளர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் என்ன திட்டத்தை வைத்திருக்கிறார்; ஆந்திரா மாடலைக் கடைப்பிடித்தாவது குறைந்த கட்டணத்தை நீங்கள் வசூல் செய்து, ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகளை regularise செய்வதற்கு நீங்கள் ஆவன செய்வீர்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்திலே அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடங்கள் இன்றைய சூழ்நிலையிலே நிச்சயமாக அகற்றப்பட முடியாது. கட்டிய நேரத்திலே நம்முடைய அரசு அலுவலர்கள் அவற்றைக் கட்டாமல் தடுத்து நிறுத்தி இருக்க வேண்டும். அதையும் விட்டுவிட்டு, இப்பொழுது அவர்களுக்கு அவகாசம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை என்று சொல்லி அவர்கள்மீது விதிக்கக்கூடிய கட்டணம் என்பது கூடுதலாக இருக்கின்ற

காரணத்தினாலேதான் கடந்த காலங்களிலே அவகாசம் கொடுத்தும்கூட, அவர்கள் யாரும் முன்வரவில்லை. ஏறத்தாழ இலட்சக்கணக்கிலே எதிர்பார்த்து, நூற்றுக்கணக்கிலே இங்கே வந்திருக்கிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் மனதிலே வைத்துப்பார்க்கின்ற நேரத்திலே இந்தக் கட்டண விகிதங்கள்தான் அவர்களைப் பாதிக்கிறது. இப்படி அவர்கள் கட்ட முடியாத அளவிற்குக் கூடுதலான கட்டணத்தை விதிக்கின்ற காரணத்தினாலே முன்வருவதில்லை. அப்படி முன்வராத காரணத்தினாலே நாம் நிறைவு செய்யவும் வாய்ப்பில்லாமலே போய்விடுகிறது. ஆகவே அவர்கள் முன்வருவதற்கும், அரசுக்கு வருமானத்தைப் பெருக்குவதற்கும் இதற்கு ஒரு முடிவை ஏற்படுத்தக்கூடிய வகையிலே நீங்கள் குறைந்த கட்டணத்தை விதிப்பீர்கள் என்று சொன்னால், விரைவிலே முடிவுக்கு வரும். எல்லோரும் மனு செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்கின்ற காரணத்தினாலே, இந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம் என்ன?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணர்வுகளைப் புரிந்துகொள்கிறேன். ஒரே வரியில் முடிக்கிறேன். அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்கான அனுமதி அளிப்பதற்கான முயற்சிகளை எடுத்து, அவர்கள் உரிமை பெறுவதற்குரிய வாய்ப்பு பெற முடியாத நிலையில் கட்டண விகிதம் அதிகரிப்பதைக் குறைப்பதற்கான முயற்சியாகவும், கால அவகாசத்தை நீட்டிக்கச் செய்வதற்கான முயற்சியாகவும் இந்தச் சட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது கால அவகாசத்தை நீட்டித்து கட்டணத்தைக் குறைப்பதற்கான அனுமதியையும் அளித்து சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே இதுபோன்ற ஒரு





முன்னோடி என்பது முன்மொழியப்பட்டது. நாம் எதிர்பார்த்த எண்ணிக்கையிலே விண்ணப்பங்கள் வராமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, ஆந்திர மாநிலத்திலேயிருக்கக்கூடிய அந்த அடிப்படையில், சென்னை மாநகரத்திலும் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கக்கூடிய வீடுகளுக்கு சதுர அடிக்குக் குறைந்த அளவிற்கான கட்டணம் என்பது விதிக்கப்பட்டால் நிச்சயமாக நாம் எதிர்பார்த்த எண்ணிக்கையை எட்ட முடியும். மாநில அரசுக்குக் கூடுதல் வருவாய் என்பது கிடைக்கும். அதேபோன்ற கால அவகாசத்தை இன்றைய தேதியிலிருந்து இன்னும் 6 மாதங்களுக்கு நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) நீங்கள் சொல்ல வேண்டியதை அவர்கள் சொல்லிவிட்டார்கள். திரு. எச்.எம். ராஜு, சொல்லிவிடுங்கள்.

* **திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை மீண்டும் மறுபரிசீலனை செய்யலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாட்டுக் கட்டுப்பாட்டு விதிகளை மீறியுள்ளது என்ற காரணத்தின்பேரில் அதிக எண்ணிக்கையில் கட்டடங்களை இடிப்பதானது, அவற்றின் உரிமையாளர்களுக்கும், கையுடைமையாளர் களுக்கும் மிகுந்த இடர்ப்பாட்டை விளைவிக்கக்கூடும் என்பதால், அவ்வாறு செய்வது விரும்பத்தக்கதுமன்று. அது நடைமுறையில் சாத்தியமும் இல்லை. அவ்வாறு செய்வதானது சில நேர்வுகளில் சிறு மாற்றங்களைச் செய்துள்ளவர்களையும்கூட, அதிக அளவிற்குப் பாதித்துள்ளது. எனவே, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 35/1972) திருத்தியமைப்பதென அரசு முடிவு செய்தது. அதற்கிணங்க, மேற்சொன்ன சட்டத்தில் 113-A எனும் புதிய பிரிவொன்று சேர்க்கப்பட்டு, 28-2-1999 வரையில் அனுமதியின்றி/விதிகளை மீறிக் கட்டப்பட்ட கட்டடங்களை 1-3-1999-லிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் முறைப்படுத்துவதற்கான முறைப்படுத்துகைக் கட்டண விதிகள்

செய்யப்பட்டன. இந்தத் திட்டமும் விண்ணப்பங்களைச் செய்துகொள்வதற்கான கடைசித் தேதியும் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தன. விண்ணப்பம் செய்துகொள்வதற்கான கடைசித் தேதி 30-11-2001 என அறிவிக்கப்பட்டு, இத் திட்டம் 31-7-2001 வரை கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் பயன்பெற ஏதுவாக 2001 ஆம் ஆண்டில் முதலில் நீட்டிக்கப்பட்டது.

மேற்சொன்ன "முறைப்படுத்துகை திட்டத்தின்" கீழ், குறிக்கப்பட்டிருந்த கால அளவுகளின்போது, முறைப்படுத்துகைக்கான விண்ணப்பங்கள் எதிர்பார்த்த அளவிற்குப் பெறப்படவில்லை. மூன்று இலட்சம் விண்ணப்பங்கள் வருமென எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக, திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் 208 விண்ணப்பங்கள் மட்டுமே வரப்பெற்றன. ஏனெனில், விண்ணப்பங்களைச் செய்துகொள்வதற்காக 30-11-2001 வரையில் கொடுக்கப்பட்ட கால அளவானது வரைபடங்களைத் தயாரித்தளிப்பதற்கும், சுயமதிப்பீட்டின் அடிப்படையில் முறைப்படுத்துகைக்கான விண்ணப்பத்துடன்கூட முன்பணம் செலுத்துவதற்காக பணத்திற்கு ஏற்பாடு செய்வதற்கும் போதுமானதாக இல்லாதிருந்தது என்பதேயாகும் என அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தை மறு ஆய்வு செய்து, விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசித் தேதி 31-12-2001 என அறிவித்து, 31-10-2001 தேதி வரையில் கட்டப்பட்ட அனைத்து கட்டடங்களையும் உள்ளடக்கும் வகையில், மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்தி அமைப்பதன் மூலம் முறைப்படுத்துகைத் திட்டத்தை விரிவுபடுத்துவதென முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க, 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/2001) 2001ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2001ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





பிற்பகல் 1-55

இருப்பினும் இதுவரையில் வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை எதிர்பார்த்தபடி இல்லாததால், விண்ணப்பங்கள் வரப்பெறுவதற்கான கடைசித் தேதியை 30-6-2002 வரையில் மேலும் நீட்டிப்பது என்றும், 31-3-2002 வரையில் கட்டப்பட்ட கட்டடங்களை உள்ளடக்குகின்ற வகையில் இத் திட்டத்தை நீட்டிப்பதென்றும், மற்றும் இச்சட்டத்தின் 122 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவின் (சிசி) எனும் கூறின்படி முன்னுற இயங்குமாறு விதிகளைச் செய்வதற்கு வகை செய்கின்ற வகைமுறையைச் செய்வதென்றும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப திருத்தப்பட்ட காலக் கெடுவுடன் கூடிய சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க ஏதுவாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இத்திருத்தத்தின் அடிப்படையில் தற்போது பின்பற்றி வரும் அனைத்து கட்டண விகிதங்களும் 50 விழுக்காடு விதிகளுக்கு திருத்தத்தின் அடிப்படையில் குறைக்கப்படும். எனவே, பொதுமக்கள் இந்த இறுதி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு விதி மீறிய தங்கள் கட்டடங்களை 30-6-2002-க்குள் முறைப்படுத்திக்கொள்ளுமாறு இந்த அவை வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த இறுதி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறினால், இறுதி காலக் கெடுவிற்குப் பிறகு 7 நாட்களுக்குள் அவர்களது கட்டடங்களின் மின்சாரம் மற்றும் குடிநீர் விநியோகத் தொடர்புகள் துண்டிக்கப்படும். இதுதவிர, சட்டபூர்வமான நடவடிக்கை மூலம் முறைப்படுத்தப்படாத கட்டடங்கள் இடித்து அகற்றப்படும் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Hon'ble Speaker Sir, we want to ask whether rules will be relaxed or not. நீங்கள் 50 விழுக்காடு கட்டணத்தைக் குறைத்தாலும்கூட உங்களுக்கு மனுக்கள் வரவே வராது. Therefore, I request the Hon'ble Minister to consider atleast relaxation of certain rules as those rules are actually impediment to invite even applications.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருக்குப் புரியாது என்பதற்காக ஆங்கிலத்தில் கேட்கிறீர்களா? (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் சொல்ல வேண்டிய விளக்கத்தைத் தந்துவிட்டார்.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

88. மானியக் கோர்க்கை எண் 4- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

89. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2002-2003. (தமிழ்)

90. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற சிறுவெளியீடு 2002-2003. (தமிழ்)

91. மானியக் கோரிக்கை எண் 4- 2002-2003-ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் விரிவான மானியக் கோரிக்கை.

92. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2002-2003. (ஆங்கிலம்)

93. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற சிறுவெளியீடு, 2002-2003 (ஆங்கிலம்)

94. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை)





# இணைப்பு

[54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## கோரிக்கை எண். 4

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்தில் ஆதிதிராவிடர் மக்கள் தொகையில் 53.24 விழுக்காடும், பழங்குடியின மக்கள் தொகையில் 72.11 விழுக்காடும் கல்வியறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு தொடர்ந்து முனைப்புடன் கல்வி அளிக்கும் திட்டம் அவசியமாக உள்ளது.

இத்துறைக்கென ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 70 விழுக்காடு தொடக்கக் கல்வி மற்றும் உயர் கல்விக்கென செலவிடப்படுகிறது. தற்பொழுது இத்துறையின் மூலம் 1017 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும், பழங்குடியின மாணவர்களுக்காக 245 உண்டி உறைவிடப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும், 1076 ஆதிதிராவிட நல மாணவ மாணவியர் விடுதிகளும் மற்றும் 26 பழங்குடியினர் மாணவ மாணவியர் விடுதிகளும் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

பள்ளிகள் மற்றும் விடுதிகள் கட்டுதல், பராமரித்தல் ஆகிய திட்டங்களுடன் கீழ்க்கண்ட திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன : மைய, மாநில அரசு கல்வி உதவித் தொகைகள், இலவச சீருடைகள், இலவச பாடநூல்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு வழங்கப்படுகின்றன. பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான கல்வி உதவித் தொகைகள் சிறப்புக் கடனுதவித் தொகைகள், பல்வேறுபட்ட ஊக்கத் தொகைகள், பரிசுத் தொகைகள் போன்றவையும் வழங்கப்படுகின்றன. மேலும் புத்தக வங்கித் திட்டம், தொழிற்கல்வி மற்றும் பல்வேறுபட்ட நுழைவுத் தேர்வுகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் மற்றும் சிறந்த மாணவர்கள் வெளிநாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் சேர்ந்து உயர்கல்வி பயிலும் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

[2002 ஏப்ரல் 11

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கு கணினிக் கல்வி அளிப்பதும், கல்வித் திட்டத்தின் ஓர் அம்சமாக கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்படி 87 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு, இத்துறை மூலமாக நடத்தப்பட்டு வருகின்றது.

இத்துறையின் கீழ் இயங்கும் 58 உயர்நிலைப் பள்ளிகளிலும், 65 மேல்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

15. மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.78 இலட்சம் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டு ரூ.26 இலட்சத்துக்கான உபகரணங்களுடன் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

51 உயர்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.2.24 கோடி செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு ரூ.21.50 இலட்சம் செலவில் ஆய்வுக் கூட உபகரணங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

12 ஆம் வகுப்பு வரை அனைத்து ஆதிதிராவிட மாணவ மாணவியருக்கு ஆண்டுதோறும் 2 ஜோடி சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.5.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ.40 இலட்சம் செலவில் 4 பள்ளிகளில் புதிய கட்டடங்கள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்ட ரூ.19.47 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு 15 ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 2 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 2 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன. மேலும் அரசுப் பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளி ஒன்றும் நிறுவப்பட்டது. பள்ளிகளுக்கு வராமல் இடையில் நின்றுவிடும் குழந்தைகளைத் தடுக்கும் நோக்கத்தோடு இப்பள்ளிகள் நிலை உயர்த்தப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின அனைத்து மாணவர்களுக்கும் பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்க 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.10.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 11]

சுயநிதிக் கல்லூரிகளில் அரசுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்களின் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,920-க்குள் உள்ளவர்களுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கான கல்விக் கட்டண அளவிற்கு கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.

விடுதிகளில் தங்கி பட்டம், பட்டமேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பட்டப்படிப்புகள் பயிலும் மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வி உதவித் தொகைக்கு மேற்பட்ட கல்விச் செலவினங்களுக்கு கல்விக் கடனுதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.6,500-மும் தொழிற்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு படிப்பவர்களுக்கு ரூ.7,000-மும் கடனுதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

பட்டப்படிப்பு பயிலும் அனைத்து ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ மாணவிகளுக்கு இலவச கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2001-2002 முதல் இத்திட்டம் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் மாணவியர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வியில் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்று முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெறும் மாணவ மாணவியர்களுக்கு பரிசுத்தொகையாக முறையே ரூ.2,000, ரூ.4,000, மற்றும் ரூ.5,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.18.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வியில் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு பதிவுக் கட்டணம் மற்றும் சேர்க்கைக் கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியுடன் விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலையில், வெள்ளிமலை என்ற இடத்தில் பழங்குடியினருக்காக ரூ.1 கோடி நிதியில் மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி ஒன்று 1998-1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இப்பள்ளிக்கு தற்போது "தாட்கோ" நிறுவனம் மூலம் உரிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

புத்தக வங்கித் திட்டத்தின் கீழ், மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, பல்தொழில் நுட்பம், சட்டம், முதுநிலை வணிக நிர்வாகம், பட்டயக் கணக்கு, உயிரி அறிவியல் படிப்பு மற்றும்

[2002 ஏப்ரல் 11

தொழிற்கல்வியில் முதுநிலைப் பட்டப்படிப்புகள் மற்றும் இதர தொழிற் படிப்புகள் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ரூ.2,400 முதல் ரூ.7,500 வரை மதிப்புள்ள புத்தகங்கள் வாங்கி வழங்கப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சட்டப் படிப்பு பட்டதாரிகள் சுயமாக சட்டத் தொழில் செய்ய 180 சட்டப் பட்டதாரிகளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.9.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2001-2002 ஆம் நிதியாண்டில் பதினொன்று மற்றும் பன்னிரெண்டாவது வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்களுக்கு இலவசமாக மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் நடப்பு ஆண்டிலும் செயல்படுத்தப்படும். இதற்காக ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணம் ரூ.225-ஐ ரூ.300 ஆக உயர்த்தி 5-12-2001 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**1. கல்வி**

அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்தும்கூட, இன்னும் இதர வகுப்பினருக்கும் மற்றும் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு இடையில் கல்வியறிவில் 16 விழுக்காடு இடைவெளி உள்ளது. எனவே, இந்த இடைவெளியைக் குறைப்பதற்காக பள்ளியில் உள்ளமைப்பு வசதிகளான பள்ளிக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக் கூட சாதனங்கள், விளையாட்டுப் பொருட்கள் முதலிய வசதிகளை ஏற்படுத்துவதற்கு கூடுதல் முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஆதிதிராவிட பெண் குழந்தைகளின் 100 சதவிகித ஆரம்பக் கல்வியை உறுதிப்படுத்தவும் மற்றும் அவர்கள் கல்வி பயில்வதிலிருந்து இடையில் நின்றுவிடுவதை அறவே தவிர்க்கும் பொருட்டும், மூன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஒரு மாணவிக்கு மாதம் ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை ஆண்டிற்கு 60,000 பெண் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.3 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல இக்குழந்தைகள் தொடர்ந்து கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு



2002 ஏப்ரல் 11]

இவர்கள் ஆறாம் வகுப்பில் பயிலும்போது மாதம் ஒன்றுக்கு ரூ.100 என பத்து மாதங்களுக்கு ரூ.1,000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை 30,000 மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. பள்ளிகளில் உள்ளமைப்பு வசதிகள் இதுவரையிலும் போதுமானதாக இல்லை. அதில் கீழ்க்காணும் குறைகள் கண்டறியப்பட்டுள்ளன:—

29 பள்ளிகளுக்கு அரசு கட்டடங்கள் இல்லை. 21 பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக்கூட சாதனங்கள் இல்லை. 1,139 பள்ளிகளுக்கு அறைகலன்கள் இல்லை. 98 பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் இல்லை மற்றும் 56 பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. மேற்காண் உள்ளமைப்பு வசதிகளை சர்வசிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*அ. ஆரம்பக் கல்வி/பள்ளிக் கல்வி*

ஏற்கெனவே கூறியதுபோல் பள்ளிகளிலுள்ள, உள்ளமைப்பு வசதிகள் போதுமானதாய் இல்லை. சர்வசிக்ஷா அபியான்/மாவட்ட தொடக்கக் கல்வித் திட்ட நிதியிலிருந்து பள்ளிகளுக்குத் தேவையான எல்லா உள்ளமைப்புகளையும் இரண்டு வருட காலத்திற்குள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*ஆ. போதிக்கும் ஆற்றலை மேம்படுத்த தொடர்பயிற்சி நடத்துதல்*

தற்போது ஆரம்ப, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்த பயிற்சியளிப்பதற்கு திட்டம் ஏதுமில்லை. எனவே சர்வசிக்ஷா அபியான்/மாவட்ட தொடக்கக் கல்வித் திட்ட நிதியிலிருந்து அனைத்து ஆசிரியர்களுக்கும் 3 வருடத்திற்கு ஒருமுறையாவது பயிற்சியளித்து அவர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*இ. ஆய்வு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டாய்வு*

தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளில் கல்வித் துறையிலுள்ள உதவிக் கல்வி அலுவலர்/மாவட்டக் கல்வி அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் பள்ளிக்கூட ஆய்வு போதுமானதாக இல்லை. ஒவ்வோர் ஆண்டும், ஆண்டு முழுவதும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டாய்வு செய்யப்படவேண்டும். உதவி கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஆதிதிராவிடர்

[2002 ஏப்ரல் 11

நலப் பள்ளிகளை ஆய்வு செய்து அவர்களின் ஆய்வறிக்கைகளைப் [illegible] பொறுப்பு ஆதிதிராவிடர் நலத் துறையின் துணை இயக்குநர் (கல்வி) அவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

*ஈ. உயர்கல்வி*

அரசினால் வழங்கப்படும் கடனுதவித் தொகை மானியமாக மாற்றப்படும். இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.5 கோடி ஒதுக்கப்படும்.

**2. விடுதிகள் கட்டுதல்**

ஒவ்வோர் ஆண்டும் மாணவ மாணவியர் விடுதிகளுக்கு சொந்தக்கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகையிலிருந்து 5 அல்லது 6 விடுதிகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்ட முடிகிறது. எனவே, அனைத்து விடுதிகளுக்கும் சொந்தமாக கட்டடங்கள் கட்டி முடிக்க வேண்டுமென இவ்வரசு கருதியுள்ளது. ஆதிதிராவிட மாணவ/மாணவியர்களுக்காக இத்துறையின் கீழ் 1076 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் 501 விடுதிகள் அரசு கட்டடங்களிலும் மீதியுள்ள 575 விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்ற விடுதிகளுக்கு இரண்டு வருட காலத்திற்குள் அரசுக் கட்டடங்கள் கட்டி முடிக்கும் பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 143 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு "ஹட்கோ" (Hudco) நிறுவனத்திடமிருந்து ரூ.31.37 கோடி கடன் பெற்றும், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு கட்டடங்கள் கட்டப்படும்.

**3. இலவச வீட்டுவசதித் திட்டம்**

வீடில்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு வீடு கட்ட சாதாரண நிலப்பகுதிகளில் ரூ.20,000-மும் களிமண் அல்லது மலைப்பாங்கான பகுதிகளில் ரூ.22,000-மும் ஆகிறது. இச்செலவுத் தொகையை மைய அரசும், மாநில அரசும் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்கின்றன. இத்தொகையன்றி மாநில அரசு வீடுகளுக்கு கான்கிரீட் கூரை வேய்ந்துகொள்ள ஒவ்வொரு வீட்டிற்கும்



2002 ஏப்ரல் 11]

ரூ.12,000 மானியமாக தனது நிதியிலிருந்து அளிக்கிறது. நடப்பு ஆண்டில் 31,000 இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இதில் 26,350 வீடுகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்படும்.

**4. குடிநீர் கைப்பம்புகளை மின்விசை பம்புகளாக மாற்றும் திட்டம்**

நடப்பு ஆண்டில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் 10,000 கைப்பம்புகள் பொறுத்தப்பட்ட குடிநீர் ஆதாரங்கள் சிறு மின்விசை பம்ப் குடிநீர் ஆதாரங்களாக சுமார் ரூ.26 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளன. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 4000 கைப் பம்பு குடிநீர் ஆதாரங்கள் ஒதுக்கப்பட்டு அவை சிறு மின் விசை பம்புகளாக மேம்படுத்தப்படும்.

**5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கும் திட்டம்**

நடப்பு ஆண்டில் "பாரத பிரதமர் கிராமோதய யோஜனா" என்னும் திட்டத்தின்கீழ் நீலகிரி, வேலூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் (கொடைக்கானல் பகுதி) ஆகிய இடங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளுக்கு ரூ.29.39 கோடி மதிப்பீட்டில் மின்வசதி அளித்தல் மற்றும் மின் பகிர்மானத்தை மேம்படுத்துதல் ஆகிய வசதிகள் செய்து தரப்படும்.

**6. ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்**

ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக கீழ்க்கண்டவாறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இலக்குகள் எய்தப்படும்:

அ. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஆதிதிராவிட குடும்பங்களை 7 விழுக்காட்டிற்குக் கீழே கொண்டு வருவது மற்றும் ஆதிதிராவிடர்களுக்கும் மற்ற இனத்தவருக்கும் இடையிலான இடைவெளியை அகற்றுதல்.

ஆ. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுய உதவித் திட்டம் மூலமாக குறைந்தபட்சம் 1.5 லட்சம் ஆதிதிராவிட கிராம பெண்களின் திறன் மற்றும் ஆற்றலைக் கட்டிக் காப்பதுடன் அவர்களை ஒருங்கிணைத்தல்.

இ. குறைந்தபட்சம் 50,000 படித்த இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த புத்தறிவுப் பயிற்சிகள் வழங்குதல்.

[2002 ஏப்ரல் 11

ஈ. ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர் திறமையை ஊக்குவிப்பது மற்றும் தொழிற்கூடங்கள் நிறுவுவதில் அவர்களின் பங்கை உயர்த்துவது.

7. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் அரசியலமைப்புச் சட்டரீதியான பாதுகாப்பு**

அ. குடியுரிமைகள் பாதுகாப்பு மற்றும் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டங்களைச் செயற்படுத்துதல்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுப்பதற்காக கூடுதல் காவல் துறை இயக்குநர் (சமூகநீதி) அவர்கள் தலைமையின்கீழ் காவல் துறைத் தலைவர் மேற்பார்வையில் மனித உரிமைகள்/சமூக நீதி குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. மாவட்டங்களில் 7 காவல் சரகங்களில் 7 துணை காவல் கண்காணிப்பாளர்களும் மற்றும் 34 காவல் ஆய்வாளர்களும் பணியாற்றுகின்றனர். மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. இக்குழு வன்கொடுமைச் சட்டங்கள் இம்மாநிலத்தில் செம்மையாக செயற்படுத்தப்படுவது குறித்து ஆய்வு செய்கிறது.

மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான விழிப்பு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நடப்பிலுள்ள பணிகள், பாதிக்கப்பட்டோர் மற்றும் அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கு தீருதவி வழங்கல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகிய பணிகள் இக்குழுவின் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன.

மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படுகிறது. இக்குழு தீண்டாமை பழக்கத்தை அகற்றுவதின் அவசியத்தைக் குறித்தும் தீவிரமாக பரிசீலனை செய்கிறது. இம்மாநிலத்தில் நடக்கும் வன்கொடுமைகளைத் தீவிரமாக ஆய்வு செய்ததில், இவை பொருளாதார நிலைமையின் காரணமாக நடைபெறுவதாக அறியவருகிறது. தீண்டாமை அதிகமாகக் காணப்படும் இடங்களைக் கண்டறிந்து அவ்விடங்களில் இனக்கலவரம் ஏற்படாமல் தடுக்கவும், இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டோருக்கு தக்க



2002 ஏப்ரல் 11]

தருணங்களில் நடவடிக்கை மேற்கொண்டு தீருதவிகளை வழங்குவதற்கும் மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**ஆ. இடஒதுக்கீடு**

அரசு ஆணை (நிலை) எண் 44, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 20-5-1998-ஐ மீண்டும் செயல்படுத்த உரிய ஆணையும் அறிவுரைகளும் அரசாணை எண் 91, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 28-11-2001 மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதன்பொருட்டு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் ஆதிதிராவிடர் நலத் துறைச் செயலரை கூட்டுநராகவும், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை செயலர், சட்டத் துறை செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறை செயலர் ஆகியோரை உறுப்பினர்களாகவும கொண்டு ஒரு உயர்மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

8. **கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு**

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதில் தமிழக அரசு ஆர்வத்துடன் அதிக முக்கியத்துவம் செலுத்தி செயல்பட்டு வருகிறது. கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகிய பொறுப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இது தொடர்பாக மாநில அளவில் ஆய்வுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறை எடுத்துள்ள நடவடிக்கைகளை ஆய்வு செய்தபோது, கொத்தடிமைத் தொழிலாளர்கள் என்று கண்டறியப்பட்டு விசாரணை செய்யப்படாத இனங்களிலும், கொத்தடிமையை விடுவித்து மறுவாழ்வு அளிக்க எந்தவிதமான முயற்சியும் எடுக்காத இனங்களிலும், உடனடியாக அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் தலைமைச் செயலாளரிடமிருந்து நேர்முகக் கடிதம் வாயிலாக தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவிப்பதற்கும், மறுவாழ்வு அளிப்பதற்கும் மத்திய அரசு ரூ.8.78 கோடி வழங்கியுள்ளது. 2001-2002ஆம் நிதியாண்டில் கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவிக்கவும், மறுவாழ்வு அளிக்கவும் ரூ.4.20 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மீதித்தொகை இந்நிதியாண்டில் விடுவித்து உரிய உதவிகள் அளிக்கப்படும்.

[2002 ஏப்ரல் 11

**9. சிறப்பு உள்ளடக்கத் திட்டம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காகவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ப திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி செயல்படுத்துவது தொடர்பாகவும் அறிவுரைகள் வழங்க மாநில திட்டக் குழு உறுப்பினர் (ஆதிதிராவிடர் நலம்) தலைமையில் உயர்நிலைக்குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

**10. ஆதிதிராவிடர்கள் கலை மற்றும் இலக்கிய முன்னேற்றம்**

ஆதிதிராவிடர்களுக்கு எதிரான இனக்கலவரங்கள் மற்றும் வன்கொடுமைகளுக்கு அடிப்படைக் காரணம் சமூகத்தில் காணப்படும் பொருளாதார மற்றும் பண்பாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளே ஆகும். அரசின் உறுதியான பொருளாதார மேம்பாடு மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் நல்ல சூழ்நிலையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வி மிக தாமதமாகக் கிடைத்ததால், அவர்களால் கலை மற்றும் இலக்கியத்தில் முத்திரை பதிக்க இயலவில்லை. கல்வியில் 50 வருடகால கடின உழைப்பிற்குப் பிறகுதான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களிலிருந்து அதிகமான எண்ணிக்கையில் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களை இச்சமூகம் உருவாக்கியது. எனவே, அந்நபர்களின் தகுதியை அரசு அங்கீகரிப்பதுடன் அவர்களின் செயல்திறமைகளை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இது சரியான தருணமாகும் என்பதால் இது தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

(அ) ஆதிதிராவிடர்களின் கலைகள், இலக்கியங்கள், கலைஞர்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்கும் மற்றும் வருடத்திற்கு ஒருமுறை கருத்தரங்கம், மற்றும் விழாக்கள் நடத்துவதற்கும் ஓர் ஆராய்ச்சி மையம் அமைப்பது. ஆதிதிராவிடர் மக்களின்பால் அனுசரணையான



2002 ஏப்ரல் 11]

அணுகுமுறையைக் கடைப்பிடிக்க துறை சார்ந்த பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் ஆதிதிராவிடர் மக்களின் வாழ்க்கை மற்றும் கலாச்சாரத்தின் பல்வேறு கூறுகளை அறிய உதவுவது.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கை முறையினை கற்க உதவும் பட்டய மற்றும் அடையாளச் சான்று வழங்குவதற்கு பிரத்யேகமாக பயிற்சிக் கல்லூரி ஒன்று நிறுவுவது. ஆதிதிராவிட ஓவியர்கள் மற்றும் சிற்பிகளின் திறமைகளை வெளிக்கொணரும் விதமாக அவர்கள் சிற்பங்கள் வடிக்கவும், ஓவியங்கள் தீட்டவும் மற்றும் அவற்றை மக்களின் பார்வைக்கு காட்சியாக வைக்கவும் ஏதுவாக மாதிரி கிராமம் ஒன்று அமைக்கப்படும்.

(இ) ஆதிதிராவிட ஆவணக் காப்பகம் அமைத்தல்

பல்வேறுபட்ட வெளியீடுகள்/இதழ்கள்/மருத்துவ இதழ்கள் மற்றும் அயோத்தி தாச பண்டிதர், ரெட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா மற்றும் பிற ஆதிதிராவிட மேதைகளின் படைப்புகளை தொகுப்பதற்கென ஒரு ஆவணக் காப்பகம் அமைக்கப்படும். இந்தப் படைப்புகள், நுண்படச்சுருள்கள் (Micro Films) மற்றும் பதிவு வட்டுகளில் (Compact Discs) பாதுகாக்கப்படும்.

(ஈ) இலக்கியப் படைப்புகளை வெளியிடுவதற்கென தனியாக ஒரு வெளியீட்டு பிரசுரம் அமைக்கப்படும்.

மேற்கண்ட அனைத்தும் அமைக்கவிருக்கிற திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

**11. பழங்குடியினர் நலம்**

தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் தொகை 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 5.74 இலட்சம் ஆகும். இது தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.03 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டில் 36 வகையான பழங்குடியின மக்கள் வாழ்கிறார்கள். பல்வேறு துறைகளின்

நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப பழங்குடியினர் துணைத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. பழங்குடியினர் துணைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிட்டிருக்கிற பழங்குடிகள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகள் கண்டறியப்பட்டு பயன்கள் அவர்களுக்குச் சென்று சேரும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

| வ. எண். | மாவட்டம். | பழங்குடியினர் வசிக்கும் பகுதி |
|---|---|---|
| 1. | நாமக்கல் | கொல்லி மலை |
| 2. | சேலம் | ஏற்காடு மலை |
| 3. | சேலம் | கல்ராயன் மலை |
| 4. | சேலம் | அரநூற்று மலை |
| 5. | சேலம் | பச்சை மலை |
| 6. | திருவண்ணாமலை | ஜவ்வாது மலை |
| 7. | விழுப்புரம் | கல்ராயன் மலை |
| 8. | தருமபுரி | சித்தேரி மலை |
| 9. | திருச்சிராப்பள்ளி | பச்சை மலை |

## 12. பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

மலைவாழ் மக்களின் வளர்ச்சிக்கென பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்த அதாவது வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள பழங்குடியினர் அதனைக் கடந்து முன்னேற்றம் அடைய தகுதியான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதற்கென தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜிகர் யோஜனா, கதர் மற்றும் கிராமத்தொழில், பட்டு வளர்ச்சி, வேளாண் பொறியியல் போன்ற பல துறைத் திட்டங்கள் மூலம் இம்மக்களின் மேம்பாட்டிற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்களை ஒருங்கிணைந்த மலைவாழ் பகுதிகளில் செயல்படுத்தி இதன்மூலம் பழங்குடியின விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்புப் பெட்டிகள், மரக்கன்றுகள்,





பயிர்பாதுகாப்பு மருந்துகள், உரங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுவதோடு அவர்களின் நிலங்களுக்கு மண்வளப் பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது. இத்திட்டங்களின்கீழ் செயல்முறை விளக்கங்களை இம்மக்களுக்கு எடுத்துக்காட்டி அதன்மூலம் அவர்கள் இத்திட்டப் பயன்களின் பயனை முழுமையாகப் பெற வழிகாட்டப்படுகிறார்கள். மேலும், அவர்களுக்குத் தேவையான சிறுகடன்கள் வழங்கப்படுவதற்கும் மற்றும் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயவிலை கிடைக்கப்பெறுவதற்கும் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இம்மலைவாழ் மக்களின் நன்மையைக் கருதி அமைக்கப்பட்டுள்ளன. தற்போது இத்தகைய பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 19 செயல்பட்டு வருகின்றன. இவ்வாறாக பழங்குடியின விவசாயிகள் வறுமைக்கோட்டைத் தாண்டி முன்னேறி வாழ வழிவகை செய்யப்படுகிறது.

பழங்குடி மக்களுக்கு வேண்டிய இயற்கை உரம் மற்றும் இதர உரங்கள் தோட்டக்கலைத் துறை மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. விவசாயத்தை நம்பி வாழும் பழங்குடியின விவசாயிகளின் குடும்பத்திற்கு அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக ஆடுகள், கறவை மாடுகள், கறிக்கோழிகள் ஆகியன வழங்கப்படுகின்றன. கால்நடைகளின் உடல்நலப் பாதுகாப்புக்கு தடுப்பு ஊசி மற்றும் இனப்பெருக்கத்திற்கு செயற்கைமுறை கருவூட்டல் போன்ற உதவிகள் செய்யப்படுகின்றன.

பழங்குடியின விவசாயிகளின் வருமானம் உயருவதற்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பதும் ஒரு திட்டமாகும். இதற்காக சிறுபாசனத் திட்டங்களான தடுப்பு அணைகள் மற்றும் வடிகட்டிக் குளங்கள் ஆகியவை கட்ட முன்னுரிமை வழங்கப்படுகிறது. இப்பணிகளுக்கான இடங்கள் தெரிவு செய்யும்போது பயனாளிகளில் 75 விழுக்காடு பழங்குடியினர்களா என்று பார்க்கப்படும். அதுபோல் மண்வளப் பாதுகாப்பிற்கு வேளாண் பொறியியல் துறையும் பழங்குடியினருக்கு உதவுகிறது. பட்டுப்புழு வளர்ப்பு பழங்குடியினருக்கு அதிகமாக வேலைவாய்ப்பு வழங்குவதுடன் வருமானத்தையும் பெருக்குகிறது. அதுபோல், கிராம தொழிலகங்கள் தேனீ வளர்ப்பதில் பயிற்சி அளிக்கின்றன. பழங்குடியினருடைய பொருளாதார வளர்ச்சிக்காக விதைகள், விதை நாற்றுகள், உரங்கள், இரசாயனப் பொருட்கள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன. பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவியும்

அளிக்கப்படுகின்றது. பழங்குடியினர் குடும்பங்களுக்கு தேனீ பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 245 அரசு உண்டி உறைவிடப் பள்ளிகள் பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் பயன்பெறும் பழங்குடியின மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை 30,931 ஆகும். 26 பழங்குடியின மாணவ/மாணவியர் விடுதிகள் நடத்தப்படுகின்றன. அடிப்படை வசதிகளான குடிநீர், தெரு விளக்கு, ஆரம்ப சுகாதார நிலையங்கள், சாலை ஆகியவை பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளுக்கு அளிக்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பை நாடுகின்ற மலைவாழ் மக்களுக்காக உதகமண்டலம், சங்கராபுரம், கொல்லி மலை மற்றும் ஜவ்வாது மலை ஆகிய நான்கு இடங்களில் வேலைவாய்ப்பு வழிகாட்டு மையங்கள் செயல்படுகின்றன. மேலும், விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் சிறிய அளவிலான ஒரு தொழிற்கல்வி பயிற்சி நிலையம் 80 நபர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. பழங்குடியின மக்களில் தொழில் முனைவோர்க்கு அவர்கள் விரும்புகிற தொழில் சார்ந்த கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன. மருத்துவர்கள், பொறியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், ஓட்டுநர்கள், இயந்திரவியலர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் இதுபோன்ற தொழில்/வியாபாரம் செய்பவர்கள் ஆகியோர் இத் திட்டத்தில் அடங்குவர். பழங்குடியினருக்கான தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் செயல்படுத்துவதில் நடைமுறையில் பல சிக்கல்கள் இருந்ததினால் தற்பொழுது பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின் (FASTED) கீழ் தகுதியுள்ள பழங்குடியினருக்கு ரூ.6,000 முதல் (இதற்கு முன் ரூ.50,000/- என்றிருந்தது) ரூ.7.50 இலட்சம் வரை கடன் வழங்கப்பட உள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 275(1)-ன்கீழ் மைய அரசு வழங்கும் நிதியின் மூலம் தமிழ்நாட்டிற்கு இரண்டு முன்மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்த மைய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவைகளில் ஒன்றை விழுப்புரம் மாவட்டம், வெள்ளி மலையில் ஏற்படுத்திடவும், அதற்கான கட்டுமானப் பணிக்காக மைய அரசு ரூ. 1 கோடி நிதியை விடுவித்துள்ளது. இந்த முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி வெள்ளிமலையில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பள்ளிக்குரிய கட்டடங்கள் கட்டும் பணி தாட்கோ நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்றொரு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி சேலம் மாவட்டம், கருமந்துறையில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பண்டைய பழங்குடியினர் மற்றும் பரவி வாழும்





பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்குதல், வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஆகியன செயல்படுத்தப்படுகின்றன. இத் திட்டங்களுடன் ஒவ்வோர் ஆண்டும் மின் வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றிற்காகவும் நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதியைக் கொண்டு பழங்குடியினர் வசிக்கும் குக்கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக இவ்வசதிகள் தேவைப்படும் கிராமங்களுக்கு செய்து தரப்படுகிறது.

மாநில திட்டம் (State Plan) மைய அரசு திட்டம் (Centrally Sponsored Scheme) மற்றும் சிறப்பு மைய உதவி (Special Central Assistance) ஆகியவை பல்வேறு நிதி ஆதாரங்கள் ஆகும். இவற்றை ஒருங்கிணைத்து பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்கள் தீட்டி அமல்படுத்தப்படுகிறது. மைய அரசால் வழங்கப்படும் சிறப்பு மைய உதவி பழங்குடியினரின் பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் ஒன்று நீலகிரியில் 1984-85-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக பழங்குடியினர் குறித்த ஆராய்ச்சி, பழங்குடியினருக்கான பயிற்சி அளித்தல், பழங்குடியினருக்கான திட்டத்தை ஆய்வு செய்தல் போன்ற செயல்பாடுகளை இந்த மையம் மேற்கொள்கிறது. இதற்கான செலவினத்தை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்கின்றன.

தோடா, கோட்டா, குரும்பா, இருளர், பனியா, காட்டுநாய்க்கன் ஆகிய பழங்குடியினர் பண்டைய பழங்குடிகள் ஆவர். அவர்களின் எண்ணிக்கை சுமார் 1.58 இலட்சம் ஆகும். அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக ஆடுகளும், கறவை மாடுகளும் இலவசமாக அளிக்கப்படுவதுடன் இலவசமாக வீடுகளும் கட்டித் தரப்படுகின்றன. ஒருங்கிணைந்த பழங்குடிகள் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளுக்கு வெளியே வாழ்கின்ற பண்டைய பழங்குடிகளாக கருதப்படாத பரவி வாழ்கின்ற இதர பழங்குடி மக்களுக்கும் ஆடுகள், கறவை மாடுகள் மற்றும் வீடுகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

**13. பழங்குடியினர் துணைத் திட்டம்**

2001-2002-ஆம் ஆண்டிற்கு ரூ.72.95 கோடி அளவுக்கு பழங்குடியினர் துணைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. மின் வசதி, குடிநீர் வசதி, பரவி

[2002 ஏப்ரல் 11

வாழும் பழங்குடியினருக்கான முன்னேற்றத் திட்டங்கள், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வீட்டுவசதி மற்றும் கூட்டுறவுத் துறை மூலம் திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட்டன. பழங்குடியினர் மேம்பாட்டிற்கு கீழ்க்குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை படிப்படியாக அடைய இயலும்:

கல்வியின் தரத்தை உயர்த்துதல், உள்ளமைப்புகளை பலப்படுத்துதல், குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் அமைத்தல், செயல்திறன் பயிற்சி (skilled training) வழங்குதல், இலவச வீடுகள் வழங்குதல் ஆகிய பழங்குடியினர் துணைத் திட்டம் கீழ்க் குறிப்பிடப்பட்ட நிதி ஆதாரங்களை உள்ளடக்கியதாகும்:—

அ. மைய அரசு வழங்கும் நிதி மற்றும் மைய அரசு தொடங்கிய திட்டங்கள்

ஆ. மாநில அரசிடமிருந்து பெறப்படும் நிதி

இ. மைய அரசின் சிறப்பு நிதியுதவி மூலம் பெறப்படும் நிதி.

பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான நிதியானது பழங்குடியினர் மக்கள் தொகை விகிதபபடி அவர்களின் உடல்நலம், கல்வி மற்றும் பிற அடிப்படை வசதிகள் ஆகிய தேவைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

**14. பழங்குடியினர் மேம்பாட்டிற்கான நோக்கங்கள், குறிக்கோள்கள், வினைமுறைத் திறன்கள் மற்றும் உந்துகை பகுதிகள் (Thrust areas)**

பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய உந்துகை பகுதிகள் பின்வருமாறு:—

அ. உள்ளமைப்பு மேம்பாடு

பழங்குடியினர் குடியிருப்புகள் பிற மக்களுடன் சேர்ந்து வாழும் வகையில் இன்னும் கொண்டுவரப்படவில்லை. எனவே நாட்டிலுள்ள பிற மக்களுடன் சேர்ந்து வாழும் உரிய உள்ளமைப்பு வசதிகள் செய்து தரப்படும். இதனால் சமூக பொருளாதார நிலைமை மேம்பாடு அடையும். பழங்குடியினர் துணைத் திட்டம்/மைய அரசு வழங்கும் நிதி இதற்கு நிதி ஆதாரமாக அமையும்.



2002 ஏப்ரல் 11]

ஆ. நில மேம்பாட்டுப் பணிகள்

பெரும்பான்மையான பழங்குடியினர் சிறிய, நடுத்தர விவசாயிகளும், வேளாண்மைக் கூலிகளும் ஆவர். அவர்களின் வருவாய் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே நிலங்களை ஒருங்கிணைத்தல், நிலமில்லாதவர்க்கு நிலம் வழங்குதல் மூலம் சிறிய மற்றும் நடுத்தர பழங்குடியின விவசாயிகள் நீர்பிரி முகடு மேலாண்மை மூலம் மேம்பாடு அடைய நில மேம்பாடுகள் செய்யப்படும். உணவு மற்றும் அருகி வரும் தொன்மையான பயிர்களை மையமாகக் கொண்டு முதலீடு செய்தல் தற்சமயம் தேவைப்படுகிறது.

இ. வருவாய் உருவாக்கும் நடவடிக்கை

பகுதி மேம்பாடு திட்டங்கள் மற்றும் பயனாளிகளை மேம்படுத்தும் திட்டங்கள் என இரு வகைத் திட்டங்களைக் கொண்டதாகும் பழங்குடியினர் துணைத் திட்டம். இந்த ஆண்டு பழங்குடியினர் துணைத் திட்டம் மற்றும் மைய அரசின் சிறப்பு நிதியுதவி மூலம் 1,000 மலைவாழ் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளடங்கிய 10,000 மகளிர் பயனாளிகளுக்கு வருவாய் உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

ஈ. மக்கள் நலம் மற்றும் அடிப்படை சுகாதாரம்

பழங்குடியினர் மந்திரதந்திரம் உள்ளடங்கிய ஓர் உறுதியான உடல் நலம் பேணும் முறையை உருவாக்கியுள்ளனர். மேலும், அவர்கள் தங்களுடைய தனி வழியிலேயே வாழ்க்கையை அமைத்துக்கொள்ள விரும்புகின்றனர். அவர்கள் பாரம்பரியமாகக் கொண்டுள்ள நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், நடைமுறை செயல்பாடுகள் மற்றும் அவர்கள் வாழும் இடத்தில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு உடல் நலத்திற்கு தீங்கு பயக்கும் வியாதிகளுக்குத் தீர்வுகண்டு வருகின்றனர். இவ்வாறு பாரம்பரியமாக உடல்நலம் பேணும் அவர்களின் முறையோடு, நவீன முறைகளுக்கான அறிவையும், திறமையையும் துறை விற்பன்னர்களின் உதவியோடு இணைத்து செயல்படுத்தப்படும். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத் திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பண்டைய பழங்குடியினர்களிடமிருந்து தன்னார்வலர்களுடைய குழுவினை உருவாக்கி அவர்களுக்குத் தேவையான திறமையை வளர்க்க தொடர்ந்து பயிற்சியும் வழங்கி வருகிறது. மருந்துகள், மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்களடங்கிய பெட்டிகளும்

[2002 ஏப்ரல்

வழங்கப்படுகின்றன. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில் பரிந்துரையின்படி ரூ.50 இலட்சம் கொண்ட ஒரு தொகுப்பு நிதி நடப்பு நிதியாண்டிலிருந்து மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்சொன்ன மூன்று மாவட்டங்களுக்கு வழங்கப்படும் இந்நிதி பண்டைய பழங்குடியினரின் அவசரத் தேவைகளை நிறைவேற்ற மாவட்ட சுகாதார நல அலுவலர்களுக்குப் பேருதவியாக அமையும்.

**15. தாட்கோ**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (THADCO) 1974-ல் தொடங்கப்பட்டது முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தாட்கோவின் தொழில்நுட்பப் பிரிவு ஆதிதிராவிடர் நலத் துறைக்கென பள்ளிகள், விடுதிகள், சமுதாயக் கூடங்கள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள் மற்றும் உள்ளமைப்பு சம்பந்தமான பல்வேறு கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றது. தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு அரசு கட்டடங்கள் கட்டித்தர ஒரு சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஹட்கோ கடன் உதவியுடன் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 143 விடுதிகளுக்கு அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் அரசு கட்டடங்கள் கட்ட செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

விடுதிகளுக்குத் தேவையான அறைகலன்கள் (Furnitures), மின் விசிறிகள் மற்றும் பெரிய அளவிலான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் போன்ற இனங்களுக்காக மைய அரசின் சிறப்பு மைய நிதியிலிருந்து தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தாட்கோவின் "வளர்ச்சிப் பிரிவு" ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தனிநபர்களை மையமாகக் கொண்டு அவர்களுக்கான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

வறுமையைப் போக்கும் விதமாக, மகளிர் சுய உதவிக் குழுக்களை முன்னிலைப்படுத்தி சிறு தொழில்களை (Micro Enterprises) ஊக்கப்படுத்தும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். 2002-2003 நிதியாண்டில் 30,000 ஆதிதிராவிடர் மகளிர் பயனடையும் வகையில் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்குத் தேவையான தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் குறிப்பிட்ட தொழில்களில்



2002 ஏப்ரல் 11]

சிறப்புத் தொழிற்பயிற்சி போன்றவை வழங்கப்படும். சுய உதவிக் குழுக்களுக்கு எளிதாக கடன் மற்றும் மானிய உதவிகள் வழங்குவதற்கென விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

பழங்குடியினரின் தனித்தன்மையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கென புதியதாக பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் (FASTED) தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென பருவக்கடன் (Term Loan), தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (NSTFDC) மூலம் பெற்று வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைக் கண்காணிக்கவும், செயல்படுத்தவும் தாட்கோவில் சிறப்புப் பிரிவு அமைக்கப்பட உள்ளது.

கடந்த ஆண்டுகளில் செயல்படுத்திய பயிற்சித் திட்டங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட வகையில் வேலைவாய்ப்பினை உருவாக்கித் தரக்கூடிய திறன் கொண்ட மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் இப்பயிற்சித் திட்டங்களுக்கென அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் பெரும்பாலோர் நிலமற்றவர்களாகவும், வேலைவாய்ப்பின்றியும் சிரமப்படுபவர்களாக இருப்பதால் அவர்களின் முன்னேற்றத்திற்கென நிலம் வாங்கி வழங்கும் புதிய திட்டம் இந்த வருடத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் நிலமற்றோர் நிலம் வாங்க நிதியுதவி செய்யப்பட உள்ளது. ஆதிதிராவிடர்/பழங்குடியின சிறு மற்றும் குறு விவசாயிகளின் பாசன வசதிக்காக கிணறு மற்றும் குழாய்க் கிணறுகள் நிறுவ கடனுதவி வழங்க சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

கடந்த ஆண்டு செயல்பாடுகளிலிருந்து மாறுபடும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் தேவையின் அடிப்படையில் அந்தந்த மாவட்டங்களுக்கு ஏற்ற திட்டங்கள் அடங்கிய மாவட்ட திட்டம் அந்தந்த மாவட்ட ஆட்சியர் மூலம் உருவாக்கப்பட உள்ளது. மேலும், இத்திட்டத்தின் செயலாக்கத்திற்கென சிறப்பு மைய நிதியுதவியின் ஒரு பகுதி மாவட்ட ஆட்சியர்கள் வசம் வழங்கப்படவுள்ளது.

தாட்கோ திட்ட செயலாக்க முறையினைச் செம்மைப்படுத்தும் வகையில் தாட்கோ தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட

அலுவலகங்களும் முழுமையாக கணினிமயமாக்கப்பட உள்ளன. இதன் மூலம் திட்ட செயல்பாடுகள் வெளிப்படையான அணுகுமுறையில் அமைவதோடு திட்டங்களைக் கண்காணிப்பதில் சிறந்த முன்னேற்றம் ஏற்படும். இத்திட்டங்கள் முழுமையாக ஆதிதிராவிடர்/பழங்குடியின மக்களைச் சென்றடையுமாறு செய்தல், மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளல் போன்றவற்றுடன் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த பணியாளர்களின் அணுகுமுறை மற்றும் மேம்பட்ட ஈடுபாட்டிற்காக தொடர் பயிற்சிகள் வழங்குதல் ஆகியன இந்த நிதியர்ண்டில் தாட்கோவின் பிரதான அம்சங்களாக அமையும்.

*****

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224371
சென்னை-600 008